**கவனிக்க.-** *2010.07.30 ஆந் திகதிய வர்த்தமானியின் பகுதி II மற்றும் பகுதி IV(அ) ஆகியன பிரசுரிக்கப்படவில்லை.*

# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

**අංක 1666 - 2010 අගෝස්තු මස 06 වැනි සිකුරාදා - 2010.08.06**

*1666 ஆம் இலக்கம் - 2010 ஆம் ஆண்டு ஓகத்து மாதம் 06 ஆந் திகதி வெள்ளிக்கிழமை*

*(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)*

## பகுதி I : தொகுதி (I) - பொது

(ஒவ்வொரு மொழியின் ஒவ்வொரு பகுதியும் வெவ்வேறாக கோவை செய்து வைப்பதற்காகத் தனித்தனிப் பக்கங்கள் தரப்பட்டுள்ளன.)


| | பக்கம் |
|---|---|
| சனாதிபதியின் பிரகடனங்களும் பிறவும் | - |
| சனாதிபதியின் நியமனங்களும் பிறவும் | 1470 |
| அமைச்சரவையின் நியமனங்களும் பிறவும் | - |
| அரசாங்க ஆணைக்குழுவின் நியமனங்களும் பிறவும் | - |
| நீதிச்சேவை ஆணைக்குழுவின் நியமனங்களும் பிறவும் | - |
| மற்றைய நியமனங்களும் பிறவும் | - |
| பதிவாளர் நியமனங்களும் பிறவும் | - |
| அரசாங்க அறிவித்தல்கள் | 1470 |
| விலைக் கட்டளைகள் | - |
| இலங்கை மத்திய வங்கியின் அறிவித்தல்கள் | - |
| இலங்கை அரசாங்க கணக்கு விபரங்கள் | - |
| வரவு செலவுத் திரட்டுக்கள் | - |
| அரசாங்கப் பகுதிகளின் நானாவித அறிவித்தல்கள் | 1473 |
| மாலுமிகளுக்கு அறிவித்தல்கள் | - |
| மதுவரிக் கட்டளைச் சட்ட அறிவித்தல்கள் | - |


**வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிப்பதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளல் சம்பந்தமான**

### முக்கிய அறிவித்தல்கள்

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளின் இறுதியில், ஒவ்வொரு மாதத்தின் முதல் வாரத்தில், வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளில் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியும் நேரமும் சம்பந்தமான அறிவித்தல்களுக்கு கவனம் கோரப்படுகின்றது.

வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் தினம் அவை **வர்த்தமானியில் அறிவித்தல் பிரசுரமாகும் திகதிக்கு இரண்டு வாரங்களுக்கு முந்திய வெள்ளிக்கிழமை - நண்பகல் 12.00 மணியாகும்.** இறுதித் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்களான, பதவி-வெற்றிடங்கள் மற்றும் பரீட்சைகளுக்கான விண்ணப்பம் கோரும் அறிவித்தல்கள், கேள்விப்பத்திர அறிவித்தல்கள் அத்துடன் ஏல விற்பனைத் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்கள் என்பன அவ்வவ் அறிவித்தல்களில் உள்ள விடயங்களில் அக்கறை செலுத்துவோர் ஆக்கபூர்வமாக பயனுறும் வகையில் அவை பிரசுரிக்கப்படுவதற்காக அரசாங்க அச்சகத்துக்கு அனுப்பிவைக்கப்படும் திகதியிலிருந்தும் அத்துடன் அவை பிரசுரமாகும் திகதியிலிருந்தும் போதிய கால அவகாசம் கொண்டதாக தயாரிக்கப்பட்டு அனுப்பிவைக்கப்பட வேண்டும் என சகல அரசாங்க திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள், சபைகள் ஆகியன அறிவுறுத்தப்படுகின்றன. அறிவித்தல்கள் தொடர்பிலான பிழைதிருத்தங்கள் சம்பந்தமாக செய்யப்படும் முறைப்பாடுகள் மற்றும் விசாரணைகள் என்பன வர்த்தமானியில் குறிப்பிட்ட அறிவித்தல்கள் பிரசுரமாகிய திகதியிலிருந்து மூன்று மாதங்கள் கழிந்த பின்னர் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா என்பதனை கவனத்திற்கொள்ளவும்.

வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரமாகும் சகல அறிவித்தல்களும், அவை பிரசுரமாகும் திகதிக்கு **இரண்டு வாரங்களுக்கு முன்னர்**, அதாவது 2010, ஒகத்து மாதம் 13 ஆந் திகதி வெள்ளிக்கிழமை பிரசுரிக்கப்படவேண்டிய அறிவித்தல்கள் 2010, யூலை மாதம் 30 ஆந் திகதி நண்பகல் 12.00 மணிக்கு அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு தபால் மூலம் அல்லது நேரில் சேர்ப்பிக்கப்பட வேண்டும்.

**லக்ஷ்மன் குணவர்தன,**
*அரசாங்க அழுத்தகர்.*

*அரசாங்க அச்சுத் திணைக்களம்,*
*கொழும்பு 8,*
*2010 ஆம் வருடம் சனவரி மாதம் 01 ஆந் திகதி.*

# சனாதிபதியின் நியமனங்களும் பிறவும்

*2002 இன் இல. 109*

*டீஐஆர்எப்/ஆர்ஈசீரி/265/ஏவை.*

**இலங்கை தரைப்படை - நிரந்தரப் படை**

அதியுத்தமராம் சனாதிபதி அவர்களால் அங்கீகரிக்கப்பட்ட அதிகாரவாணைக்கு நியமனம் செய்தல்

பின்வரும் பெயருடைய திருவாளர் 2009.10.15 ஆந் திகதி முதல் இலங்கைத் தரைப்படையின் நிரந்தரப்படையின் லெப்டினன்ட் கர்னல், வரிசைப் பதவியில் அதிகாரவாணைக்கு நியமனம் செய்தலும் அத்திகதி முதல் இலங்கைத் தரைப்படையின் மருத்துவச் சிறப்பணிக்கு உள்ளடக்குதலை அங்கீகரிப்பதில் அதியுத்தமராம் சனாதிபதி அவர்களால் அங்கீகரிக்கப்பட்டுள்ளது :-

திரு. களுதந்திரிகே தொன் துமிந்த

அதியுத்தமனாரின் ஆணைப்படி,

கோடாபய ராஜபக்ஷ,
ஆர்டப்பீ, ஆர்எஸ்பீ, பீஎஸ்சீ,
செயலாளர்,
பாதுகாப்பு அமைச்சு.

கொழும்பு,
2010, யூலை 13.

8-55

*2002 இன் இல. 110*

*டீஐஆர்எப்/ஆர்ஈசீரி/88(vii)/ஏவை.*

**இலங்கை தரைப்படை - நிரந்தரப் படை**

அதியுத்தமராம் சனாதிபதி அவர்களால் அங்கீகரிக்கப்பட்ட அதிகாரவாணைக்கு நியமனம் செய்தல்

பின்வரும் கெடற் உத்தியோகத்தர்கள்/உத்தியோகத்தரிகள் 2009, செத்தெம்பர் மாதம் 28 ஆந் திகதி முதல் இலங்கைத் தரைப்படையின் நிரந்தரப் படையில் இரண்டாம் லெப்டினனட் வரிசைப் பதவியில் அதிகாரவாணைக்கு நியமனம் செய்தலும் அத்திகதி முதல் இலங்கைத் தரைப் படையின் எந்திரிகள் சேவையணிக்கு உள்ளடக்குதலை அங்கீகரிப்பதில் அதியுத்தமராம் சனாதிபதி அவர்களால் அங்கீகரிக்கப்பட்டுள்ளது :-

சி/56758 கெடெற் உத்தியோகத்தர் மீகஸ்வத்தே திசாநாயக முதியான்சேலாகே சிரான் பண்டார மீகஸ்வத்தே
சி/56775 கெடெற் உத்தியோகத்தர் சோமரத்ன விதான ஆரச்சிகே தோன ருவினி ருக்மல் பெரேரா

அதியுத்தமனாரின் ஆணைப்படி,

கோடாபய ராஜபக்ஷ,
ஆர்டப்பீ, ஆர்எஸ்பீ, பீஎஸ்சீ,
செயலாளர்,
பாதுகாப்பு அமைச்சு.

கொழும்பு,
2010, யூலை 13.

8-143

# அரசாங்க அறிவித்தல்கள்

**பினற மகா உற்சவம் பெரஹரா - மாத்தறை**

தென் மாகாணத்தின், மாத்தறை மாவட்டத்தில் நடைபெற்றுவரும் 2009 ஆம் ஆண்டின் பொஸொன் பெரஹரா 2010 ஆம் ஆண்டு புரட்டாதி மாதம் 22 ஆந் திகதி நடைபெறும் என பயண யாத்திரிகள் கட்டளைச் சட்டத்தின் கீழ் 175 ஆம் அத்தியாயம் 1959, நவெம்பர் 20 ஆந் திகதி வழங்கப்பட்ட 11959 ஆம் இலக்கம் கொண்ட அரசாங்க வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்ட கட்டளைகளின் 10 ஆம் பிரிவின் கீழ் அறியத்தருகின்றேன்.

துசித பி. வணிகசிங்ஹ,
பிரதேசச் செயலாளர்,
மாத்தறை.

மாத்தறை பிரதேச அலுவலகம்,
2010.07.19.

8-66

---

**யாத்திரிகள் கட்டளைச் சட்டம்**

மாத்தறை மாதா தேவலயம் உற்சவம்

மாத்தறை மாவட்ட மாத்தறை பிரதேச செயலாளர் பிரிவில் அமைந்துள்ள மாத்தறை மாதா தேவாலயத்தின் 2008 ஆம் ஆண்டிற்கான வருடாந்த உற்சவம் 2010 ஆம் ஆண்டு செத்தெம்பர் மாதம் 10 ஆந்திகதி முதல் 12 ஆந் திகதி வரை நடைபெற உள்ளது என்பதை யாத்திரிகள் கட்டளைச் சட்டத்தின் கீழ் தயாரிக்கப்பட்ட 687 ஆம் இலக்கம் கொண்ட 175 இன் கீழ் அதிகாரம் 1991 ஆம் ஆண்டு நவெம்பர் மாதம் 01 ஆந் திகதியன்று இலங்கைச் சனநாயக சோசலிச சட்டத்தின் பிரகாரம் இத்தால் அறியத்தருகிறேன்.

துசித பி. வணிகசிங்ஹ,
பிரதேசச் செயலாளர்,
மாத்தறை.

மாத்தறை பிரதேச அலுவலகம்,
2010.07.19.

8-68

---

*இலக்கம் 1.*

**புண்ணிய ஸ்தல யாத்திரைகள் கட்டளைச் சட்டம் (175 ஆம் அதிகாரம்)**

ஊவ வெல்லஸ்ஸ, கொட்டபோவ குடா கதிர்காம ஆலயத்தின் வருடாந்த எசல உற்சவம் - 2010

ஊவ வெல்லஸ்ஸ, கொட்டபோவ குடா கதிர்காம ஆலயத்தின் 2010 ஆம் ஆண்டுக்கான எசல உற்சவம் 2010, ஓகத்து 10 ஆந் திகதி

கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி 2010, ஓகத்து 25 ஆந் திகதி அதிகாலை நீர்வெட்டும் வைபவத்துடன் நிறைவு பெறும் என்பதை இத்தால் பொது மக்களுக்கு அறிவிக்கிறேன்.

02. புண்ணிய ஸ்தல யாத்திரைகள் கட்டளைச் சட்டத்தின் படி 1964, யூலை 24 ஆந் திகதிய இலக்கம் 14117 கொண்ட இலங்கை வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்ட நிபந்தனைகள் இவ்வுற்சவ காலங்களில் அமுலில் இருக்கும் என்பதை மக்களின் கவனத்திற்கு கொண்டு வருகிறேன்.

யூ. கே. எஸ். மிகிதுகுலசூரிய,
மொணறாகலை மாவட்டச் செயலாளர்,
ஊவ வெல்லஸ்ஸ, கொட்டபோவ குடா
கதிர்காம ஆலயத்தின் எசல உற்சவ
முகாம் பொறுப்பாளர்.

மாவட்டச் செயலாளர் அலுவலகம்,
மொணறாகலை,
2010 யூலை 19.

இலக்கம் 2.

**ஊவ வெல்லஸ்ஸ, கொட்டபோவ குடா கதிர்காம ஆலயத்தின் வருடாந்த எசல உற்சவம் - 2010**

1964, யூலை 24 ஆந் திகதிய 14117 ஆம் இலக்கத்தைக் கொண்ட இலங்கை அரச வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்ட புண்ணிய ஸ்தல யாத்திரை பற்றிய நிபந்தனைகளை மக்களின் கவனத்திற்கு இத்தால் கொண்டு வருகிறேன். அந்த நிபந்தனைகளையும் அவைகள் தொடர்பான கீழ்க்காணும் அறிவித்தலையும் தருகிறேன்.

1. **முகாம் பிரதேசம்**.-கொட்டபோவெ ''தஹமல் ஒய'' எனும் பெயரைக் கொண்ட முன்னைய இறங்கு துறையிலிருந்து குறுக்களவாக அரை மைலுக்குட்பட்ட பிரதேசம்.

2. **கட்டிடங்கள் அமைத்தல்**.-எனது அல்லது எனது அதிகாரத்தை பெற்ற அதிகாரியின் கடித மூலமான அனுமதியின்றி எவரும் 2010, ஓகத்து 10 திகதியிலிருந்து 2010, ஓகத்து 25 ஆந் திகதி வரையிலான காலப்பகுதியில் இம் முகாம் பகுதியில் எவ்வித நிரந்தர அல்லது தற்காலிக கட்டிடங்களை அல்லது கடைகளை அமைக்கக்கூடாது.

3. **பிச்சைக்காரர்கள்**.-புனித பிரதேசத்திலோ அல்லது முகாம் பகுதிகளிலோ மற்ற எந்த இடத்திலோ பிச்சை கேட்பது, வாங்குவது, அதேபோல் பிச்சை கொடுப்பது, பகிர்வது தடை செய்யப்பட்டுள்ளது.

4. **குளித்தல், கழுவுதல்**.-கொட்டபோவ ''தஹமல் ஒய'' எனும் பெயரைக் கொண்ட முன்னைய இறங்கு துறையிலிருந்து குறுக்களவாக அரை மைலுக்குட்பட்ட பிரதேசத்தில் எவரும் குளிப்பதும் துணிகளை கழுவுவதும் மிருகங்களை குளிப்பாட்டுவதும் அல்லது வாகனங்களை கழுவுவதும் தடை செய்யப்பட்டுள்ளது.

5. **வாகனங்கள்**:

5.1 என்னிடம் அல்லது எனது அதிகாரத்தை பெற்ற ஒரு அதிகாரியிடம் அனுமதிபெறாத பைசிக்களோ, மாட்டு வண்டியோ அல்லது எவ்வகையிலான வாகனமோ புனித பிரதேசத்துக்குள் செலுத்துவதோ, உட்பிரவேசிப்பதோ கூடாது.

5.2 முகாமுக்கு சொந்தமான கடைப்பகுதியில் வாகனத்தை நிறுத்துவதற்கு ஒதுக்கப்பட்டுள்ள வாகன தரிப்பிடங்களை தவிர வேறு இடங்களில் வாகனங்களை நிறுத்தக்கூடாது.

6. **காவடிக் கடைகள்**.-என்னிடம் அல்லது எனது அதிகாரத்தைப் பெற்ற ஒரு அதிகாரியிடம் பெற்ற அனுமதிப் பத்திரத்தைப் பெறாத எவரும் காவடி கடை நிறுவக்கூடாது.

7. **வியாபாரம்** :

7.1 என்னிடம் அல்லது எனது அதிகாரத்தை பெற்ற ஒரு அதிகாரியிடம் பெற்ற எழுத்து மூல அனுமதியின்றி முகாம் திடலில் கடைகளை குத்தகைக்கு கொடுப்பதும் ஏலம் விடுவதும் கூடாது. அல்லது என்னிடம் அல்லது எனது அதிகாரத்தை பெற்ற ஒரு அதிகாரியிடம் இப்பிரதேசத்தில் குறிப்பிடாத இடத்திலும் அவ்வாறான காரியத்தில் எவரும் ஈடுபடக்கூடாது.

7.2. புனித பிரதேசத்திலுள்ள பாதசாரிகளின் பாலங்களை அல்லது முகாம் பகுதியிலுள்ள ஆற்றங்கரைகளை முறைகேடான விதத்தில் ஆக்கிரமிப்பதுபோல் கூடாரங்கள் அல்லது கட்டிடங்கள் அமைப்பது அல்லது அவைகளை விஸ்தரிப்பது கூடாது.

7.3 என்னிடம் அல்லது எனது அதிகாரத்தை பெற்ற ஒரு அதிகாரியிடம் பெற்ற அனுமதியின் கீழ் பெற்றுக்கொண்ட இடத்தை விட்டு வேறு இடத்தில் திருநீறு, ஐஸ்கிறீம், பூசை பொருட்கள், பூசை தட்டுகள், உணவு வகைகள் மற்றும் ஏனையவைகள் விற்கக்கூடாது.

7.4 ஏதேனும் ஒரு வியாபாரத்தை நடாத்தும் அனைத்து கட்டிடத்திலும் அல்லது கட்டுமான பணிகளில் ஈடுபட்டிருக்கும் இடத்திலும் 4 1/2 க்கும் குறையாத கன அடியைக்கொண்ட குப்பை வாளியை வைத்திருத்தல் வேண்டும். அதில் குப்பைகளை இடும் போதும் வெளியேற்றப்படும் நேரத்தை தவிர மற்றைய நேரங்களில் அதை மூடி வைத்தல் வேண்டும். அத்துடன் குப்பையை அகற்றுவதற்கான தொழிலாளர்கள் வரும் வேளையில் அவைகளை வெளியில் வைக்க வேண்டும்.

7.5 விற்பனை செய்வதற்காக தயாரிக்கப்படும் அனைத்து உணவு களையும் பானங்களையும் ஈக்களிடமிருந்து பாதுகாத்துக்கொள்ளும் விதத்தில் மூடிகள் கொண்ட பெட்டிகளில் இடப்பட்டிருத்தல் வேண்டும்.

8. **ஆரோக்கிய சூழ்நிலையும் மக்கள் சுகாதாரமும்**:

இவைகளை கருத்திற்கொண்டு ஒதுக்கப்பட்ட இடத்தை தவிர முகாமைச் சூழவுள்ள பிரதேசத்தில் எவரும் சிறுநீர், மலம் கழிப்பது கூடாது. அத்துடன் குறிப்பிட்ட இடத்தில் அல்லது தொட்டிகளைத் தவிர முகாமை அண்டிய பிரதேசத்தில் திண்மமான அல்லது திரவமான குப்பைகளை இடக்கூடாது.

நான் வழங்கும் இக்கட்டளைகளை எவரும் மீறக்கூடாது..

யூ. கே. எஸ். மிகிதுகுலசூரிய,
மொணறாகலை மாவட்டச் செயலாளர்,
ஊவ வெல்லஸ்ஸ, கொட்டபோவ குடா
கதிர்காம ஆலயத்தின் எசல உற்சவ
முகாம் பொறுப்பாளர்.

மாவட்டச் செயலாளர் அலுவலகம்,
மொணறாகலை,
2010 யூலை 19.

8-96

## காணிப்பதிவேடு (மீட்டெழுதிய இருமடித்தாள்) கட்டளைச் சட்டத்தின் கீழான அறிவித்தல் (அத்தியாயம் 120)

*கீழ்க் குறிப்பிட்ட பட்டோலையில் காணப்படும் 2 ஆம் நிரலில் விபரிக்கப்படும் காணிகள் 1 ஆம் நிரலில் காணப்படுவதும் கிழிந்தோ அல்லது காணாமலோ போயிருக்கும் இருமடித்தாள்கள் சம்பந்தமான 3 ஆம் நிரலில் காணப்படும் உறுதிகளிலிருந்து தற்காலிகமாக காணிப்பதிவேடு (மீட்டெழுதிய இருமடித்தாள்கள்) கட்டளைச் சட்டம் (அத்தியாயம் 120) 4 ஆம் பிரிவின் கீழ் மீள அமைக்கப்பட்டிருக்கின்றது.*

*2. 2010.08.09 ஆந் திகதி தொடக்கம் 2010.08.23 ஆந் திகதி வரை அனைத்து வேலை நாட்களிலும் மு. ப. 10.00 மணி தொடக்கம் பி. ப. 3.00 மணி வரையிலான காலப்பகுதியில் திருத்தியமைக்கப்படவிருக்கும் இருமடித்தாள்களை விரும்பியவர்கள் பார்வையிடுவதற்கு ஹோமாகம காணிப்பதிவகத்தில் வைத்திருக்கப்படும்.*

*3. திருத்தியமைக்கப்படவிருக்கும் இருமடித்தாள்களின் சேர்க்கப்பட்டிருக்கும் ஏதேனும் விபரங்கள் சம்பந்தமாக பதிவு சம்பந்தமான எவரேனும் ஆட்சேபனையினை தாக்கல் செய்யவோ அல்லது தவறாக விடப்பட்டிருக்கும் விபரங்களை அல்லது பதிவுகளை சேர்க்கப்பட வேண்டுமெனவோ விரும்பின் அவை தொடர்பாக முறைப்பாடுகள் அல்லது கோரிக்கைகளைச் செய்வோர் கீழே கையொப்பமிட்டுள்ளவரது பெயருக்கு எழுத்து மூலம் 2010.08.30 ஆந் திகதிக்குப் பிந்தாமல் பதிவஞ்சல் மூலம் பதிவாளர் நாயகத்தின் அலுவலகத்திற்கு அனுப்புதல் வேண்டும். ஆட்சேபனைகள் அல்லது கோரிக்கைகள் ஆவண ரீதியான ஆதாரங்களுடன் அனுப்பப்படுதல் வேண்டும்.*

ஈ. எம். குணசேகர,
பதிவாளர் நாயகம்.

எனது இல. பீஎன் /11/02/06/2010/பிටු/ ஸ.
பதிவாளர் நாயகம் திணைக்களம்,
234/A3, டென்சில் கொப்பேகடுவ மாவத்தை,
பத்தரமுல்லை.

**அட்டவணை**

| *காணி பதிவு செய்யப்பட்ட ஏடுகளில் அழிந்துபோன பக்கங்களின் விபரம்* | *காணியின் விபரம்* | *பதிவு செய்யப்பட்ட உறுதிகளின் விபரம்* |
|---|---|---|
| கோவை இல. 279, வொலியூம் 344 'ஜி' பிரிவு - ஹோமாகம பதிவகம், கொழும்பு மாவட்டம் | C2 என குறிப்பிடப்பட்ட 1978.08.27 ஆந் திகதிய ஸ்ரீ. டீ. லியனசூரிய என்ற அளவையாளரால் மீகாஹ கெடியாவத்தை என்ற காணியில் அமைந்துள்ள, பத்தரமுல்ல நகர சபை வரையறைக்குள் பத்தரமுல்ல தலன்கம பல்லேபத்து ஹேவாகம் கோரளே, கொழும்பு மாவட்ட, மேல் மாகாண் சபைக்குள் -<br><br>வடக்கு : லொட் C1 ;<br>கிழக்கு : C4, C3;<br>தெற்கு : லொட் C3 மற்றும் டேனியல் மற்றோருக்கும் ;<br>மேற்கு : லொட் B, கிளமன்ட் என்பவருடைய காணியும் எல்லாமாக 30 பேர்ச்சஸ் அளவுடையதாகும். | 1. guprhf nfhLj;j fhzp cupik இல. 309 எல். ஹிரிமுத்துகொட நொத்தாரிசு என்பவரால் 1978.09.04 ஆந் திகதி எழுதி அத்தாட்சிப்படுத்தப் பட்டுள்ளது.<br><br>2. முதலீடு உரிமை இல. 497 எல். ஹிரிமுத்துகொட நொத்தாரிசு என்பவரால் 1979.08.25 ஆந் திகதி எழுதி அத்தாட்சிப்படுத்தப்பட்டுள்ளது.<br><br>3. திருத்திய உரிமை இல. 574/613 எல். ஹிரிமுத்துகொட நொத்தாரிசு என்பவரால் 1980.01.02 ஆந், 1980.02.27 ஆந் திகதிகளில் எழுதி அத்தாட்சிப்படுத்தப்பட்டுள்ளது. |

8-60

---

## 1974 ஆம் ஆண்டின் 34 ஆம் இலக்க, 1976 ஆம் ஆண்டின் 18 ஆம் இலக்க, 1977 ஆம் ஆண்டின் 9 ஆம் இலக்க, 1980 ஆம் ஆண்டின் 56 ஆம் இலக்க, வீட்டாதன உச்சவரம்புச் (திருத்த) சட்டங்களினால் திருத்தியமைக்கப்பட்டவாறான 1973 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்க வீட்டாதன உச்சவரம்புச் சட்டம்

*20 ஆம் பிரிவின் கீழ் அறிவித்தல்*

*இதனகத்து முன்னர் கூறப்பட்டுள்ளவாறு திருத்தியமைக்கப்பட்டவாறான 1973 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்க வீட்டாதன உச்சவரம்புச் சட்டத்தின் ஏற்பாடுகளை நடைமுறைக்குக் கொண்டுவருவதன் மூலம் இதனகத்தேயுள்ள அட்டவணையில் மேலும் முழுமையாக விவரிக்கப்பட்டுள்ள வீடு/ வீடுகள், எனக்கு உரித்தாக்கப்பட்டுள்ளதை முன்னிட்டு, இதனகத்தேயுள்ள அட்டவணையில் மேலும் முழுமையாக விவரிக்கப்பட்டுள்ள வீடு/*

வீடுகள் எனக்கு உரித்தாக்கப்பட்ட திகதிக்கு நேரடுத்து முன்னர் அவ்வீட்டில்/வீடுகளில் அக்கறையுள்ளவர்களாயிருந்த பேர்வழிகள், வர்த்தமானியில் இவ்வறிவித்தல் பிரசுரிக்கப்படும் திகதியிலிருந்து கணிக்கப்பட்ட ஒருமாத காலத்திற்குள் இச்சட்டத்தின் கீழ் அவ்வீட்டுக்கு/ அவ்வீடுகளொவ்வொன்றுக்கும் செலுத்தப்பட வேண்டிய விலை முழுவதற்கும் அல்லது அதன் பகுதியெதற்கும் எழுத்து மூலமான உரிமைக் கோரிக்கையொன்றைப் பதிவுக் கடிதம் மூலம் எனக்கு அனுப்புதல் வேண்டுமென்றும் அத்தகைய உரிமைக் கோரிக்கையானது பின்வரும் விவரங்களைக் கொண்டதாயிருத்தல் வேண்டுமென்றும் மேற்கூறிய சட்டத்தின் 20 ஆம் பிரிவின் கீழ் எனக்கு அளிக்கப்பட்டுள்ள தத்துவங்களின் பிரகாரம் இத்தால் பணிக்கின்றேன் :-

(அ) அவரது பெயரும் முகவரியும் ;
(ஆ) அவ்வீட்டில்/வீடுகளில் அவருக்கிருந்த அக்கறையின் தன்மை ;
(இ) அவரது உரிமைக் கோரிக்கையின் விவரம் ;
(ஈ) அவ்விலையில் எத்தொகையை அவர் கோருகின்றாரென்பது.

தேசிய வீடமைப்பு ஆணையாளர்.

வீட்டாதன உச்ச வரம்புக் கிளை,
நிர்மாணத்துறை, பொறியியல் சேவைகள்,
வீடமைப்பு மற்றும் பொதுவசதிகள் அமைச்சு,
2 ஆவது மாடி,
"செத்சிறிபாய",
ஸ்ரீ ஜயவர்தனபுர,
பத்தரமுல்லை,
2010.07.23.

**அட்டவணை**

| எனது தொடர் எண் | உறுதியுரை செய்பவரின் பெயரும் முகவரியும் | வரிமதிப்பு இலக்கமும் அமைவிடமும் | மாவட்டம், உள்ளூராட்சிச் சபை, வட்டார இல. என்பன | மாதிரிப்படம் | துண்டு இல. | உரித்தாக் கப்பட்ட இடப்பரப்பு ஏ. ரூ. பே. ஹெ. | ஈட்டில் உள்ளதா அல்லவா என்பது |
|---|---|---|---|---|---|---|---|
| சிஎச்/ஓ 2580 | திரு. ஐ. டபிள்யூ. டபிள்யூ. இந்திரதிஸ்ஸ 125 கல்வல வீதி தெகிவளை | 126/3, 126/3A 126/3B கல்வல வீதி தெகிவளை தற்போதைய இலக்கம் 15, 17, 19, குசலஞான மாவத்தை | கொழும்பு மாவட்டத்தில் தெகிவளை-கல்கிஸ்ஸ மாநகர சபைக்குட்பட்ட இல. 9, தெகிவளை, மேற்கு பிரிவு | இல. 1684ஏ/சிஎச்/ஓ/2580 கே. டபிள்யூ. டீ. சந்திராணி உத்தரவுபெற்ற நிலஅளவையாளர் 2010.05.25 | A,B,C | 0 0 14.10 .0357 | |

8-145

# அரசாங்கப் பகுதிகளின் நானாவித அறிவித்தல்கள்

## இலங்கை வங்கி

இலங்கை வங்கி கட்டளைச் சட்டம் (397 ஆம் அத்தியாயம்)
21 ஆம் பிரிவின் கீழ் வெளியிடப்படும் அறிவித்தல்

2010.04.27 ஆந் திகதி நடைபெற்ற கூட்டமொன்றில் இலங்கை வங்கிப் பணிப்பாளர் சபை விசேடமாகவும் ஏகமனதாகவும் தீர்மானித்ததாவது:-

"பிரசித்த நொத்தாரிசு திரு. வீ. வினோபா இந்திரன் அத்தாட்சிப்படுத்திய 2005.08.18 ஆந் திகதியிட்ட ஈட்டுமுறி இல. 12162 இன் பேரில் செட்டிபாலயம் வடக்கு, மட்டக்களப்பு என்னும் முகவரியைச் சேர்ந்த திரு. சிவசம்பு நவநீதன் மற்றும் திரு. கந்தையா சிவசம்பு ஆகியோரிடமிருந்து முதலும் 2010.02.02 வரை வட்டியும் மூன்று இலட்சத்து எண்பத்து நான்காயிரத்து ஐம்பது ரூபா இருபத்துமூன்று சதம் (ரூ. 3,84,050.23) அத்துடன் தொண்ணூற்றோராயிரத்து ஐம்பத்தொன்பது ரூபா முப்பத்தொரு சதம் (ரூ. 91,059.31) ஆண்டுக்கு பதின்மூன்று 13% வீதத்தில் 2010.02.03 தொடக்கம் கொடுப்பனவுத் திகதிவரை வட்டியும் வங்கிக்கு வருமதியாகவும் உள்ளதாலும்,

மேற்குறிப்பிட்ட முறி இல. 12162 இன் மீது வருமதியாக உள்ள மேற்குறிப்பிட்ட மூன்று இலட்சத்து எண்பத்து நான்காயிரத்து ஐம்பது ரூபா இருபத்துமூன்று சதம் (ரூ. 3,84,050.23) அத்துடன் 2010.02.03 தொடக்கம் விற்பனைத் திகதி வரை மேற்குறிப்பிட்டவாறு வட்டியும் இலங்கை வங்கிக் கட்டளைச் சட்டம் 26 ஆம் பிரிவின் கீழ் அறவிட வேண்டிய செலவுகள் மற்றும் பணங்களையும் அறவிடும் பொருட்டு இங்கு கீழ் அட்டவணையில் விபரித்த இலங்கை வங்கிக்கு ஈடுவைத்த சொத்தை பகிரங்க ஏலத்தில் விற்பதற்கு இல. 8, முதலியார் ரோட், மட்டக்களப்பு என்னும் முகவரியைச் சேர்ந்த ஏலதாரர் திரு. ஏ. ஈ. கே. திஸ்ஸவீரசிங்கவுக்கு இலங்கை வங்கி கட்டளைச் சட்டம் (397 ஆம் அத்தியாயம்) 19 ஆம் பிரிவிற்கும் அதன் திருத்தங்களுக்கமையவும் இத்தால் அனுமதியும் அதிகாரமும் வழங்கப்படுகின்றது."

### அட்டவணை

கிழக்கு மாகாணம், மட்டக்களப்பு மாவட்டம், மண்முனைப்பற்றுவில் செட்டிப்பாலயத்தில் அமைந்த "செம்பி கண்ணாச்சி வளவு" என அழைக்கப்படும் காணித்துண்டிலிருந்து கிழக்கிலிருந்து மேற்கு வரை 18 பெதம்களும் வடக்கிலிருந்து தெற்கு வரை 17 பெதம்களும், விஸ்தீரணமுடையதுடன் கிழக்கில் : பட்டார் குமாரவேலு மற்றும் ஏனையோரின் வாரிசுகளின் காணியும்; மேற்கில் : குளவெலியும் ; வடக்கில் : ஒழுங்கையும் ; தெற்கில் : மூத்தம்பியின் வாரிசுகளின் காணியும் விலங்கார் வளவும் குளவெளியும் எல்லைளாகக் கொண்டது; கிழக்கு மாகாணம் மட்டக்களப்பு மாவட்டத்தில் எருவில் பற்றுவில் எருவில் பற்று மண்முனை தெற்கு பிரதேச சபை எல்லைகளுக்குள் செட்டிப்பாலயத்தில் அமைந்த பிரிக்கப்பட்ட வடக்கு அரைப்பாகமானது உத்தரவுபெற்ற நிலஅளவையாளர் ஏ. சிங்கராஜா தயாரித்த 2003.08.11 ஆந் திகதியிட்ட அளவை வரைபடம் இல. AS/ 2003/779 இல் பெரும்பாலும் விபரித்த கிழக்கிலிருந்து மேற்கு வரை 18 பெதம்களும் வடக்கிலிருந்து தெற்கு வரை 8 1/2 பெதம்களும் கொண்டு இருபது பேர்ச்சஸ்கள் (0ஏ. 0றூ. 20பே.) விஸ்தீரணமுடையது. கிழக்கில் : ஒழுங்கையும் ; மேற்கில் : பேரின்பராஜாவின் காணியும் ; வடக்கில் : பிரதான ரோட் வரை செல்லும் ஒழுங்கையும் ; தெற்கில் : கே. உதயகுமாருக்குச் சொந்தமான வீட்டுடன் ஏனைய பங்கும் கிணறும் அடங்கும் ஏனைய எல்லா உரிமைகளும் ஆகும்.

பணிப்பாளர் சபையின் கட்டளைப்படி,

வீ. ஆறுமுகம்,
கிளை முகாமையாளர்.

இலங்கை வங்கி,
மேற்தரக் கிளை,
மட்டக்களப்பு.

8-71

---

## இலங்கை வங்கி

இலங்கை வங்கி கட்டளைச் சட்டம் (397 ஆம் அத்தியாயம்)
21 ஆம் பிரிவின் கீழ் வெளியிடப்படும் அறிவித்தல்

2010.06.17 ஆந் திகதி நடைபெற்ற கூட்டமொன்றில் இலங்கை வங்கிப் பணிப்பாளர் சபை விசேடமாகவும் ஏகமனதாகவும் தீர்மானித்ததாவது:-

"பிரசித்த நொத்தாரிசு எம். ஐ. எம். நூர்தீன் அத்தாட்சிப் படுத்திய 2006.11.30 ஆந் திகதியிட்ட முறி இல. 18084 இன் பேரில் இல. 73A, புதுநகர், மட்டக்களப்பு என்னும் முகவரியைச் சேர்ந்த திரு. ஜோன் கலிஸ்றன் ஜோகுமார் என்பவரிடமிருந்து கடன் கணக்குக்காக முதலும் 2010.03.11 வரை வட்டியும் இரண்டு இலட்சத்து பதினெட்டாயிரத்து தொளாயிரத்து இருபத்தொன்பது ரூபா எண்பது சதம் (ரூ. 2,18,929.80) அத்துடன் ஒரு இலட்சத்து அறுபத்துமூவாயிரத்து இருபது ரூபா ஐம்பத்தொன்பது சதம் (ரூ. 1,63,020.59) ஆண்டுக்கு 13% வீதத்தில் 2010.03.12 தொடக்கம் கொடுப்பனவுத் திகதிவரை வட்டியும் வருமதியாகவும் உள்ளதாலும்,

மேற்குறிப்பிட்ட முறி இல. 18084 இன் மீது வருமதியாக உள்ள மேற்குறிப்பிட்ட இரண்டு இலட்சத்து பதினெட்டாயிரத்து தொளாயிரத்து இருபத்தொன்பது ரூபா எண்பது சதம் (ரூ. 2,18,929.80) அத்துடன் 2010.03.12 தொடக்கம் விற்பனைத் திகதி வரை மேற்குறிப்பிட்டவாறு வட்டியும் இலங்கை வங்கிக் கட்டளைச் சட்டம் 26 ஆம் பிரிவின் கீழ் அறவிட வேண்டிய செலவுகள் மற்றும் பணங்களையும் அறவிடும் பொருட்டு இங்கு கீழ் அட்டவணையில் விபரித்த இலங்கை வங்கிக்கு ஈடுவைத்த சொத்தை பகிரங்க ஏலத்தில் விற்பதற்கு இல. 8, முதலியார் ரோட், மட்டக்களப்பு என்னும் முகவரியைச் சேர்ந்த ஏலதாரர் திரு. ஏ. ஈ. கே. திஸ்ஸவீரசிங்கவுக்கு இலங்கை வங்கி கட்டளைச் சட்டம் (397 ஆம் அத்தியாயம்) 19 ஆம் பிரிவிற்கும் அதன் திருத்தங்களுக்கமையவும் இத்தால் அனுமதியும் அதிகாரமும் வழங்கப்படுகின்றது."

### அட்டவணை

கிழக்கு மாகாணம், மட்டக்களப்பு மாவட்டம், மண்முனைப்பற்றுவில் வீச்சுக்கல்முனை கிராமத்தில் வீவிங் சென்றர் ரோட்டில் அமைந்த "ஆற்றங்கரை வளவு" என அழைக்கப்படும் காணித்துண்டின் கிழக்குப் பாகம். வடக்கில் : 10 அடி அகலப்பாதையும் ; கிழக்கில் : வாவிதிடலும்; தெற்கில்: செபஸ்தியனின் காணியும் ; மேற்கில் : ஞானமுத்து ஜோன் மற்றும் அன்னமரி ஆகியோரது மீதிக் காணியும் எல்லைகளாகக் கொண்டு வடக்கிலிருந்து தெற்குக்கு : கிழக்குப் புறத்தில் 186 அடியும் மேற்குப் புறத்தில் 140 அடியும் கிழக்கிலிருந்து மேற்கு வரை வடக்குப் புறத்தில் 65 அடியும் தெற்குப் புறத்தில் 109 அடியும் விஸ்தீரணமுடையது. இவ் எல்லைகளுள் அடங்கும் சகல உரிமைகளும் ஆகும். இது B 537/24 இல் பதிவு செய்யப்பட்டது.

உத்தரவுபெற்ற நிலஅளவையாளர் ஏ. ஈ. கே. திஸ்ஸவீரசிங்ஹ வரைந்த 2006.06.29 ஆந் திகதியிட்ட வரைபடம் இல. 797/2006 இல் விபரித்த காணித்துண்டு பின்வருமாறு :-

கிழக்கு மாகாணம், மட்டக்களப்பு மாவட்டம், மண்முனைப்பற்றுவில் மண்முனை வடக்கு பற்று பிரதேச செயலகத்தில் மட்டக்களப்பு மாநகர சபை எல்லைகளுள் வட்டாரம் இல. SU - 01 இல் வீச்சுக்கல்முனை கிராமத்தில் வீவிங் சென்றர் ரோட்டில் அமைந்த வரிமதிப்பிலக்கம் 124/1C ஐக் கொண்டதும் உத்தரவுபெற்ற நிலஅளவையாளர் ஏ. ஈ. கே. திஸ்ஸவீரசிங்ஹ வரைந்த 2006.06.29 ஆந் திகதியிட்ட வரைபடம் இல. 797/2006 இல் விபரித்த "ஆற்றங்கரை வளவு" என அழைக்கப்படும் காணித்துண்டு வடக்கில்: பாதை (RDA) வரை செல்லும் 4.5 மீ. அகல ஒழுங்கையும் ; கிழக்கில் : 4.5 மீ. அகல ஒதுக்கமும் ; தெற்கில் : யூ. செபஸ்தியனும் ஏனையோரும் உரிமைகோரும் தோட்டமும் ; மேற்கில் : ஜி. ஜோன் மற்றும் அன்னமேரி உரிமைகோரும் காணியும் எல்லைகளாகக் கொண்டு ஹெக்டேயர்கள் சைபர் தசம் சைபர் ஆறு ஒன்று சைபர் (0.0610) அல்லது இருபத்து நான்கு தசம் ஒன்று ஒன்று

பேர்ச்சஸ்கள் (0ஏ. 0றூ. 24.11பே.) விஸ்தீரணமுடைய காணியும் அதில் அடங்கும் சகல உரிமைகளும் ஆகும்.

பணிப்பாளர் சபையின் கட்டளைப்படி,

வீ. ஆறுமுகம்,
கிளை முகாமையாளர்.

இலங்கை வங்கி,
மேற்தரக் கிளை,
மட்டக்களப்பு.

8-73

---

### இலங்கை வங்கி

இலங்கை வங்கி கட்டளைச் சட்டம் (397 ஆம் அத்தியாயம்)
21 ஆம் பிரிவின் கீழ் வெளியிடப்படும் அறிவித்தல்

2010.06.17 ஆந் திகதி நடைபெற்ற கூட்டமொன்றில் இலங்கை வங்கிப் பணிப்பாளர் சபை விசேடமாகவும் ஏகமனதாகவும் தீர்மானித்ததாவது:-

''பிரசித்த நொத்தாரிசு திரு. வீ. வினோபா இந்திரன் அத்தாட்சிப்படுத்திய 2007.03.09 ஆந் திகதியிட்ட ஈட்டுமுறி இல. 13606 இன் பேரில் வட்டாரம் ரோட், எருவில், களுவாஞ்சிக்குடி என்னும் முகவரியைச் சேர்ந்த திருமதி சந்திரப்பிள்ளை அன்னலட்சுமி என்பவரிடமிருந்து கடன் கணக்குக்கு முதலும் 2010.03.17 வரை வட்டியும் ஏழு இலட்சத்து ஒன்பதாயிரத்து நாநூற்று அறுபத்துமூன்று ரூபா எண்பத்தொன்பது சதம் (ரூ. 7,09,463.89) அத்துடன் ஐந்து இலடசத்து ஐம்பத்தெட்டாயிரத்து நூற்று எழுபத்தாறு ரூபா நாற்பத்தைந்து சதம் (ரூ. 5,58,176.45) மீது ஆண்டுக்கு பதின்மூன்று 13% வீதத்தில் 2010.03.18 தொடக்கம் கொடுப்பனவுத் திகதிவரை வட்டியும் வருமதியாகவும் உள்ளதாலும்,

மேற்குறிப்பிட்ட முறி இல. 13606 இன் மீது வருமதியாக உள்ள மேற்குறிப்பிட்ட ஏழு இலட்சத்து ஒன்பதாயிரத்து நாநூற்று அறுபத்துமூன்று ரூபா எண்பத்தொன்பது சதம் (ரூ. 7,09,463.89) அத்துடன் 2010.03.18 தொடக்கம் விற்பனைத் திகதி வரை மேற்குறிப்பிட்டவாறு வட்டியும் இலங்கை வங்கிக் கட்டளைச் சட்டம் 26 ஆம் பிரிவின் கீழ் அறவிட வேண்டிய செலவுகள் மற்றும் பணங்களையும் அறவிடும் பொருட்டு இங்கு கீழ் அட்டவணையில் விபரித்த இலங்கை வங்கிக்கு ஈடுவைத்த சொத்தை பகிரங்க ஏலத்தில் விற்பதற்கு இல. 8, முதலியார் ரோட், மட்டக்களப்பு என்னும் முகவரியைச் சேர்ந்த ஏலதாரர் திரு. ஏ. ஈ. கே. திஸ்ஸவீரசிங்கவுக்கு இலங்கை வங்கி கட்டளைச் சட்டம் (397 ஆம் அத்தியாயம்) 19 ஆம் பிரிவிற்கும் அதன் திருத்தங்களுக்கமையவும் இத்தால் அனுமதியும் அதிகாரமும் வழங்கப்படுகின்றது.''

#### அட்டவணை

கிழக்கு மாகாணம், மட்டக்களப்பு மாவட்டம், எருவில் பற்று, மண்முனை தெற்கு, எருவில் பற்று பிரதேச சபை எல்லைகளுள் எருவில் கிராமத்தில் அமைந்த ''ஈஸ்றர் சீறொன் குரூப்'' என அழைக்கப்படும் காணித்துண்டின் தென்பாகத்தின் கிழக்குப் பாகத்தின் கிழக்கு அரைப்பங்கு உத்தரவுபெற்ற நிலஅளவையாளர் ஏ. சிங்கராஜா தயாரித்த 2006.06.10 ஆந் திகதியிட்ட அளவை வரைபடம் இல. AS/ MS/ &EP/49 இல் துண்டு 01 என விபரித்த காணித்துண்டு. கிழக்கில்: இராசலட்சுமியின் காணியும் ; மேற்கில் : வெள்ளையாபோடி பஞ்சவர்ணத்தின் காணி தற்போது ஒழுங்கையும் வடக்கில் : உதயகுமாரத்தியின் காணியும்; தெற்கில் : சந்தனப்பிள்ளையின் காணியும் எல்லைகளாகக் கொண்டு ஒரு றூட் (0ஏ. 1றூ. 0பே.) விஸ்தீரணமுடைய காணியும் அதில் அடங்கும் உரிமைகளும் இக்காணியின் வடக்குப் பாகத்தில் ஒதுக்கப்பட்ட ஒழுங்கை மீதும் ஒழுங்கையிலும் பாதையிலிருந்து வெளியேறவும் பாதைக்கு உட்பிரவேசிக்கவும் உரிமையும் ஆகும்.

பணிப்பாளர் சபையின் கட்டளைப்படி,

என். அருட்ஜோதி,
கிளை முகாமையாளர்.

இலங்கை வங்கி,
களவாஞ்சிக்குடி.

8-72

---

### கொமர்ஷல் பாங்க் ஒப் சிலோன் பீஎல்சீ

1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிகளினால் கடன்கள் அறவிடப்படல் 4 ஆவது சிறப்பு சட்டத்தின் பிரகாரம் கொமர்ஷல் பாங்க் ஒப் சிலோன் பீஎல்சீ (பதிவு இலக்கம் பீகியூ 116) பணிப்பாளர்கள் சபையால் அங்கீகரிக்கப்பட்ட தீர்மானம்

கடன் கணக்கு இலக்கங்கள்: 244648 மற்றும் 174019 – லேக் லாண்ட் இன்டர் அமெரிக்கன் ஸ்கூல் (பிறைவேட்) லிமிட்டெட் மற்றும் சிவராசா சிவானந்தன்

24.02.2010 ஆந் தேதி கூடிய கொமர்ஷல் பாங்க் ஒப் சிலோன் பீஎல்சீ பணிப்பாளர்கள் சபையினால் பின்வருமாறு ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது.-

''கடன் எடுத்த, இலங்கையின் கொம்பனி சட்டத்தின் படி ஸ்தாபிக்கப்பட்ட இரத்மலானை பொருபண வலகம்பா இலக்கம் 09 இல் பதிவு விலாசத்தில் அமைந்துள்ள லேக் லாண்ட் இன்டர் அமெரிக்கன் ஸ்கூல் (பிறைவேட்) லிமிட்டெட் மற்றும் காணியை ஈடுவைத்த சிவராசா சிவானந்தன் என்பவர் கொமர்ஷல் பாங்க் ஒப் சிலோன் பீஎல்சீ சார்பாக கொழும்பு பிரசித்த நொத்தாரிசு கே. என். பி. பெரேராவின் 23.06.2005 ஆந் திகதியுடைய முறி இலக்கம் 381 மூலம் செலுத்த வேண்டிய கொடுப்பனவில் தவறுகை புரிந்துள்ளதாதலாலும்,

அத்துடன் கடன் எடுத்த சிவராசா சிவானந்தன் என்பவர் கொமர்ஷல் பாங்க் ஒப் சிலோன் பீஎல்சீ சார்பாக கொழும்பு பிரசித்த நொத்தாரிசு ஜே. ஆர். கமகேவின் 15.10.2003 ஆந் திகதியுடைய முறி இலக்கம் 2284 மூலம் செலுத்த வேண்டிய கொடுப்பனவில் தவறுகை புரிந்துள்ளதாதலாலும், அத்துடன்

மேற்படி முறிகள் பிரகாரம் 11.08.2009 ஆந் திகதி வரை கொமர்ஷல் பாங்க் ஒப் சிலோன் பீஎல்சீ க்கு 1,24.85,216.97 தற்சமயம் வருமதியாக உள்ளதாலும் அத்துடன் கொமர்ஷல் பாங்க் ஒப் சிலோன் பீஎல்சீ பணிப்பாளர்கள் சபையானது 1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிகளினால் கடன்கள் அறவிடப்படல் 4 ஆவது சிறப்பு சட்டத்தின் பிரகாரம் மேற்படி சொல்லப்பட்ட

முறிகள் இலக்கங்கள் 381 மற்றும் 2284 மூலம் கொமர்ஷல் பாங்க் ஒப் சிலோன் பீஎல்சீக்கு ஈடுவைக்கப்பட்டுள்ள இவ் அட்டவணையில் விபரிக்கப்பட்ட காணிகளை மேற்படி சொல்லப்பட்ட பணத்தொகையான ரூபா 1,24,85,216.97 உடன் 12.08.2009 ஆந் திகதி முதல் ஏலத்திகதிவரை ரூபா 85,50,000 பணத்தொகைக்கு மேலதிக வட்டியாக ஆண்டொன்றுக்கு 22% சதவட்டியுடன் விளம்பரச் செலவுகள் வேறு கொடுப்பனவுகள் சேர்த்து அறவிடுவதற்காக கொழும்பு 12, புதுக்கடை வீதி, இலக்கம் 99, உரிமம் பெற்ற ஏலதாரர் எல். பி. சேனநாயக்க மூலம் பகிரங்க ஏலம் மூலம் விற்பனை செய்யப்பட வேண்டுமென தீர்மானிக்கப்பட்டது.''

### அட்டவணை

1. மேல் மாகாணம், கொழும்பு மாவட்டம், பல்லே பத்து சல்பிட்டி கோறளையில் மொரட்டுவை நகர சபை எல்லையில் தெலவள கிராமத்தில் வலகம்பா மாவத்தையில் (பொருபன பெரிரோட் ஊடாக) அமைந்துள்ள நிலஅளவையாளர் எச். எம். பெர்னாந்துவின் 12.03.1960 ஆந் திகதியுடைய வரைபடம் இலக்கம் 726 இல் காண்பிக்கப்பட்ட லேடி கதரின் குரூப் காணியின் லொட் 40 காணியின் எல்லைகள் - வடக்கு : வரைபடம் இலக்கம் 726 இல் லொட் 39 ; கிழக்கு: வரைபடம் இலக்கம் 726 இல் லொட் 73 ; தெற்கு : வரைபடம் இலக்கம் 726 இல் லொட் 41 ; மேற்கு : வரைபடம் இலக்கம் 726 (ரோட்) லொட் 38 இக்காணியின் விஸ்தீரணம் (0ஏ. 0றூ. 20பே.) மேற்படி வரைபடம் இலக்கம் 726 படி இக்காணி தெல்கண்த- நுகேகொடை காணிப் பதிவகத்தில் M2715/196 இல் பதிவு செய்யப்பட்டது.

2. மேல் மாகாணம், கொழும்பு மாவட்டம், பல்லே பத்து சல்பிட்டி கோறளையில் மொரட்டுவை மாநகர சபை எல்லையில் தெலவள கிராமத்தில் வலகம்பா மாவத்தை (பொருபன பெரி ரோட் ஊடாக) அமைந்துள்ள நிலஅளவையாளர் எச். எம். பெர்னாந்துவின் 12.03.1960 ஆந் திகதியுடைய வரைபடம் இலக்கம் 726 இல் காண்பிக்கப்பட்ட லேடி கதரின் குரூப் காணியின் லொட் 41 இதன் எல்லைகள் - வடக்கு : வரைபடம் இலக்கம் 726 இல் லொட் 40 ; கிழக்கு: வரைபடம் இலக்கம் 726 இல் லொட் 72 ; தெற்கு : வரைபடம் இலக்கம் 726 இல் லொட் 42 ; மேற்கு : வரைபடம் இலக்கம் 726 (ரோட்) லொட் 38 இக்காணியின் விஸ்தீரணம் (0ஏ. 0றூ. 20பே.) மேற்படி வரைபடம் இலக்கம் 726 படி இக்காணி தெல்கண்த - நுகேகொடை காணிப் பதிவகத்தில் M2715/19 இல் பதிவு செய்யப்பட்டது.

3. மேல் மாகாணம், கொழும்பு மாவட்டம், பல்லே பத்து சல்பிட்டி கோறளையில் மொரட்டுவை மாநகர சபை எல்லையில் தெலவள கிராமத்தில் வலகம்பா மாவத்தை (பொருபன பெரி ரோட் ஊடாக) அமைந்துள்ள நிலஅளவையாளர் எச். எம். பெர்னாந்துவின் 12.03.1960 ஆந் திகதியுடைய வரைபடம் இலக்கம் 726 இல் காண்பிக்கப்பட்ட லொட் 42 எல்லைகள் - வடக்கு : வரைபடம் இலக்கம் 726 இல் லொட் 41 ; கிழக்கு : வரைபடம் இலக்கம் 726 இல் லொட் 71; தெற்கு : வரைபடம் இலக்கம் 726 இல் லொட் 43 ; மேற்கு : வரைபடம் இலக்கம் 726 (ரோட்) லொட் 38 இக்காணியின் விஸ்தீரணம் (0ஏ. 0றூ. 20பே.).

இக்கீழ்க் காணும் காணியூடாக பாதைக்கு பாவிக்கும் உரிமையுடன்:-

மேற்படி தெலவள கிராமத்தில் பொருபன பெரி ரோட் ஊடாக அமைந்துள்ள வரைபடம் இலக்கம் 726 இல் காண்பிக்கப்பட்ட லேடி கதரின் குரூப் காணியின் லொட் 38 (ரோட் தற்சமயம் வலகம்பா மாவத்தை) எல்லைகள் - வடக்கு : பொருபன பெரி ரோட் ; கிழக்கு : லொட் 39, 40, 41, 42, 43, 44, 45, 46, 47, 48, 49, 50, 51, 52, 53, 54, 55 மற்றும் 56 மேற்படி வரைபடம் இலக்கம் 7326 படி ; தெற்கு : எஸ்டேட் ரோட் ; மேற்கு : லொட் 20, 21, 22, 23, 24, 25, 26, 27, 28, 29, 30, 31, 32, 33, 34, 35, 36 மற்றும் 37 மேற்படி வரைபடம் இலக்கம் 726 இக்காணியின் விஸ்தீரணம் (0ஏ. 0றூ. 24.4பே.) மேற்படி வரைபடம் இலக்கம் 726 படி இக்காணி தெல்கன்த -நுகேகொடை காணி பதிவகத்தில் M 1154/122 இல் பதிவு செய்யப்பட்டது.

(திருமதி) ஆர்.ஆர். துனுவில,
கம்பனிச் செயலாளர்

8-86

---

### கொமர்ஷல் பாங்க் ஒப் சிலோன் பீஎல்சீ

1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிகளினால் கடன்கள் அறவிடப்படல் 4 ஆவது சிறப்பு சட்டத்தின் பிரகாரம் கொமர்ஷல் பாங்க் ஒப் சிலோன் பீஎல்சீ (பதிவு இலக்கம் பீகியூ 116) பணிப்பாளர்கள் சபையால் அங்கீகரிக்கப்பட்ட தீர்மானம்

கடன் கணக்கு இலக்கங்கள்: 389139 - வர்ணகுலசூரிய எட்கார் ஜெரி த மெல்

28.01.2010 ஆந் தேதி கூடிய கொமர்ஷல் பாங்க் ஒப் சிலோன் பீஎல்சீ பணிப்பாளர்கள் சபையினால் பின்வருமாறு ஏகமனதாக தீர்மானிக் கப்பட்டது.-

“கடன் எடுத்த வர்ணகுலசூரிய எட்கார் ஜெரி த மெல் என்பவர் கொமர்ஷல் பாங்க் ஒப் சிலோன் பீஎல்சீ சார்பாக வென்னப்புவை பிரசித்த நொத்தாரிசு எச். ஜே. டி. பொன்சேகாவின் 30.08.2007 ஆந் திகதியுடைய முறி இலக்கம் 31239 மூலம் செலுத்த வேண்டிய கொடுப்பனவில் தவறுகை புரிந்துள்ளதாதலாலும் அத்துடன் மேற்படி முறி பிரகாரம் கொமர்ஷல் பாங்க் ஒப் சிலோன் பீஎல்சீக்கு 21.07.2009 ஆந் திகதி வரை ரூபா 28,47,811.55 தற்சமயம் வருமதியாக உள்ளதாலும் கொமர்ஷல் பாங்க் ஒப் சிலோன் பீஎல்சீ பணிப்பாளர்கள் சபையானது 1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிகளினால் கடன்கள் அறவிடப்படல் 4 ஆவது சிறப்பு சட்டத்தின் பிரகாரம் உள்ள சட்ட அதிகாரத்தின்படி மேற்படி முறி இலக்கம் 31239 மூலம் கொமர்ஷல் பாங்க் ஒப் சிலோன் பீஎல்சீக்கு ஈடுவைக்கப்பட்டுள்ள இவ் அட்டவணையில் விபரிக்கப்பட்ட காணிகளை மேற்படி சொல்லப்பட்ட பணத்தொகையான ரூபா 28,47,811.55 பணத்தொகையுடன் 22.07.2009 ஆந் திகதி முதல் ஏலத்திகதிவரை ரூபா 19,66,650 பணத்தொகைக்கு மேலதிக வட்டியாக ஆண்டொன்றுக்கு 22% சதவட்டியுடன் விளம்பரச் செலவுகள் வேறு கொடுப்பனவுகள் சேர்த்து அறவிடுவதற்காக கொழும்பு 12, புதுக்கடை வீதி, இலக்கம் 99, உரிமம் பெற்ற ஏலதாரர் எல். பி. சேனநாயக்க மூலம் பகிரங்க ஏலம் மூலம் விற்பனை செய்யப்பட வேண்டுமென தீர்மானிக்கப்பட்டது.''

### அட்டவணை

வடமேல் மாகாணம், புத்தளம் மாவட்டம், சிலாபம் பதிவு எல்லையில் முன்னேஸ்வரம் பத்து பிட்டிகல கோரளையில் வடக்கு காக்காபல்லிய கிராமத்தில் அமைந்துள்ள நிலஅளவையாளர் எம். எம். பி. டண்ஸ்டன் பெரேராவின் 11.03.2007 ஆந் திகதியுடைய வரைபடம் இலக்கம் 5681 இல் காண்பிக்கப்பட்ட யாய்ய இடம காணியின் லொட் 2 எல்லைகள் - வடக்கு : ஓடையில் இருந்து பிரதான ரோட்டுக்கு செல்லும் பிரதேச சபை ரோட் ; கிழக்கு : வரைபடம் இலக்கம் 5681 இல் லொட் 3 ; தெற்கு : எம். எம். என். அப்புஹாமியின் காணி ; மேற்கு : வரைபடம் இலக்கம் 5681

இல் லொட் 1 இக் காணியின் விஸ்தீரணம் (0ஏ. 1றூ. 0பே.0 இக்காணியின் அமைந்துள்ளவாறு சேர்த்து.

மேற்கூறிய காணி வரைபடம் இலக்கம் 5681 இல் காண்பிக்கப்பட்ட மேற்படி காக்காப்பல்லிய கிராமத்தில் அமைந்துள்ள யாய்யா இடம காணியின் பகுதிபடுத்திய லொட் 1 மற்றும் 2 காணிகளின் பகுதி. இக்காணியின் எல்லைகள் - வடக்கு : ரோட் ; கிழக்கு : வரைபடம் இலக்கம் 5681 லொட் 3 ; தெற்கு : எம். எம். எஸ். அப்புஹாமியின் காணி ; மேற்கு : நிலஅளவையாளர் கே. டி. எப். ஆர். பெரேராவின் வரைபடம் இலக்கம் 772 இல் லொட் 8 விஸ்தீரணம் (1ஏ. 0றூ. 0பே.) இக்காணி சிலாபம் காணி பதிவகத்தில் C 188/201 இல் பதிவு செய்யப்பட்டது.

(திருமதி) ஆர்.ஆர். துனுவில,
கம்பனிச் செயலாளர்

8-87

---

## கொமர்ஷல் பாங்க் ஒப் சிலோன் பீஎல்சீ

*1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிகளினால் கடன்கள் அறவிடப்படல் 4 ஆவது சிறப்பு சட்டத்தின் பிரகாரம் கொமர்ஷல் பாங்க் ஒப் சிலோன் பீஎல்சீ (பதிவு இலக்கம் பீகியூ 116) பணிப்பாளர்கள் சபையால் அங்கீகரிக்கப்பட்ட தீர்மானம்*

கடன் கணக்கு இலக்கம் : 382813 - கண்ணங்கரகே ஜானக தினேஷ் பெரேரா

23.10.2009 ஆந் திகதி கூடிய கொமர்ஷல் பாங்க் ஒப் சிலோன் பீஎல்சீ பணிப்பாளர்கள் சபையினால் பின்வருமாறு ஏகமனதாக தீர்மானிக் கப்பட்டது.-

"கடன் எடுத்த கண்ணங்கரகே ஜானக தினேஷ் பெரேரா என்பவர் கொமர்ஷல் பாங்க் ஒப் சிலோன் பீஎல்சீ சார்பாக கொழும்பு பிரசித்த நொத்தாரிசு ஆர். கே. ஜயவர்தனவின் 06.08.2007 ஆந் திகதியுடைய முறி இலக்கம் 3431 மூலம் செலுத்த வேண்டிய கொடுப்பனவில் தவறுகை புரிந்துள்ளதாதலாலும் அத்துடன் கொமர்ஷல் பாங்க் ஒப் சிலோன் பீஎல்சீ க்கு 15.06.2009 ஆந் திகதி வரை மேற்படி முறி பிரகாரம் ரூபா 9,28,658.17 தற்சமயம் வருமதியாக உள்ளதாலும் அத்துடன் கொமர்ஷல் பாங்க் ஒப் சிலோன் பீஎல்சீ பணிப்பாளர்கள் சபையானது 1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிகளினால் கடன்கள் அறவிடப்படல் 4 ஆவது சிறப்பு சட்டத்தின் பிரகாரம் மேற்படி முறி இலக்கம் 3431 மூலம் கொமர்ஷல் பாங்க் ஒப் சிலோன் பீஎல்சீக்கு ஈடுவைக்கப்பட்ட இவ் அட்டவணையில் விபரிக்கப்பட்ட காணிகளை மேற்படி சொல்லப்பட்ட பணத்தொகையான ரூபா 9,28,658.17 பணத்தொகையுடன் 16.06.2009 ஆந் திகதி முதல் ஏலத் திகதிவரை ரூபா 7,47,976.27 பணத்துக்கு மேலதிக வட்டியாக ஆண்டொன்றுக்கு 18% சதவட்டியுடன் விளம்பரச் செலவுகள் வேறு கொடுப்பனவுகள் சேர்த்து அறவிடுவதற்காக கொழும்பு 12, புதுக்கடை வீதி, இலக்கம் 99, உரிமம் பெற்ற ஏலதாரர் எல். பி. சேனநாயக்க மூலம் பகிரங்க ஏலம் மூலம் விற்பனை செய்யப்பட வேண்டுமென தீர்மானிக்கப்பட்டது."

### அட்டவணை

மேல் மாகாணம், கொழும்பு மாவட்டம், பல்லே பத்து சல்பிட்டி கோரளையில் உடாமுல்ல கிராமத்தில் அமைந்துள்ள கனத்த ரோட் கட்டிடம் இலக்கம் 53/28 அமைந்துள்ள நிலஅளவையாளர் எச். எல். குணசேகரவின் 5.1.1997 ஆந் திகதியுடைய வரைபடம் இலக்கம் 4057 இல் காண்பிக்கப்பட்ட அலுபோகாவத்த காணியில் லொட் 18A காணியின் எல்லைகள் - வடக்கு : வரைபடம் இலக்கம் 2994 இல் லொட் 19 ; கிழக்கு : லொட் 18B ; தெற்கு : லொட் 18C ; மேற்கு : ரோட் இக்காணியின் விஸ்தீரணம் (0ஏ. 0றூ. 9.10பே.) இக்காணி தெல்கன்த -நுகேகொடை காணிப்பதிவகத்தில் M2771/249 இல் பதிவு செய்யப்பட்டது.

இக்கீழ்காணும் காணியூடாக பாதைக்கு பாவிக்கும் உரிமையுடன்:-

மேற்படி உடாமுல்ல கிராமத்தில் அமைந்துள்ள நிலஅளவையாளர் எச். எல். குணசேகரவின் 5.1.1997 ஆந் திகதியுடைய வரைபடம் இலக்கம் 4057 இல் காண்பிக்கப்பட்ட அலுபோகாவத்த காணியின் லொட் 18C எல்லைகள் - வடக்கு : லொட் 18A ; கிழக்கு : லொட் 18B; தெற்கு : வரைபடம் இலக்கம் 2994 லொட் 17 ; மேற்கு : ரோட் இக்காணியின் விஸ்தீரணம் (0ஏ. 0றூ. 1.10பே.) இக்காணி தெல்கன்த -நுகேகொடை காணிப்பதிவகத்தில் M2771/250 இல் பதிவு செய்யப்பட்டது.

(திருமதி) ஆர்.ஆர். துனுவில,
கம்பனிச் செயலாளர்

8-88

---

## கொமர்ஷல் பாங்க் ஒப் சிலோன் பீஎல்சீ

*1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிகளினால் கடன்கள் அறவிடப்படல் 4 ஆவது சிறப்பு சட்டத்தின் பிரகாரம் கொமர்ஷல் பாங்க் ஒப் சிலோன் பீஎல்சீ (பதிவு இலக்கம் பீகியூ 116) பணிப்பாளர்கள் சபையால் அங்கீகரிக்கப்பட்ட தீர்மானம்*

கடன் கணக்கு இலக்கம்: 290495 - டெரன்ஸ் அல்பிரட் பப்டிஸ் மற்றும் ஒபல்ல அனிட்டா பப்டிஸ்

30.07.2009 ஆந் தேதி கூடிய கொமர்ஷல் பாங்க் ஒப் சிலோன் பீஎல்சீ பணிப்பாளர்கள் சபையினால் பின்வருமாறு ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது.-

"கடன் எடுத்த/காணியை ஈடுவைத்த டெரன்ஸ் அல்பிரட் பப்டிஸ் மற்றும் ஒபல்ல அனிட்டா பப்டிஸ் என்பவர்கள் கொமர்ஷல் பாங்க் ஒப் சிலோன் பீஎல்சீ சார்பாக கொழும்பு பிரசித்த நொத்தாரிசு எச். எம். சி. பி. ஹேரத் 28.03.2006 ஆந் திகதியுடைய முறிவு இலக்கம் 520 மூலம் செலுத்த வெண்டிய கொடுப்பனவில் தவறுகை புரிந்துள்ளதாதலாலும் அத்துடன் கொமர்ஷல் பாங்க் ஒப் சிலோன் பீஎல்சீ க்கு 13.05.2009 ஆந் திகதி வரை ரூபா 18,16,494.52 தற்சமயம் வருமதியாக உள்ளதாலும் கொமர்ஷல் பாங்க் ஒப் சிலோன் பீஎல்சீ பணிப்பாளர்கள் சபையானது 1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிகளினால் கடன்கள் அறவிடப்படல் 4 ஆவது சிறப்பு சட்டத்தின் பிரகாரம் உள்ள சட்ட அதிகாரத்தின்படி மேற்படி முறி இலக்கம் 520 மூலம் கொமர்ஷல் பாங்க் ஒப் சிலோன் பீஎல்சீக்கு ஈடுவைக்கப்பட்டுள்ள இவ் அட்டவணையில் விபரிக்கப்பட்ட காணிகளை மேற்படி சொல்லப்பட்ட பணத்தொகையான ரூபா 18,16,494.52 பணத்தொகையுடன் 14.05.2009 ஆந் திகதி முதல் ஏலத்திகதி வரை ரூபா 14,38,070.46 பணத்தொகைக்கு மேலதிக வட்டியாக

ஆண்டொன்றுக்கு 15% சதவட்டியுடன் விளம்பரச் செலவுகள் வேறு கொடுப்பனவுகள் சேர்த்து அறவிடுவதற்காக கொழும்பு 12, புதுக்கடை வீதி, இலக்கம் 99, உரிமம் பெற்ற ஏலதாரர் எல். பி. சேனநாயக்க மூலம் பகிரங்க ஏலம் மூலம் விற்பனை செய்யப்பட வேண்டுமென தீர்மானிக்கப்பட்டது."

### அட்டவணை

மேல் மாகாணம், கம்பஹா மாவட்டம், அதிகாரி பத்து சியன கோரளையில் மாகொல தெற்கு கிராமத்தில் அமைந்துள்ள நிலஅளவையாளர் கே. பி. சந்திரசேகரவின் 11.07.1993 ஆந் திகதியுடைய வரைபடம் இலக்கம் 988 இல் காண்பிக்கப்பட்ட கொரகஹாவத்த என்ற காணியின் லொட் 4 இக்காணியின் எல்லைகள் - வடக்கு : லொட் 3 ; கிழக்கு : வரைபடம் இலக்கம் 591 இல் லொட் 49 மற்றும் இ. கிரிஸ்டினாவின் காணி ; தெற்கு : இ. கிரிஸ்டினா மற்றவர்களின் காணி மற்றும் வரைபடம் இலக்கம் 591 இல் லொட் 27 ; மேற்கு : வரைபடம் இலக்கம் 591 லொட் 27 மற்றும் 9 இக்காணியின் விஸ்தீரணம் 0ஏ. 0றூ. 17.5பே. மற்றும் இக்காணியில் அமைந்துள்ள கட்டிடங்கள், மரங்கள், எல்லாம் சேர்த்து இக்காணி கம்பஹா மாவட்ட காணிப் பதிவகத்தில் C362/15 இல் பதிவு செய்யப்பட்டது.

மற்றும் வரைபடம் இலக்கம் 591 இல் காண்பிக்கப்பட்ட லொட் 48 ஊடாக மற்றைய எல்லா பொது தேவைகளுக்காகவும் மின்சார இணைப்புகள், தொலைபேசி இணைப்புகள், தண்ணீர் குழாய்கள் போடவும் எந்த நேரத்திலும் போக்குவரத்து செய்யும் உரிமையுடன்.

(திருமதி) ஆர்.ஆர். துனுவில,
கம்பனிச் செயலாளர்

8-89

---

### மக்கள் வங்கி - இமதுவ கிளை

*1986 ஆம் ஆண்டின் 32 ஆம் இலக்கச் சட்டத்தால் திருத்தப்பட்டவாறான 1961ஆம் ஆண்டின் 29 ஆம் இலக்க மக்கள் வங்கிச் சட்டத்தின் 29டி என்னும் பிரிவின் கீழான தீர்மானம்*

1986 ஆம் ஆண்டின் 32 ஆம் இலக்கச் சட்டத்தால் திருத்தப்பட்டவாறான 1961 ஆம் ஆண்டின் 29 ஆம் இலக்க மக்கள் வங்கிச் சட்டத்தின் 29டி என்னும் பிரிவின்கீழான தீர்மானம் மக்கள் வங்கிப் பணிப்பாளர் சபையால் 22.01.2010 ஆந் திகதி நடைபெற்ற அவர்களது கூட்டத்தில் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டதென இத்தால் அறிவிக்கப்படுகின்றது:-

"காலி பிரசித்த நொத்தாரிசு மஹகமகே சூலாங்கனி அரோசினி என்பவரால் 2007.01.12 ஆந் திகதி எழுதி அத்தாட்சிப்படுத்திய இலக்கம் 1716 என்ற ஈட்டு முறியின் பிரகாரம் கொடுப்பனவில் ரனேபுர ஹேவகே கருனாதிலக என்பவர்கள் தவணை தவறியுள்ளார். ஆதலால் இப்பொழுது மேற்படி முறியின் மீது இரண்டு இலட்சத்து தொண்ணூற்றாராயிரத்து எழுபது ரூபா நாற்பத்துமூன்று சதம் (ரூ. 2,96,070.43) மக்கள் வங்கிக்கு செலுத்தப்பட வேண்டியுள்ளபடியால் 2009.02.16 ஆந் திகதியில் இருந்து ஒரு வருடத்துக்கு (19.5%) படிஇரண்டு இலட்சத்து தொண்ணூற்றாராயிரத்து எழுபது ரூபா நாற்பத்துமூன்று சதம் (ரூ. 2,96,070.43) ஏல விற்பனைத் திகதி வரை மேலும் வட்டியையும் மக்கள் வங்கிச் சட்டத்தின் 29எல் (29L) என்னும் பிரிவின் கீழ் அறவிடப்படவேண்டிய பணத்தையும் அதன்பின்னர் கொடுப்பனவுகள் எவையும் பெறப்பட்டு இருப்பின் அவற்றைக் கழித்து இரண்டு இலட்சத்து தொண்ணூற்றாராயிரத்து எழுபது ரூபா நாற்பத்து மூன்று சதம் (ரூ. 2,96,070.43) பணம் அறவிடுவதற்காக உத்தரவுபெற்ற ஏலதாரர் ஜீ. பி. ஆனந்த என்பவரால் இலக்கம் 1716 என்ற ஈட்டு முறியின் மீது மக்கள் வங்கிக்கு ஈடுவைக்கப்பட்ட ஆதனமும் வளவுகளும் பகிரங்க ஏலத்தில் விற்பனை செய்யப்பட வேண்டுமென மக்கள் வங்கிப் பணிப்பாளர் சபை 1986 ஆம் ஆண்டின் 32 ஆம் இலக்கச் சட்டத்தால் திருத்தப்பட்டவாறான 1961 ஆம் ஆண்டின் 29 ஆம் இலக்க மக்கள் வங்கிச் சட்டத்தால் அதற்குரித்தாக்கப்பட்ட தத்துவங்களின்கீழ் இத்தால் தீர்மானிக்கின்றது."

### ஈடுவைக்கப்பட்ட ஆதனத்தின் விவரணம்

தென் மாகாணம், காலி மாவட்டம், தல்பே பத்துவே அகுலுகஹயில் அமைந்துள்ள தியதாளியஹவத்த அல்லது விலேகொடகந்த அல்லது பரகஹவத்த என்ற காணிக்கு அதிகாரம் பெற்ற நிலஅளவையாளர் செல்டன் பீரிஸ் என்பவரால் 2004.12.23 ஆந் திகதி அளந்து தயாரித்த இலக்கம் 1924 என்ற வரைபடத்தின் பிரகாரம் லொட் 2 என்ற துண்டுக்கு எல்லைகள் - வடக்குக்கு : மஹகுபுறயும்; கிழக்கிற்கு : பிரதான வீதியில் இருந்து வீடுகளுக்கு செல்லும் வீதியும் ; தெற்கிற்கு : இக்காணியின் இலக்கம் 4 வீதிக்காக வேறாக்கிய நிலத்துண்டும் ; மேற்கிற்கு : இக்காணியின் இலக்கம் 1 என்ற துண்டும் இதன் எல்லைகளாகும். இந்த எல்லைகளுக்குள் அமைந்திருக்கும் ஒரு றூட் மூன்று தசம் இரண்டு பேர்ச்சஸ்கள் (0ஏ. 1றூ. 3.2பே.) விசாலம் கொண்ட இக்காணியும் அதில் அமைந்துள்ள கட்டடங்கள், மரம், மட்டைகள், உட்பட மற்றும் அனைத்தும் ஆகும்.

இக்காணி காலி மாவட்ட காணிப் பதிவகத்தில் இலக்கம் D897/143 கீழ் பதிவு செய்யப்பட்டுள்ளது.

தென் மாகாணம், காலி மாவட்டம், தல்பே பத்துவே அகுலுகஹயில் அமைந்துள்ள தியதாளியஹவத்த அல்லது விலேகொடகந்த பரகஹவத்த காணிக்கு அதிகாரம் பெற்ற நிலஅளவையாளர் செல்டன் பீரிஸ் என்பவரால் 2004.12.23 ஆந் திகதி அளந்து தயாரித்த இலக்கம் 1924 என்ற வரைபடத்தின் பிரகாரம் லொட் 3 என்ற துண்டுக்கு எல்லைகள் - வடக்குக்கு : மஹகுபுறயும்; கிழக்கிற்கு : ஓடையும் ; தெற்கிற்கு: இக்காணியின் இலக்கம் 8 என்ற துண்டும் ; மேற்கிற்கு : பிரதான வீதியில் இருந்து வீடுகளுக்கு செல்லும் வீதியும் இன் எல்லைகளாகும். இந்த எல்லைகளுக்குள் அமைந்திருக்கும் பதினாறு தசம் நாலு பேர்ச்சஸ்கள் (0ஏ. 10ர. 16.4பே.) விசாலம் கொண்ட இக்காணியும் அதில் அமைந்துள்ள கட்டடங்கள், மரம், மட்டைகள், உட்பட மற்றும் அனைத்தும் ஆகும்.

இக்காணி காலி மாவட்ட காணிப் பதிவகத்தில் இலக்கம் D897/144 கீழ் பதிவுசெய்யப்பட்டுள்ளது.

பணிப்பாளர் சபையின் கட்டளைப்படி,

பிரதேச முகாமையாளர்,
காலி.

மக்கள் வங்கி,
பிரதேச தலைமை அலுவலகம்,
இல. 22,
கீழ் டிக்ஸன் வீதி,
காலி.

8-105

**மக்கள் வங்கி - பருத்தித்துறை கிளை**

*1986 ஆம் ஆண்டின் 32 ஆம் இலக்கச் சட்டத்தால் திருத்தப்பட்டவாறான 1961ஆம் ஆண்டின் 29 ஆம் இலக்க மக்கள் வங்கிச் சட்டத்தின் 29டி என்னும் பிரிவின் கீழான தீர்மானம்*

1986 ஆம் ஆண்டின் 32 ஆம் இலக்கச் சட்டத்தால் திருத்தப்பட்டவாறான 1961 ஆம் ஆண்டின் 29 ஆம் இலக்க மக்கள் வங்கிச் சட்டத்தின் 29டி என்னும் பிரிவின்கீழான தீர்மானம் மக்கள் வங்கிப் பணிப்பாளர் சபையால் 2008.06.27 ஆந் திகதி நடைபெற்ற அவர்களது கூட்டத்தில் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டதென இத்தால் அறிவிக்கப்படுகின்றது:-

"யாழ்ப்பாண பிரதேச நொத்தாரிசு திருமதி லிங்கா துரைராஜா அவர்களால் அத்தாட்சிப்படுத்தப்பட்ட 2004.05.30 ஆந் திகதி கொண்ட இல. 4403 மற்றும் 2005.05.19 ஆந்திகதி கொண்ட இல. 5145 ஆகிய ஈட்டு முறிகளின் பிரகாரம் வங்கிக்குச் செலுத்தவேண்டிய வருமதிக் கொடுப்பனவில் திரு. சச்சிதானந்தம் சூரியப்பெருமான் அவர்கள் தவணை தவறியுள்ளமையினாலும், குறிப்பிட்ட ஈட்டுமுறியின் கீழ் தற்போது பத்து இலட்சத்து ஐம்பத்தையாயிரத்து ஐநூறு ரூபா (ரூ. 10,55,500) பணத்தொகையை ஈட்டு முறி இல. 4403 இன் பிரகாரமும் பதின்மூன்று இலட்சத்து இருபத்தையாயிரம் ரூபா (ரூ. 13,25,000) பணத்தொகையை ஈட்டு முறி இல. 5145 பிரகாரமும் தற்போது மக்கள் வங்கிக்கு வருமதியாக சேரவேண்டி உள்ளது.

ஆகையால் மக்கள் வங்கிப் பணிப்பாளர் சபை அதன் 1986 ஆம் ஆண்டின் 32 ஆம் இலக்கச் சட்டத்தால் திருத்தப்பட்டவாறான 1961 ஆம் ஆண்டின் 29 ஆம் இலக்க மக்கள் வங்கிச் சட்டத்தினால் அதற்கு உரித்தாக்கப்பட்டுள்ள தத்துவங்களின் கீழ் இவ்வருமதி கொடுப்பனவுகளை அறவிடுவதற்காக மேல் குறிப்பிட்ட ஈட்டு முறிகள் 4403 மற்றும் 5145 இன் கீழ் வங்கிக்கு ஈடு செலுத்தப்பட்ட ஆதனங்களை யாழ்ப்பாணம் உத்தரவு பெற்ற ஏலதாரர் கார்த்திகேசு பொன்னையா பாலகிருஷ்ணன் அவர்களால் பகிரங்க ஏலத்தில் விற்கப்பட்டு வங்கிக்கு வருமதியாக வரவேண்டிய சொல்லப்பட்ட தொகை பத்து இலட்சத்து ஐம்பத்தையாயிரத்து ஐநூறு ரூபா (ரூ. 10,55,500) ஐயும் பத்து இலட்சத்து ஐம்பதாயிரம் ரூபா (ரூ. 10,50,000) க்கு 10.01.2006 ஆந் திகதியிலிருந்து விற்பனைத் திகதி வரை 20.25% வீதம் வருடாந்த வட்டியையும் மற்றும் பதின்மூன்று இலட்சத்து இருபத்தையாயிரம் ரூபா (ரூ. 13,25,000) வையும் ரூபா பதின்மூன்று இலட்சத்து இருபத்தையாயிரம் ரூபா (ரூ. 13,25,000) 06.11.2006 ஆந் திகதியிலிருந்து விற்பனைத் திகதி வரைக்கும் 20.25% வீதம் வருடாந்த வட்டியும் "29எல்" பிரகாரம் அறவிடப்படும் ஏனைய வரவுத் தொகைகளையும் அறவிடவேண்டும் என்பதை தீர்மானம் செய்துள்ளது.

**ஈடுவைக்கப்பட்ட ஆதனத்தின் விவரணம்**

1. வடக்கு மாகாணம், யாழ்ப்பாணம் மாவட்டம், வடமராட்சிப் பிரிவு பருத்தித்துறை பரிஷ். வென்றிபாகுதேவன் குறுச்சி, இறை புலொலி கிழக்கு 'ஆயில் நின்றகலட்டி' நிலப்பரப்பு 01 வ. செ. குளி 14. என உத்தரவுபெற்ற நிலஅளவையாளர் அ. வேல்முருகுவின் 06.3.2005 ஆந் திகதிய 1718 ஆம் இலக்க வரைபடத்தின்படி இப்பொழுது துண்டு 1 என்று வெளிப்படுத்தப்பட்டு மேற்குறிப்பிட்ட நிலப்பரப்பு 01 வ. செ. குளி 14 வீடும் கட்டிடங்களும் உரிய அனுபந்தங்களுடன் சொல்லப்பட்ட விஸ்தீரணம் நிலப்பரப்பு 01 வ. செ. 14 குளிக்கும் எல்லை ; கிழக்கு : இராசையா கைம்பெண் லட்சுமிப்பிள்ளையின் உரிமையாளரின் ஆதனம். வடக்கு : விஷ்வலிங்கம் வேலாயுதத்தினது ஆதனம்; மேற்கு : பிரதான வீதி; தெற்கு : பிள்ளையார் கோவிலுக்கு சொந்தமான ஆதனமும் ஒழுங்கையுடன் வடக்கு எல்லையில் இருக்கும் கிணற்றின் மூன்றில் இரண்டு பங்கு. 2/3, பருத்தித்துறை காணிப் பதிவாளர் அலுவலகத்தில் இல. ஏ579/167 இன் கீழ் இவ்விபரங்கள் பதிவு செய்யப்பட்டுள்ளது.



பணிப்பாளர் சபையின் கட்டளைப்படி,

உதவிப் பொது முகாமையாளர்,
வடக்கு வலயம்.

மக்கள் வங்கி,
பருத்தித்துறை.

8-108

---

**மக்கள் வங்கி**

*1986 ஆம் ஆண்டின் 32 ஆம் இலக்கச் சட்டத்தால் திருத்தப்பட்டவாறான 1961ஆம் ஆண்டின் 29 ஆம் இலக்க மக்கள் வங்கிச் சட்டத்தின் 29டி என்னும் பிரிவின் கீழான தீர்மானம்*

1986 ஆம் ஆண்டின் 32 ஆம் இலக்கச் சட்டத்தால் திருத்தப்பட்டவாறான 1961 ஆம் ஆண்டின் 29 ஆம் இலக்க மக்கள் வங்கிச் சட்டத்தின் 29டி என்னும் பிரிவின்கீழான தீர்மானம் மக்கள் வங்கிப் பணிப்பாளர் சபையால் 2007.11.23 ஆந் திகதி நடைபெற்ற அவர்களது கூட்டத்தில் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டதென இத்தால் அறிவிக்கப்படுகின்றது:-

"புத்திக சாகர பொன்சேக்கா என்பவர், மக்கள் வங்கியின் சார்பில் நுவரேலியாவைச் சேர்ந்த நொத்தாரிசு சபாபதி முருகையா ரகுபதி ராமராஜ் என்பவரால் அத்தாட்சிப்படுத்தப்பட்ட 2006, ஏப்பிறல் 1 ஆந் திகதிய 1656 ஆம் இலக்க முறிமீது வருமதியாகவுள்ள கொடுப்பனவில் தவணை தவறியுள்ளார் ஆதலால், சொல்லப்பட்ட முறிமீது பதின்நான்கு இலட்சத்து நான்காயிரத்து நாநூற்று எண்பத்தைந்து ரூபா எண்பத்தைந்து சதம் (ரூ. 14,04,485.85) கொண்ட தொகை இப்பொழுது மக்கள் வங்கிக்கு வருமதியாகவும் சேரவேண்டியுள்ளது. சொல்லப்பட்ட பதின்நான்கு இலட்சத்து நான்காயிரத்து நாநூற்று எண்பத்தைந்து ரூபா எண்பத்தைந்து சதம் (ரூ. 14,04,485.85) கொண்ட தொகையையும் 2007.02.09 ஆந் திகதி முதல் விற்பனைத் திகதி வரை ஆண்டொன்றுக்கு (12.5%) வீதப்படியான மேலதிக வட்டியையும், 2007.06.05 ஆந் திகதி முதல் விற்பனைத் திகதிவரை ஆண்டொன்றக்கு 16.5 வீதப்படியான மேலதிக வட்டியையும் செலவு தொகைகளையும், சொல்லப்பட்ட மக்கள் வங்கிச் சட்டத்தின் 29எல் என்னும் பிரிவின் கீழ் அறவிடற்பாலனவான பணத்தையும் அதன்பின்னர் கொடுப்பனவுகள் (ஏதேனும்) பெறப்பட்டிருப்பின் அதனைக் கழித்து அறவிடுவதற்காக, சொல்லப்பட்ட 1656 ஆம் இலக்க ஈட்டுமுறியினால் சொல்லப்பட்ட வங்கிக்கு ஈடுவைக்கப்பட்ட ஆதனமும் வளவுகளும் வளவ்வத்த கெஸ்பாவவைச் சேர்ந்த உத்தரவுபெற்ற ஏலதாரர் ஏ. எஸ். லியனகே அவர்களால் பகிரங்க ஏலத்தில் விற்பனை செய்யப்படும் என வங்கிப் பணிப்பாளர் சபை 1986 ஆம் ஆண்டின் 32 ஆம் இலக்கச் சட்டத்தால் திருத்தப்பட்டவாறான 1961 ஆம் ஆண்டின் 29 ஆம் இலக்க மக்கள் வங்கிச் சட்டத்தால் அதற்குரித்தாக்கப்பட்ட தத்துவங்களின்கீழ் இத்தால் தீர்மானிக்கின்றது."

**ஈடுவைக்கப்பட்ட ஆதனத்தின் விவரணம்**

மத்திய மாகாணம், நுவரெலியாப் பிரிவிலும் மாவட்டத்திலுமுள்ள ஓயா பலாத்தக் கோறளையில் நுவரேலியா மாநகர சபை

எல்லைகளினுள் கிரான்ட் ஹோட்டல் வீதியில் அமைந்துள்ளதும், கிரான்ட் ஹோட்டல் வளவுகள் எனவழைக்கப்பட்டு அறியப்படுவதும், உரிமம் பெற்ற நிலஅளவையாளர் டபிள்யூ. பீ. கே. எச். ஆர். குணவர்த்தன என்பவரினால் தயாரிக்கப்பட்ட 2002.06.09 ஆந் திகதிய 653 ஆம் இலக்க வரைபடத்தில் குறித்துக்காட்டப்பட்டதும், காணித்துண்டம் 1 என அடையாளமிடப்பட்டதும், பிரிக்கப்பட்டு வரையறுக்கப்பட்டதுமான அக்காணித்துண்டு அடங்கலும் ; அதன் எல்லைகள் - வடக்கில் : வீதி; கிழக்கில் : இவ்வரைபடத்திலுள்ள காணித்துண்டம் 2 ; தெற்கில் : இவ்வரைபடத்திலுள்ள காணித்துண்டம் 2 உம் கிராண்ட் ஹோட்டல் வளவுகளும் மற்றும் ; மேற்கில் : கிராண்ட ஹோட்டல் வளவுகள்; பரப்பளவில் இது. அதன்மீதுள்ள எல்லாவற்றுடனும் ஐந்து தசம் பதினெட்டுப் பேர்ச்சஸ்கள் (0ஏ. 0றூ. 5.18பே.) கொண்டுள்ளதுடன், நுவரேலியாக் காணிப் பதிவகத்தில் தொகுதி/பக்கம் ஏ81/177 என்பதில் பதிவு செய்யப்பட்டுமுள்ளது.

பணிப்பாளர் சபையின் கட்டளைப்படி,

பிரதேச முகாமையாளர்,
நுவரேலியா.

மக்கள் வங்கி,
பிரதேச தலைமை அலுவலகம்,
இல. 40, பார்க் வீதி,
நுவரேலியா.

8-109

---

**மக்கள் வங்கி - கட்டுநாயக்கா கிளை**

*1986 ஆம் ஆண்டின் 32 ஆம் இலக்கச் சட்டத்தால் திருத்தப்பட்டவாறான 1961ஆம் ஆண்டின் 29 ஆம் இலக்க மக்கள் வங்கிச் சட்டத்தின் 29டி என்னும் பிரிவின் கீழான தீர்மானம்*

1986 ஆம் ஆண்டின் 32 ஆம் இலக்கச் சட்டத்தால் திருத்தப்பட்டவாறான 1961 ஆம் ஆண்டின் 29 ஆம் இலக்க மக்கள் வங்கிச் சட்டத்தின் 29டி என்னும் பிரிவின்கீழான தீர்மானம் மக்கள் வங்கிப் பணிப்பாளர் சபையால் 29.04.2010 ஆந் திகதி நடைபெற்ற அவர்களது கூட்டத்தில் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டதென இத்தால் அறிவிக்கப்படுகின்றது:-

''கொழும்பு பிரசித்த நொத்தாரிசு விஜித ஏ டீ சில்வா அவர்களால் அத்தாட்சிப்படுத்தப்பட்ட 17.08.2006 ஆந் திகதி கொண்ட 3545 ஆம் இலக்க முறியின் பிரகாரம் வருமதியான கொடுப்பனவில் கொஹிலவத்தே கங்கானமலாகே விமலா காந்தி மற்றும் ரணசிங்க ஆரச்சில்லாகே ரெஜினோல்ட் பிரேமன் ஜோசப் ரனசிங்க என்பவர்கள் தவணை தவறியுள்ளமையாலும் குறிப்பிட்ட முறியின் கீழ் தற்போது மூன்று இலட்சத்து முப்பத்தேழாயிரத்து எண்பது ரூபா நாற்பத்தைந்து சதம் (ரூ. 3,37,080.45) பணத்தொகை தற்போது மக்கள் வங்கிக்கு வருமதியாக வரவேண்டியுள்ளது. மேலும் மூன்று இலட்சத்து முப்பத்தேழாயிரத்து எண்பது ரூபா நாற்பத்தைந்து சதம் (ரூ. 3,37,080.45) பணத்தொகைக்காக 26.11.2009 ஆந் திகதியிலிருந்து ஏலம் செய்யப்படும் திகதிவரை 16.75% வட்டியுடன் மேலும் மக்கள் வங்கிச் சட்டத்தின் '29L' பிரிவின் பிரகாரம் அறவிடப்பட வேண்டிய பணங்களும், கட்டணங்களும் மேலும் ஏதாவது கொடுப்பனவுகள் பெறப்பட்டு இருப்பின் அவை நீங்கலாக குறிப்பிட்ட மூன்று இலட்சத்து முப்பத்தேழாயிரத்து எண்பது ரூபா நாற்பத்தைந்து சதம் (ரூ. 3,37,080.45) பணத்தொகையை அறவிடுவதற்கு கொழும்பு உத்தரவுபெற்ற ஏலதாரர்களான மட்டுப்படுத்தப்பட்ட டல்லஸ் மற்றும் கெலார்ட் (தனியார்) நிறுவனத்தினால் குறிப்பிட்ட இலக்கம் 3545 கொண்ட முறியின் கீழ் குறிப்பிட்ட வங்கிக்கு ஈடுவைக்கப்பட்டுள்ள ஆதனமும் வளவுகளும் பகிரங்க ஏலத்தில் விற்பனை செய்யப்பட வேண்டுமென மக்கள் வங்கிப் பணிப்பாளர் சபை 1986 ஆம் ஆண்டின் 32 ஆம் இலக்கச் சட்டத்தால் திருத்தப்பட்டவாறான 1961 ஆம் ஆண்டின் 29 ஆம் இலக்க மக்கள் வங்கிச் சட்டத்தால் அதற்குரித்தாக்கப்பட்ட தத்து வங்களின்கீழ் இத்தால் தீர்மானிக்கின்றது.''

**ஈடுவைக்கப்பட்ட ஆதனத்தின் விவரணம்**

மேல் மாகாணம், கம்பஹா மாவட்டம், அலுத்குரு கோரளை, துனுகஹபத்துவ கட்டான அதிகாரப் பிரிவில் நீர்கொழும்பு காணிப் பதிவக எல்லைக்கு உட்பட்ட கிம்புலாபிட்டிய எனும் இடத்தில் அமைந்துள்ள இத்தகொடல்ல எனும் காணிக்கு உத்தரவுபெற்ற நிலஅளவையாளர் டபிள்யூ. டீ. என். செனவிரத்ன அவர்களால் 09.12.1990 ஆந் திகதி அளந்து தயாரிக்கப்பட்ட இலக்கம் 917 எனும் வரைபடத்தில் காணப்படும் இலக்கம் 01 எனப்படும் காணித்துண்டின் எல்லைகளாக - வடகிழக்கில் : அதே காணியின் 02 ஆம் இலக்கக் காணித்துண்டும் ; தென்கிழக்கில் : கிராம சபைப் பாதையும் ; தென்மேற்கில் : பாதையும் மற்றும் வடமேற்கில் : எல். பீ. சமரசேன அப்புஹாமி என்பவரின் காணியும் எல்லைகளாக அமைந்த ஒரு றூட் இருபத்திரண்டு இரண்டு தசம் ஒன்று ஏழு பேர்ச்சஸ்கள் (0ஏ. 1றூ. 22.17பே.) விசாலமான காணியும் அதற்குற்பட்ட மரங்கள், பயிர்ச்செய்கைகள், கட்டிடங்கள் சகலதுமாகும். இந்தக் காணி நீர்கொழும்பு காணிப் பதிவகத்தில் இலக்கம் Neg/ Kata/10/54 இன் கீழ் பதிவு செய்யப்பட்டுள்ளது.

மேற்குறிப்பிட்ட வரைபடத்தில் காட்டப்பட்டுள்ள பாதை உரித்துக்களும் உள்ளடங்கும்.

பணிப்பாளர் சபையின் கட்டளைப்படி,

பிரதேச முகாமையாளர்,
கம்பஹா.

மக்கள் வங்கி,
பிரதேச தலைமை அலுவலகம்,
இலக்கம் 131, கண்டி வீதி,
பெலும்மஹர,
முதுன்கொட.

8-110

---

**மக்கள் வங்கி - கட்டுநாயக்கா கிளை**

*1986 ஆம் ஆண்டின் 32 ஆம் இலக்கச் சட்டத்தால் திருத்தப்பட்டவாறான 1961ஆம் ஆண்டின் 29 ஆம் இலக்க மக்கள் வங்கிச் சட்டத்தின் 29டி என்னும் பிரிவின் கீழான தீர்மானம்*

1986 ஆம் ஆண்டின் 32 ஆம் இலக்கச் சட்டத்தால் திருத்தப்பட்டவாறான 1961 ஆம் ஆண்டின் 29 ஆம் இலக்க மக்கள் வங்கிச் சட்டத்தின் 29டி என்னும் பிரிவின்கீழான தீர்மானம் மக்கள் வங்கிப் பணிப்பாளர்

சபையால் 26.02.2010 ஆந் திகதி நடைபெற்ற அவர்களது கூட்டத்தில் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டதென இத்தால் அறிவிக்கப்படுகின்றது:-

"கொழும்பு பிரசித்த நொத்தாரிசு விஜித ஏ டீ சில்வா அவர்களால் அத்தாட்சிப்படுத்தப்பட்ட 23.06.2004 ஆந் திகதி கொண்ட 1427 ஆம் இலக்க முறியின் பிரகாரம் வருமதியான கொடுப்பனவில் சமிந்த சந்திக லொகுராலலாகே என்பவர் தவணை தவறியுள்ளமையாலும் குறிப்பிட்ட முறியின் கீழ் தற்போது மூன்று இலட்சத்து நாற்பத்தெட்டாயிரத்து நாநூற்று இருபத்தைந்து ரூபா ஐந்து சதம் (ரூ. 3,48,425.05) பணத்தொகை தற்போது மக்கள் வங்கிக்கு வருமதியாகவும் சேரவேண்டியுள்ளது. மேலும் மூன்று இலட்சத்து நாற்பத்தெட்டாயிரத்து நாநூற்று இருபத்தைந்து ரூபா ஐந்து சதம் (ரூ. 3,48,425.05) பணத்தொகைக்காக 24.06.2009 ஆந் திகதியிலிருந்து ஏலம் செய்யப்படும் திகதிவரை 15.75% வட்டியுடன் மேலும் மக்கள் வங்கிச் சட்டத்தின் '29L' பிரிவின் பிரகாரம் அறவிடப்பட வேண்டிய பணங்களும், கட்டணங்களும் மேலும் ஏதாவது கொடுப்பனவுகள் பெறப்பட்டு இருப்பின் அவை நீங்கலாக குறிப்பிட்ட மூன்று இலட்சத்து நாற்பத்தெட்டாயிரத்து நாநூற்று இருபத்தைந்து ரூபா ஐந்து சதம் (ரூ. 3,48,425.05) பணத்தொகையை அறவிடுவதற்கு கொழும்பு உத்தரவுபெற்ற ஏலதாரர்களான மட்டுப்படுத்தப்பட்ட டல்லஸ் மற்றும் கெலார்ட் (தனியார்) நிறுவனத்தினால் குறிப்பிட்ட இலக்கம் 1427 கொண்ட முறியின் கீழ் குறிப்பிட்ட வங்கிக்கு ஈடுவைக்கப்பட்டுள்ள ஆதனமும் வளவுகளும் பகிரங்க ஏலத்தில் விற்பனை செய்யப்பட வேண்டுமென மக்கள் வங்கிப் பணிப்பாளர் சபை 1986 ஆம் ஆண்டின் 32 ஆம் இலக்கச் சட்டத்தால் திருத்தப்பட்டவாறான 1961 ஆம் ஆண்டின் 29 ஆம் இலக்க மக்கள் வங்கிச் சட்டத்தால் அதற்குரித்தாக்கப்பட்ட தத்துவங்களின்கீழ் இத்தால் தீர்மானிக்கின்றது."

### ஈடுவைக்கப்பட்ட ஆதனத்தின் விவரணம்

மேல் மாகாணம், கம்பஹா மாவட்டம், அலுத்குரு கோரளை, தாஸிய பத்துவ கட்டுநாயக்க நகர சபை எல்லைக்கு உட்பட்ட சீதுவையில் வரிமதிப்பீட்டிலக்கம் 225, 225/1 மற்றும் 225/2 கொண்ட அமந்தெலுவை, பேஸ்லைன் வீதியில் அமைந்துள்ள கீனகஹவத்தை எனப்படும் காணிக்கு உத்தரவுபெற்ற நிலஅளவையாளர் எம். டீ. ஜே. வீ. பெரேரா அவர்களால் 04.10.1986 ஆந் திகதி அளந்து தயாரிக்கப்பட்ட இலக்கம் 9263 எனும் வரைபடத்தில் காணப்படும் இலக்கம் 03 எனப்படும் காணித்துண்டின் எல்லைகளாக வடக்கில் : முன்னர் தோமஸ் பெரேரா என்பவரின் காணியும் தற்போது கே. ஈ. பெரேரா என்பவரின் காணியும் ; கிழக்கில் : 04 ஆம் இலக்கக் காணித்துண்டும் ; தெற்கில் : பாதையும் மற்றும்; மேற்கில் : 02 ஆம் இலக்கக் காணித்துண்டும் எல்லைகளாக அமைந்த முப்பது தசம் மூன்று ஏழு ஐந்து பேர்ச்சஸ்கள் (0ஏ. 0றூ. 30.375பே.) விசாலமான காணியும் அதற்குற்பட்ட மரங்கள், பயிர்ச்செய்கைகள், கட்டிடங்கள் சகலதுமாகும். இந்தக் காணி நீர்கொழும்பு காணிப் பதிவகத்தில் இலக்கம் C 735/202 இன் கீழ் பதிவு செய்யப்பட்டுள்ளது.

குறிப்பிட்ட வரைபடத்தில் காணப்படும் பாதை உரித்துக்களும் அடங்கும்.

பணிப்பாளர் சபையின் கட்டளைப்படி,

பிரதேச முகாமையாளர்,
கம்பஹா.

மக்கள் வங்கி,
பிரதேச தலைமை அலுவலகம்,
இலக்கம் 131, கண்டி வீதி,
பெலும்மஹர,
முதுன்கொட.

8-111

## மக்கள் வங்கி - கட்டுநாயக்கா கிளை

### 1986 ஆம் ஆண்டின் 32 ஆம் இலக்கச் சட்டத்தால் திருத்தப்பட்டவாறான 1961ஆம் ஆண்டின் 29 ஆம் இலக்க மக்கள் வங்கிச் சட்டத்தின் 29டி என்னும் பிரிவின் கீழான தீர்மானம்

1986 ஆம் ஆண்டின் 32 ஆம் இலக்கச் சட்டத்தால் திருத்தப்பட்டவாறான 1961 ஆம் ஆண்டின் 29 ஆம் இலக்க மக்கள் வங்கிச் சட்டத்தின் 29டி என்னும் பிரிவின்கீழான தீர்மானம் மக்கள் வங்கிப் பணிப்பாளர் சபையால் 25.05.2010 ஆந் திகதி நடைபெற்ற அவர்களது கூட்டத்தில் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டதென இத்தால் அறிவிக்கப்படுகின்றது:-

"கம்பஹா பிரசித்த நொத்தாரிசு எஸ். பீ. எல். விஜேசிரிவர்தன அவர்களால் அத்தாட்சிப்படுத்தப்பட்ட 02.04.2009 ஆந் திகதி கொண்ட 14485 ஆம் இலக்க முறியின் பிரகாரம் வருமதியான கொடுப்பனவில் அழஹகக்கோன் ஆரச்சிகே சுனந்த அழகக்கோன் அல்லது சுனந்த அழககோன் அல்லது விஜித மற்றும் தம்மிட்டகே சம்பா பிரியங்கனி ஜயவர்தன என்பவர்கள் தவணை தவறியுள்ளமையாலும் குறிப்பிட்ட முறியின் கீழ் தற்போது ஆறு இலட்சத்து மூவாயிரத்து முந்நூற்று முப்பத்துமூன்று ரூபா முப்பத்தெட்டு சதம் (ரூ. 6,03,333.38) பணத்தொகை தற்போது மக்கள் வங்கிக்கு வருமதியாக வரவேண்டியுள்ளது. மேலும் ஆறு இலட்சத்து மூவாயிரத்து முந்நூற்று முப்பத்துமூன்று ரூபா முப்பத்தெட்டு சதம் (ரூ. 6,03,333.38) பணத்தொகைக்காக 08.01.2010 ஆந் திகதியிலிருந்து ஏலம் செய்யப்படும் திகதிவரை 27% வட்டியுடன் மேலும் மக்கள் வங்கிச் சட்டத்தின் '29L' பிரிவின் பிரகாரம் அறவிடப்பட வேண்டிய பணங்களும், கட்டணங்களும் மேலும் ஏதாவது கொடுப்பனவுகள் பெறப்பட்டு இருப்பின் அவை நீங்கலாக குறிப்பிட்ட ஆறு இலட்சத்து மூவாயிரத்து முந்நூற்று முப்பத்துமூன்று ரூபா முப்பத்தெட்டு சதம் (ரூ. 6,03,333.38) பணத்தொகையை அறவிடுவதற்கு கொழும்பு உத்தரவுபெற்ற ஏலதாரர்களான மட்டுப்படுத்தப்பட்ட டல்லஸ் மற்றும் கெலார்ட் (தனியார்) நிறுவனத்தினால் குறிப்பிட்ட இலக்கம் 14485 கொண்ட முறியின் கீழ் குறிப்பிட்ட வங்கிக்கு ஈடுவைக்கப்பட்டுள்ள ஆதனமும் வளவுகளும் பகிரங்க ஏலத்தில் விற்பனை செய்யப்பட வேண்டுமென மக்கள் வங்கிப் பணிப்பாளர் சபை 1986 ஆம் ஆண்டின் 32 ஆம் இலக்கச் சட்டத்தால் திருத்தப்பட்டவாறான 1961 ஆம் ஆண்டின் 29 ஆம் இலக்க மக்கள் வங்கிச் சட்டத்தால் அதற்குரித்தாக்கப்பட்ட தத்து வங்களின்கீழ் இத்தால் தீர்மானிக்கின்றது."

கம்பஹா பிரசித்த நொத்தாரிசு எஸ். பீ. எல். விஜேசிரிவர்தன அவர்களால் அத்தாட்சிப்படுத்தப்பட்ட 02.04.2009 ஆந் திகதி கொண்ட 14487 கொண்ட ஈட்டு உறுதியின் மூலம் கடனாக வழங்கப்பட்ட 200,000 ரூபா கடன் வசதி அவ்வாறான நிலையிலேயே உள்ளது.

### ஈடுவைக்கப்பட்ட ஆதனத்தின் விவரணம்

மேல் மாகாணம், கம்பஹா மாவட்டம், அலுத்குரு கோரளை, தாஸிய பத்துவ கட்டான பிரதேச சபை எல்லைக்கு உட்பட்ட கோவின்ன கிராமத்தில் அமைந்துள்ள பாலுகஹவத்தை அல்லது ரிக்கஹவத்தை மற்றும் ஹிக்கஹவத்தை எனும் காணிக்கு உத்தரவுபெற்ற நிலஅளவையாளர் ஆர். ஐ. பெர்னாண்டோ அவர்களால் அளந்து தயாரிக்கப்பட்ட 30.04.1997 ஆந் திகதி கொண்ட இலக்கம் 4638 எனும் வரைபடத்தில் காணப்படும் 02 ஆம் இலக்கக் காணித்துண்டின் எல்லைகளாக வடக்கில் : எம். ஏ. வில்பட் மாவத்தையும் ; கிழக்கில் : டீ. ஜீ. அப்புஹாமியின் காணியும் ; தெற்கில் : 03 ஆம் இலக்கக் காணித்துண்டும் மற்றும் ; மேற்கில் : 01 ஆம் இலக்கக் காணித்துண்டும் எல்லைகளாக அமைந்த பதினான்கு தசம் ஐந்து பூச்சியம் பேர்ச்சஸ்கள்

(0ஏ. 0றூ. 14.50பே.) விசாலமான காணியும் அதற்குற்பட்ட மரங்கள், பயிர்ச்செய்கைகள், கட்டிடங்கள் சகலதுமாகும். இந்தக் காணி நீர்கொழுமபு காணிப் பதிவகத்தில் இலக்கம் C 797/207 இன் கீழ் பதிவு செய்யப்பட்டுள்ளது.

குறிப்பிட்ட வரைபடத்தில் காணப்படும் பாதை உரித்துகளும் அடங்கும்.

பணிப்பாளர் சபையின் கட்டளைப்படி,

பிரதேச முகாமையாளர்,
கம்பஹா.

மக்கள் வங்கி,
பிரதேச தலைமை அலுவலகம்,
இலக்கம் 131, கண்டி வீதி,
பெலும்மஹர,
முதுன்கொட.

8-112

---

## இ. அ. நி. கூ. வங்கி

(இலங்கை அபிவிருத்தி நிதிக் கூட்டுத்தாபனம் என முன்னர் அறியப்பட்டது)

### 1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிகளினால் கடன்கள் அறவிடப்படுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 4 ஆம் பிரிவின் கீழ் நிறைவேற்றப்பட்ட தீர்மானம் பற்றிய அறிவித்தல்

1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிகளினால் கடன்கள் அறவிடப்படுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 8 ஆம் பிரிவின் நியதிகளின்படி, பின்வரும் தீர்மானமானது, இ. அ. நி. கூ. வங்கியின் பணிப்பாளர் சபையினால் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டுள்ளதென இத்தால் அறிவிக்கப்படுகின்றது :-

"காலியைச் சேர்ந்த சேமகே சந்திர குமார அபேரத்ன என்பவர், இ. அ. நி. கூ. வங்கி சார்பில் பிரசித்த நொத்தாரிசு ஆர். எல். வீ. டி. சில்வா என்பவரினால் அத்தாட்சிப்படுத்தப்பட்ட 2007, நவெம்பர் 13 ஆந் திகதிய 4887 ஆம் இலக்கங்கொண்ட முதனிலை ஈட்டுமுறியின் மீது வருமதியாகவுள்ள கொடுப்பனவுகளைச் செலுத்துவதில் தவணை தவறியுள்ளாராதலாலும், மேற்கூறப்பட்ட 4887 ஆம் இலக்க ஈட்டுமுறியின் மீது 2009, ஒற்றோபர் 31 ஆந் திகதியன்றுள்ளவாறாக அறுபத்து நான்கு இலட்சத்து ஐம்பதாயிரத்து எழுநூற்று எழுபத்தொன்பது ரூபா ஐம்பத்தொன்பது சதம் (ரூ. 64,50,779.59) கொண்ட தொகை மீது ஆண்டொன்றுக்குப் பதின்மூன்று சதவீத (13%) வட்டியும் சொல்லப்பட்ட சேமகே சந்திர குமார அபேரத்ன என்பவரிடமிருந்து இ. அ. நி. கூ. வங்கிக்குச் சேருமதியாகவும் வருமதியாகவும் இருக்கின்றதாதலாலும். இ. அ. நி. கூ. வங்கியின் பணிப்பாளர் சபையானது, 1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிகளினால் கடன்கள் அறவிடப்படுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தினாலும், பின்னர் திருத்தப்பட்டவாறான 1955 ஆம் ஆண்டின் 35 ஆம் இலக்க இலங்கை அபிவிருத்தி நிதிக் கூட்டுத்தாபனச் சட்டத்தினாலும் சபைக்கு உரித்தாக்கப்பட்ட தத்துவங்களின்கீழ் 1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிகளினால் கடன்கள் அறவிடப்படுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 13 ஆம் பிரிவின் நியதிகளின்படி மேற்சொல்லப்பட்ட ஈட்டுமுறியின் பொருத்தனைகளுக்கிணங்க, இ. அ. நி. கூ. வங்கியினால் உறப்பட்ட காணியையும் வளவுகளையும் விளம்பரப்படுத்துவதற்கான செலவுகள், விற்பதற்கான செலவுகள், செலவிடப்பட்ட மற்றெல்லாப் பணங்கள், செலவு தொகைகள் மற்றும் வேறு இறுப்பனவுகள் என்பவற்றோடு சேர்த்து அறுபத்து நான்கு இலட்சத்து ஐம்பதாயிரத்து எழுநூற்று எழுபத்தொன்பது ரூபா ஐம்பத்தொன்பது சதம் (ரூ. 64,50,779.59) கொண்ட தொகையை 2009, நவெம்பர் 1 ஆந் திகதி தொடக்கம் விற்பனைத் திகதிவரை அறுபது இலட்சத்து நாற்பத்தொன்பதாயிரத்து அறுநூற்று இருபத்து இரண்டு ரூபா ஐம்பத்தொன்பது சதம் (ரூ. 60,41,622.59) கொண்ட தொகை மீது ஆண்டொன்றுக்கு மூன்று சதவீத (13%) வட்டியுடன் அல்லது விற்பனை செய்யப்படும் நேரத்தில் செலுத்தப்படாதெஞ்சியுள்ள அதன் ஏதேனும் பாகத்தினை அறவிடுவதற்காக 4887 ஆம் இலக்கத்தைக்கொண்ட, மேற்சொல்லப்பட்ட ஈட்டுமுறி மூலம் இ. அ. நி. கூ. வங்கிக்கு ஈடுவைக்கப்பட்ட கீழே விபரிக்கப்படும் சொல்லப்பட்ட காணியும் வளவுகளும் உத்தரவுபெற்ற ஏலதாரர் திருவாளர் ஷொக்மன் அன்ட் சமரவிக்ரம அவர்களினால் பகிரங்க ஏலத்தில் விற்பனை செய்யப்பட வேண்டுமென இத்தால் தீர்மானிக்கின்றது."

### 4887 ஆம் இலக்க ஈட்டுமுறி மூலம் ஈடுவைக்கப்பட்ட ஆதனத்தின் விவரணம்

1. தென் மாகாணம், காலி மாவட்டத்திலுள்ள மாநகரசபை எல்லைகளினுள்ளும் நான்கு எல்லைகளினுள்ளும் கும்பல்வெல்லவில் அமைந்துள்ளதும், எம். டீ. ரட்னசூரிய மாவத்தை எனவும் அழைக்கப்படும் பட்டகன்வில புதிய ஒழுங்கையில் 4 ஆம் வரிமதிப்பீட்டிலக்கத்தை (பழைய இல. 85) கொண்டதும், உரிமம் பெற்ற நிலஅளவையாளர் திரு. யூ. வேவல்வில என்பவரினால் தயாரிக்கப்பட்ட 2000.09.29 ஆந் திகதிய 205 ஆம் இலக்க வரைபடத்திற் குறித்துக்காட்டப்பட்டதும், தெனியாவத்தவின் காணித்துண்டங்கள் 2ஏ மற்றும் 2வை எனவழைக்கப்படும் காணியின் வரையறுக்கப்பட்ட காணித்துண்டும் 2ஏ[1] இனதாய் அதன்மீதுள்ள அம்மண்ணினதும் எல்லாப் பயிர்களினதும் முழுமையும்; சொல்லப்பட்ட காணித்துண்டம் 2ஏ[1] பின்வரும் எல்லைகளையுடையது - வடக்கில் : கொடேவத்தவும் பொல்கணத்தவும்; கிழக்கில் : கலந்தேவத்தவும் அதே காணியின் காணித்துண்டம் 2ஏ2உம் ; தெற்கில் : அதே காணியின் காணித்துண்டம் 2ஏ2; தென்மேற்கில் : எம். டீ. ரட்னசூரிய மாவத்தை, பரப்பளவில் இது. சொல்லப்பட்ட 205 ஆம் இலக்க வரைடத்தின்படி இரண்டு றூட் இருபத்தாறு தசம் ஆறு பேர்ச்சஸ்கள் (0ஏ. 2றூ. 26.6பே.) கொண்டுள்ளது.

2. மேற்கூறப்பட்ட கும்பல்வெல்லவில் அமைந்துள்ளதும், எம். டீ. ரட்னசூரிய மாவத்தை எனவும் அழைக்கப்படும் பட்டகன்வில புதிய ஒழுங்கையில் 4 ஆம் வரிமதிப்பீட்டிலக்கத்தை (பழைய இல. 85) கொண்டதும், உரிமம் பெற்ற நிலஅளவையாளர் திரு. யூ. வேவல்வல என்பவரினால் தயாரிக்கப்பட்ட 2000.09.29 ஆந் திகதிய 205 ஆம் இலக்க வரைபடத்திற் குறித்துக்காட்டப்பட்டதும், தெனியாவத்தவின் காணித்துண்டங்கள் 2ஏ மற்றும் 2வை எனவழைக்கப்படும் காணியின் வரையறுக்கப்பட்ட காணித்துண்டும் 2ஏ[2] ; இனதாய் அதன்மீதுள்ள அம்மண்ணினதும் எல்லாப் பயிர்களினதும் கட்டிடங்களினதும் முழுமையும்; சொல்லப்பட்ட காணித்துண்டம் 2ஏ[2] பின்வரும் எல்லைகளையுடையது - வடகிழக்கில் : கலந்தேவத்த ; தென்கிழக்கில்: ஸ்ரீ சத்ததிஸ்ஸ மாவத்தை ; தென்மேற்கில் : எம். டீ. ரட்னசூரிய மாவத்தை மற்றும்; மேற்கிலும் வடமேற்கிலும் : அதே காணியின் காணித்துண்டம் 2ஏ[1]. பரப்பளவில் இது. சொல்லப்பட்ட 205 ஆம் இலக்க வரைடத்தின்படி இரண்டு றூட் பத்தொன்பது தசம் இரண்டு பேர்ச்சஸ்கள் (0ஏ. 2றூ. 19.2பே.) கொண்டுள்ளது.

மேற்கூறப்பட்ட காணித்துண்டங்கள் 2ஏ[1] மற்றும் 2ஏ[2] கீழே விபரிக்கப்படும் தாய்க் காணியிலிருந்து பிரிக்கப்பட்ட பாகங்களாகவுள்ளனவென்பதுடன், அதனோடிணைக்கப்பட்டு தோதான முறையில் பதிவு செய்யப்படுதலும் வேண்டும்:-

மேற்கூறப்பட்ட கும்பல்வெல்லவில் அமைந்துள்ளதும், எம். டீ. ரட்ணசூரிய மாவத்தை எனவும் அழைக்கப்படும் பட்டகன்வில புதிய ஒழுங்கையில் 4 ஆம் வரிமதிப்பீட்டிலக்கத்தை (பழைய இல. 85) கொண்டதும், தெனியாவத்த எனவழைக்கப்படும் காணியின் வரையறுக்கப்பட்ட அக்காணித்துண்டங்கள் 2ஏ மற்றும் 2வை அடங்கலும்; அதன் எல்லைகள் பின்வருமாறு - வடக்கில் : கொடேவத்தவும் பொல்கணத்தவும்; கிழக்கில் : கலந்தேவத்தவும் பொத்துகும்புரவும்; தெற்கில் : பொத்துகும்புரே வட்ட அத்தர ஓவிட்ட மற்றும் காணித்துண்டம் 3 மற்றும் ; மேற்கில் : அதே காணியின் காணித்துண்டம் 3; பரப்பளவில் இது உரிமம் பெற்ற நிலஅளவையாளர் திரு. எஸ். எச். தஹாநாயக்க என்பவரினால் தயாரிக்கப்பட்ட 1963.09.24 ஆந் திகதிய 856ஏ ஆம் இலக்க வரைபடத்திற் குறித்துக்காட்டப்பட்டவாறும், 17628 ஆம் இலக்க காலி மாநீ பிரிவிடுதல் வழக்கில் பதிவேட்டில் கோப்பிடப்பட்ட அடுத்துப் பின்னரான உட்பிரிவிடுகையின்படியும், ஒரு ஏக்கர் மூன்று றூட் பதினாறு தசம் ஐந்து இரண்டு பேர்ச்சுகள் (1ஏ. 3றூ. 16.52பே.) கொண்டுள்ளதுடன் காலிக் காணிப்பதிவகத்தில் பதிவு செய்யப்பட்டுமுள்ளது.

ஏ. என். பொன்சேக்கா,
பொது முகாமையாளர்.

இ. அ. நி.கூ. வங்கி,
இல. 73/5, காலி வீதி,
கொழும்பு 3.

8-127

---

**சம்பத் வங்கி பீஎல்சீ**

(முன்பு சம்பத் வங்கி லிமிட்டெட் என அழைக்கப்பட்டது)

*1990 ஆம் ஆண்டின் 04 ஆம் இலக்க வங்கிக் கடன் மீட்பு (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 4 ஆம் பிரிவின் கீழ் சம்பத் வங்கி பீஎல்சீ பணிப்பாளர்கள் சபையினால் மேற்கொள்ளப்பட்ட தீர்மானம்*

கணக்கு இல.: 0007 5010 1283 - பீ. எச். பீ. எம். பெர்ணாண்டோ மற்றும் டபிள்யூ. எம். ஈ. பீ. எஸ். பெர்ணாண்டோ

2010.04.27 ஆந் திகதி நடைபெற்ற கூட்டத்தில் சம்பத் வங்கி பீஎல்சீ பணிப்பாளர் சபையினால் விசேடமாகவும் ஏகமனதாகவும் நிறைவேற்றப்பட்ட தீர்மானம் -

"PQ 144 எனும் கம்பனி இலக்கத்தைக் கொண்ட சம்பத் வங்கி பீஎல்சீ சார்பாக கண்டி பிரசித்த நொத்தாரிசு எஸ். ரீ. கே. வீபெத்த என்பவரால் எழுதி அத்தாட்சிப்படுத்தப்பட்ட 2005, ஏப்பிறல் 26 ஆந் திகதியிடப்பட்ட இல. 561 எனும் ஈட்டு முறியின் மீது அடகு வைக்கப்பட்டு பிணையாக இங்கு அட்டவணையில் நேர்த்தியாக விபரிக்கப்பட்டுள்ள சொத்துக்கள் நிலமனைகள் மீது பெற்றுக்கொண்ட கடனை, கடமைப்பட்டவர்கள் என்ற வகையில் இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பொன்னம்பெருமகே ஹென்றி பிரதீப் மில்ரோய் பெர்னாண்டோ மற்றும் வர்ணகுலசூரிய மாஹாலேகம்கே ஈவா பெணடீன் பெர்னான்டோ என்பவர்களில், கடன்பட்டவர் என்ற வகையில் கூறப்பட்ட பொன்னம்பெருமகே ஹென்றி பிரதீப் மில்ரோய் பெர்னாண்டோ என்பவர் மீள் செலுத்தத் தவறியுள்ளமையினால், கூறப்பட்ட இல. 561 எனும் ஈட்டு முறியின் பிரகாரம் அறவிடப்பட வேண்டிய மொத்தத் தொகையை இலங்கையில் சட்டபூர்வமாகச் செல்லுபடியாகும் ரூபாவில் எட்டு இலட்சத்து முப்பத்தொன்பதாயிரத்து எண்ணூற்று அறுபத்துமூன்று ரூபா ஐந்து சதம் (ரூ. 8,39,863.05) 2010, சனவரி 14 ஆந் திகதி சம்பத் வங்கி பீஎல்சீ இற்குச் செலுத்தப்படல் வேண்டும் என்பதுடன் குறிப்பிடப்பட்ட எட்டு இலட்சத்து முப்பத்தொன்பதாயிரத்து எண்ணூற்று அறுபத்துமூன்று ரூபா ஐந்து சதம் (ரூ. 8,39,863.05) 2010, சனவரி 15 ஆந் திகதி முதல் இல. 561 எனும் ஈட்டு முறியின் மீது அறவிடப்பட வேண்டிய மொத்தத் தொகையைச் செலுத்தித் தீர்க்கும் திகதி வரை ஏழு இலட்சத்து அறுபத்திரண்டாயிரத்து முப்பது ரூபா (ரூ. 7,62,030) இத்துடன் மேலதிக வட்டியாக ஆண்டொன்றிற்கு இருபது வீதமும் (20%) வருமதியாகவுள்ள வட்டியுடன் விளம்பரச் செலவுகள், ஏனைய செலவுகள், ஏதேனும் கட்டணங்கள் செலுத்தப்பட்டிருப்பின் அவற்றையும் கழித்து அறவிட்டுக் கொள்வதற்கு கூறப்பட்ட ஈட்டு முறி இல. 561 இன் மீது பிணையாக வைக்கப்பட்டுள்ள சொத்துக்கள், நிலமனைகளை கண்டி உத்தரவுபெற்ற ஏலதாரர்களான ஜ. டபிள்யூ. ஜயசூரிய என்பவர்கள் மூலமாக பகிரங்க ஏலத்தில் விற்பனை செய்ய வேண்டும் என 1990 ஆம் ஆண்டின் 04 ஆம் இலக்க வங்கிக் கடன் மீட்பு (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் கீழ் வழங்கப்பட்ட அதிகாரங்களுக்கு அமைவாக சம்பத் வங்கி பீஎல்சீ இத்தால் தீர்மானிக்கின்றது."

**அட்டவணை**

1. வடமேல் மாகாணம், புத்தளம் மாவட்டம், சிலாபம் பதிவுப் பிரிவு மற்றும் பிரதேச சபை எல்லைகளுக்குள் பிட்டிகல் கோரளே வடக்கில் முன்னேஸ்வரம் பத்துவின் பம்பால கிராமத்தில் அமைந்த "நுககாஹாயாய" என அழைக்கப்படும் காணிக்கு (ஆனால் "வெல்-வனாத்த" என பதிவுசெய்யப்பட்ட) உத்தரவுபெற்ற நிலஅளவையாளர் டீ. பிரசாத் விமலசேன அவர்களால் தயாரிக்கப்பட்ட 1995, செத்தெம்பர் 02 மற்றும் 17 ஆந் தகதியிடப்பட்ட இல. 1676 எனும் வரைபடத்தில் காட்டப்பட்ட லொட் 07 எனக் குறிப்பிடப்பட்ட காணியின் எல்லைகளாவன - வடக்கிற்கு : கூறப்பட்ட வரைபடத்தில் லொட்கள் 01 மற்றும் 06 ; கிழக்கிற்கு : கூறப்பட்ட வரைபடத்தில் லொட் 05 மற்றும் ஜீ. சீ. டி. சில்வாவின் காணி ; தெற்கிற்கு : ஜீ. சீ. டி. சில்வாவின் காணி; மற்றும் மேற்கிற்கு : டபிள்யூ. ஸ்டென்லி பெரேராவின் காணி. ஆகிய இவ் எல்லைகளுக்குள் அமைந்த காணி விஸ்தீரணம் ஒரு றூட் மற்றும் முப்பத்தைந்து தசம் மூன்று பேர்ச்சஸ்கள் (0ஏ. 1றூ. 35.3பே.) அளவினைக் கொண்ட காணியுடன் அங்கு அமைந்த அனைத்தும் நிலம், மரங்கள், பயிர்கள், கட்டடங்களுடன் அதன்கண் அமைந்த சகல வழி உரிமைகள், ஏனைய சௌகரியங்கள், வரப்பிரசாதங்கள், உட்பிரவேசங்கள், இரண்டாந்தர மார்க்க உரிமைகள் மற்றும் அதனுடன் தொடர்புடைய இணைப்புகளுடன் கூறப்பட்ட இல. 1676 எனும் வரைபடத்திற்கு அமைவாக சிலாபம் காணிப் பதிவகத்தில் பரிமாணம்/ பக்கம் C 171/60 இல் பதிவு செய்யப்பட்டுள்ளது.

2. மேற்கூறப்பட்ட பம்பால கிராமத்தில் அமைந்த "நுககாஹாயாய" என அழைக்கப்படும் காணிக்கு (ஆனால் "வெல்-வனாத்த" என பதிவுசெய்யப்பட்ட) உத்தரவுபெற்ற நிலஅளவையாளர் டீ. பிரசாத் விமலசேன அவர்களால் தயாரிக்கப்பட்ட 1995, செத்தெம்பர் 02, 17 மற்றும் 20 ஆந் தகதியிடப்பட்ட இல. 1676 எனும் வரைபடத்தில் காட்டப்பட்ட லொட் 06 எனக் குறிப்பிடப்பட்ட காணியின் எல்லைகளாவன - வடக்கிற்கு : கூறப்பட்ட வரைபடத்தில் லொட் 03 ; கிழக்கிற்கு : கூறப்பட்ட வரைபடத்தில் லொட் 04 ; தெற்கிற்கு : கூறப்பட்ட வரைபடத்தில் லொட் 7 மற்றும் ; மேற்கிற்கு : கூறப்பட்ட வரைபடத்தில் லொட் 01, ஆகிய இவ் எல்லைகளுக்குள் அமைந்த காணி விஸ்தீரணம்

ஒரு றூட் மற்றும் மூன்று தசம் எட்டு பேர்ச்சஸ்கள் (0ஏ. 0றூ. 3.8பே.) அளவினைக் கொண்ட காணியுடன் அங்கு அமைந்த அனைத்தும் நிலம், மரங்கள், பயிர்கள், கட்டடங்களுடன் அதன்கண் அமைந்த சகல வழி உரிமைகள், ஏனைய சௌகரியங்கள், வரப்பிரசாதங்கள், உட்பிரவேசங்கள், இரண்டாந்தர மார்க்க உரிமைகள் மற்றும் அதனுடன் தொடர்புடைய இணைப்புகளுடன் கூறப்பட்ட இல. 1676 எனும் வரைபடத்திற்கு அமைவாக சிலாபம் காணிப் பதிவகத்தில் பரிமாணம்/பக்கம் 171/99 இன் கீழ் பதிவு செய்யப்பட்டுள்ளது.

கீழே காட்டப்பட்ட காணிகளின் ஊடாகவும் அதன் மீதுமான மார்க்க உரிமைகளுடனானது :-

மேற்கூறப்பட்ட பம்பால கிராமத்தில் அமைந்த "நுககாஹாயாய" என அழைக்கப்படும் காணிக்கு (ஆனால் "வெல்-வனாத்த" என பதிவுசெய்யப்பட்ட) உத்தரவுபெற்ற நிலஅளவையாளர் டீ. பிரசாத் விமலசேன அவர்களால் தயாரிக்கப்பட்ட 1995, செத்தெம்பர் 02, 17 மற்றும் 20 ஆந் தகதியிடப்பட்ட இல. 1676 எனும் வரைபடத்தில் காட்டப்பட்ட லொட் 03 (வீதிக்கான ஒதுக்கம்) எனக் குறிப்பிடப்பட்ட காணியின் எல்லைகளாவன - வடக்கிற்கு : கூறப்பட்ட வரைபடத்தில் லொட் 02 ; கிழக்கிற்கு : கொழும்பு - சிலாபம் நெடுஞ்சாலை ; தெற்கிற்கு : கூறப்பட்ட வரைபடத்தில் லொட் 4 மற்றும் 06; மற்றும் மேற்கிற்கு : கூறப்பட்ட வரைபடத்தில் லொட் 01, ஆகிய இவ் எல்லைகளுக்குள் அமைந்த காணி விஸ்தீரணம் ஒரு றூட் மற்றும் பன்னிரண்டு பேர்ச்சஸ்கள் (0ஏ. 0றூ. 12பே.) அளவினைக் கொண்ட காணியுடன் அங்கு அமைந்த அனைத்தும் நிலம், மரங்கள், பயிர்கள், கட்டடங்களுடன் அதன்கண் அமைந்த சகல வழி உரிமைகள், ஏனைய சௌகரியங்கள், வரப்பிரசாதங்கள், உட்பிரவேசங்கள், இரண்டாந்தர மார்க்க உரிமைகள் மற்றும் அதனுடன் தொடர்புடைய இணைப்புகளுடன் கூறப்பட்ட ல. 1676 எனும் வரைபடத்திற்கு அமைவாக சிலாபம் காணிப் பதிவகத்தில் பரிமாணம் / பக்கம் C 171/35 இன் கீழ் பதிவு செய்யப்பட்டுள்ளது.

பணிப்பாளர்கள் சபையின் கட்டளைப்படி,

கம்பனிச் செயலாளர்.

8-141/ 1

---

**சம்பத் வங்கி பீஎல்சீ**

(முன்பு சம்பத் வங்கி லிமிட்டெட் என அழைக்கப்பட்டது)

1990 ஆம் ஆண்டின் 04 ஆம் இலக்க வங்கிக் கடன் மீட்பு (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 4 ஆம் பிரிவின் கீழ் சம்பத் வங்கி பீஎல்சீ பணிப்பாளர்கள் சபையினால் மேற்கொள்ளப்பட்ட தீர்மானம்

கணக்கு இல.: 0066 5000 2723 - ஏ. எல். எஸ். பிரஷாந்த

2010.04.27 ஆந் திகதி நடைபெற்ற கூட்டத்தில் சம்பத் வங்கி லிமிட்டெட் பணிப்பாளர் சபையினால் விசேடமாகவும் ஏகமனதாகவும் நிறைவேற்றப்பட்ட தீர்மானம் -

"PQ 144 எனும் கம்பனி இலக்கத்தைக் கொண்ட சம்பத் வங்கி பீஎல்சீ சார்பாக குருநாகல் பிரசித்த நொத்தாரிசுவான எஸ். பீ. வந்துரகல என்பவரால் எழுதி அத்தாட்சிப்படுத்தப்பட்ட 2006, ஓகத்து 18 ஆந் திகதியிடப்பட்ட இல. 13467 மற்றும் 2006, நவெம்பர் 28 ஆந் திகதியிடப்பட்ட இல. 13742 எனும் ஈட்டு முறிகளின்மீது அடகு வைக்கப்பட்டு பிணையாக இங்கு அட்டவணையில் நேர்த்தியாக விபரிக்கப்பட்டுள்ள சொத்துக்கள் நிலமனைகள் மீது பெற்றுக்கொண்ட கடனை, கடன்பட்டவர் என்ற வகையில் கடமைப்பட்டுள்ள இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அம்பலாங்கொடை லியனகே சுகத் பிரஷாந்த என்பவர் மீள் செலுத்தத் தவறியுள்ளமையினால், கூறப்பட்ட இலக்கங்கள் 13742 மற்றும் 13467 எனும் ஈட்டு முறிகளின் பிரகாரம் அறவிடப்பட வேண்டிய மொத்தத் தொகையை இலங்கையில் சட்டபூர்வமாகச் செல்லுபடியாகும் ரூபாவில் இருபத்தொன்பது இலட்சத்து முப்பத்தையாயிரத்து முந்நூற்று எழுபத்தைந்து ரூபா அறுபத்தேழு சதம் (ரூ. 29,35,375.67) 2010, பெப்புருவரி 11 ஆந் திகதி சம்பத் வங்கி பீஎல்சீ இற்குச் செலுத்தப்படல் வேண்டும் என்பதுடன் குறிப்பிடப்பட்ட இருபத்தொன்பது இலட்சத்து முப்பத்தையாயிரத்து முந்நூற்று எழுபத்தைந்து ரூபா அறுபத்தேழு சதம் (ரூ. 29,35,375.67) 2010, பெப்புருவரி 12 ஆந் திகதி முதல் இலக்கங்கள் 13742 மற்றும் 13467 எனும் ஈட்டு முறிகளின் மீது அறவிடப்பட வேண்டிய மொத்தத் தொகையைச் செலுத்தித் தீர்க்கும் திகதி வரை இருபத்துமூன்று இலட்சத்து பதினேழாயிரத்து ஐநூற்று ஐம்பத்திரண்டு ரூபா முப்பத்தேழு சதம் (ரூ. 23,17,552.37) இத்துடன் மேலதிக வட்டியாக ஆண்டொன்றிற்கு பதினேழு தசம் ஐந்து வீதம் (17.5%) வருமதியாகவுள்ள வட்டியுடன் விளம்பரச் செலவுகள், ஏனைய செலவுகள், ஏதேனும் கட்டணங்கள் செலுத்தப்பட்டிருப்பின் அவற்றையும் கழித்து அறவிட்டுக் கொள்வதற்கு கூறப்பட்ட ஈட்டு முறி இலக்கங்கள் 13742 மற்றும் 13467 இன் மீது பிணையாக வைக்கப்பட்டுள்ள சொத்துக்கள், நிலமனைகளை கண்டி உத்தரவுபெற்ற ஏலதாரர்களான ஐ. டபிள்யூ. ஜயசூரிய என்பவர்கள் மூலமாக பகிரங்க ஏலத்தில் விற்பனை செய்ய வேண்டும் என 1990 ஆம் ஆண்டின் 04 ஆம் இலக்க வங்கிக் கடன் மீட்பு (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் கீழ் வழங்கப்பட்ட அதிகாரங்களுக்கு அமைவாக சம்பத் வங்கி பீஎல்சீ இத்தால் தீர்மானிக்கின்றது."

**அட்டவணை**

வடமேல் மாகாணம், குருநாகல் மாவட்டம், வேஉடவில்லி ஹறத்பத்துவையின் மேகொட கோரளேயின் மாஹாகல்பொடவின் உயந்தன இல் அமைந்த "உயந்தன எஸ்டேட் எனும் சுந்தரவள்ளி வத்த" மற்றும் "தும்மீல்லமுள்ள" என்றழைக்கப்படும் காணிக்கு உத்தரவுபெற்ற நிலஅளவையாளர் டபிள்யூ. சீ. எஸ். எம். அபேசேக்கர என்பவரால் தயாரிக்கப்பட்ட 1993, திசெம்பர் 31 ஆந் திகதியிடப்பட்ட இல. 202/93 எனும் வரைபடத்தில் காட்டப்பட்ட அனைத்தும் பிரித்து எல்லைகள் நிர்ணயிக்கப்பட்டு லொட் 54 எனக் குறிப்பிடப்பட்ட காணியின் எல்லைகளாவன - வடகிழக்கிற்கு : கூறப்பட்ட வரைபடத்தின் லொட் 18 (வீதி) ; தென்கிழக்கிற்கு : கூறப்பட்ட வரைபடத்தின் லொட் 53 (வீதி) ; தென்மேற்கிற்கு : கூறப்பட்ட வரைபடத்தின் லொட் 55 ; வடமேற்கிற்கு : கூறப்பட்ட வரைபடத்தின் லொட் 57 இவ்எல்லைகளுக்குள் அமைந்த காணியின் விஸ்தீரணம் பதின்நான்கு தசம் ஐந்து பேர்ச்சஸ்கள்(0ஏ. 0றூ. 14.5பே.) விஸ்தீரணத்தைக் கொண்ட காணியுடன் அங்கு அமைந்த அனைத்தும், நிலம், மரங்கள், பயிர்கள், கட்டடங்களுடன் அதன்கண் அமைந்த சகல வழி உரிமைகள், ஏனைய சௌகரியங்கள், வரப்பிரசாதங்கள், உட்பிரவேசங்கள், இரண்டாந்தர மார்க்க உரிமைகள் மற்றும் அதனுடன் தொடர்புடைய இணைப்புகளுடன் குருநாகல் காணிப் பதிவகத்தில் பரிமாணம்/பக்கம் A 1514/277 இல் பதிவு செய்யப்பட்டுள்ளது.

பணிப்பாளர்கள் சபையின் கட்டளைப்படி,

கம்பனிச் செயலாளர்.

8-141/ 2

**வரையறுக்கப்பட்ட சம்பத் வங்கி**

(முன்பு சம்பத் வங்கி லிமிட்டெட் என அழைக்கப்பட்டது)

*1990 ஆம் ஆண்டின் 04 ஆம் இலக்க வங்கியினால் வழங்கப்பட்ட கடன்கள் அறவிடுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 4 ஆம் பிரிவின் கீழ் வரையறுக்கப்பட்ட சம்பத் வங்கி வங்கிப் பணிப்பாளர்கள் சபையினால் மேற்கொள்ளப்பட்ட தீர்மானம்*

கணக்கு இல.: 1025 5009 1140 - டி. எஸ். எஸ். மெத்தேகொடகே

2006, யூன் 29 ஆந் திகதி நடைபெற்ற கூட்டத்தில் சம்பத் வங்கி லிமிட்டெட் பணிப்பாளர் சபையினால் விசேடமாகவும் ஏகமனதாகவும் நிறைவேற்றப்பட்ட தீர்மானம் -

"இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு, உக்குவெல, எல்வள (எல்வள) இல. 51/2E இல் வசிக்கும் டேவிட் சுனில் சாந்த மெத்தேகொடகே கடப்பாடுடையவராக வரையறுக்கப்பட்ட சம்பத் வங்கி சார்பில் மாத்தளையைச் சேர்ந்த பிரசித்தி பெற்ற நொத்தாரிசு சீ. பி. தெஹிகம அவர்களால் அத்தாட்சிப்படுத்தப்பட்டு, 2004, நவெம்பர் 19 ஆந் திகதியிடப்பட்ட ஈட்டு முறி இல. 36495 மீது வரவேண்டிய கொடுப்பனவில் தவணை தவறியுள்ளாராதலால், 2006, மாச்சு 27 ஆந் திகதியன்றுள்ளவாறு சொல்லப்பட்ட முறிமூலம் வரையறுக்கப்பட்ட சம்பத் வங்கிக்கு செலுத்த வேண்டிய முழுத் தொகையான இலங்கையில் சட்ட ரீதியாக பாவனையிலுள்ள நாணயம் பதினொரு இலட்சத்து எழுபத்தாறாயிரத்து தொளாயிரத்து ஐம்பத்துநான்கு ரூபா முப்பத்தாறு சதம் (ரூ. 11,76,954.36) கொண்ட தொகை தற்போது வரவேண்டியும் உரியதாகவுமுள்ளதாதலாலும்; 1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிகளினால் வழங்கப்பட்ட கடன்கள் அறவிடுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தினால் அளிக்கப்பட்ட அதிகாரங்களின் கீழ், வரையறுக்கப்பட்ட சம்பத் வங்கி பணிப்பாளர்கள் சபையானது, சொல்லப்பட்ட பதினொரு இலட்சத்து எழுபத்தாறாயிரத்து தொளாயிரத்து ஐம்பத்துநான்கு ரூபா முப்பத்தாறு சதம் (ரூ. 11,76,954.36) ஐ, 2006, மாச்சு 28 ஆந் திகதியிலிருந்து விற்பனை திகதிவரை பத்து இலட்சத்து தொண்ணூற்று எட்டாயிரத்து நூற்று ஐம்பத்தேழு ரூபா அறுபத்துமூன்று சதம் (ரூ. 10,98,157.63) கொண்ட தொகைமீது ஆண்டுக்கு பன்னிரண்டு தசம் ஐந்து சதவீத (12.5%) வட்டியுடனும் உறப்பட்ட விளம்பரச் செலவுகள் மற்றும் வேறு கட்டணங்கள் (எவையேனும் கொடுப்பனவுகள் பெறப்பட்டிருப்பின் அவற்றையும் கழித்து) ஆகியவற்றுடனும் சேர்த்து அறவிடுவதற்காக, இலக்கம் 36495 ஐக் கொண்ட சொல்லப்பட்ட முறி மூலம் வரையறுக்கப்பட்ட சம்பத் வங்கிக்கு ஈடுவைக்கப்பட்டுள்ளதும் இத்துடனுள்ள அட்டவணையில் முழுமையாக விவரிக்கப்பட்டுள்ளதுமான ஆதனம் மற்றும் வளவுகள், கண்டியைச் சேர்ந்த உத்தரவுபெற்ற ஏலதாரர் ஐ. டபிள்யூ. ஜயசூரிய அவர்களால் பகிரங்க ஏலம் மூலம் விற்பனை செய்யப்பட வேண்டுமென இத்தால் தீர்மானிக்கின்றது."

**அட்டவணை**

மத்திய மாகாணம், மாத்தளை மாவட்டம், மாத்தளை தெற்கு மெதசிய பத்துவ இன் வாரியப்பொல, எல்வள மற்றும் கொஹொம்பிலிவெல கிராமங்களில் அமைந்த வாரியபொல குரூப் (கீழ் பகுதி) என அழைக்கப்படும் காணியிலிருந்து நிலஅளவையாளர் கே. குமாரசாமி அவர்களால் தயாரிக்கப்பட்டு 1962, சனவரி 21 ஆந் திகதியிடப்பட்ட நிலஅளவை வரைபடம் இல. 2952 இல் குறிப்பிடப்பட்டு பிரித்து எல்லைகள் நிர்ணயிக்கப்பட்ட துண்டு A1, A2 மற்றும் A3 என அடையாளமிடப்பட்ட முழு காணித்துண்டு அதன்கண் அமைந்த பயிர்கள் மற்றும் சகலதுடன் மேற்கூறப்பட்ட துண்டுகள் A1, A2 மற்றும் A3 காணியின் எல்லைகளாவன - வடக்கில் : அதே காணியின் (பெருந்தோட்டம்) மிகுதிப் பாகம் ; கிழக்கில் : பொது மயானம் ; தெற்கில் : எஸ்டேட் ரோட் ; மேற்கில் : துண்டு 2 என அடையாளமிடப்பட்ட அதே காணியின் மிகுதிப் பாகம் என்பவையாகும். மேற்கூறப்பட்ட நிலஅளவை வரைபடம் இல. 2952 இற்கமைய இந்தக் காணி மூன்று றூட் (0ஏ. 3றூ. 0பே.) விஸ்தீரணமுடையது. இந்தக் காணி மாத்தளை காணிப் பதிவகத்தில் தொகுதி/ பக்கம் B 539/181 இல் பதிவு செய்யப்பட்டுள்ளது.

பணிப்பாளர்கள் சபையின் கட்டளைப்படி,

எஸ். சுதர்சன்,
கம்பனிச் செயலாளர்.

8-141/3

---

**சம்பத் வங்கி பீஎல்சீ**

(முன்பு சம்பத் வங்கி லிமிட்டெட் என அழைக்கப்பட்டது)

*1990 ஆம் ஆண்டின் 04 ஆம் இலக்க வங்கிக் கடன் மீட்பு (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 4 ஆம் பிரிவின் கீழ் சம்பத் வங்கி பீஎல்சீ பணிப்பாளர்கள் சபையினால் மேற்கொள்ளப்பட்ட தீர்மானம்*

கணக்கு இல.: 0049 5000 0142 - என். எம். ஆர். ஐ. எஸ். கருணாரத்ன மற்றும் யூ. எல். சுமனாவத்தி

2010.06.24 ஆந் திகதி நடைபெற்ற கூட்டத்தில் சம்பத் வங்கி லிமிட்டெட் பணிப்பாளர் சபையினால் விசேடமாகவும் ஏகமனதாகவும் நிறைவேற்றப்பட்ட தீர்மானம் -

"PQ 144 எனும் கம்பனி இலக்கத்தைக் கொண்ட சம்பத் வங்கி பீஎல்சீ சார்பாக கொழும்பு பிரசித்த நொத்தாரிசான கே. எஸ். பீ. டபிள்யூ. ஜயவீர என்பவரால் எழுதி அத்தாட்சிப்படுத்தப்பட்ட 2007, பெப்புருவரி 20 ஆந் திகதியிடப்பட்ட இல. 4283 எனும் ஈட்டு முறியின் மீது அடகு வைக்கப்பட்டு பிணையாக இங்கு அட்டவணையில் நேர்த்தியாக விபரிக்கப்பட்டுள்ள சொத்துக்கள் நிலமனைகள் மீது பெற்றுக்கொண்ட கடனை, கடமைப்பட்டுள்ளார் என்ற வகையில் இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் நாவெல மாஹாகம ராலலாகே இரேஷா ஸ்வர்ணமாலி கருணாரத்ன மற்றும் உடஹேன்கந்த லேக்கம்லாகே சுமனாவத்தி என்பவர்களில், கடன்பட்டவர் என்ற வகையில் உடஹேன்கந்த லேக்கம்லாகே சுமனாவத்தி என்பவர் மீள் செலுத்தத் தவறியுள்ளமையினால், கூறப்பட்ட இல. 4283 எனும் ஈட்டு முறியின் பிரகாரம் அறவிடப்பட வேண்டிய மொத்தத் தொகையை இலங்கையில் சட்டபூர்வமாகச் செல்லுபடியாகும் ரூபாவில் பதினெட்டு இலட்சத்து அறுபத்தாறாயிரத்து ஐநூற்று நாற்பத்தொரு ரூபா ஐம்பத்து நான்கு சதம் (ரூ. 18,66,541.54) 2010, ஏப்பிறல் 30 ஆந் திகதி சம்பத் வங்கி பீஎல்சீ இற்குச் செலுத்தப்படல் வேண்டும் என்பதுடன் குறிப்பிடப்பட்ட பதினெட்டு இலட்சத்து அறுபத்தாறாயிரத்து ஐநூற்று நாற்பத்தொரு ரூபா ஐம்பத்து நான்கு சதம் (ரூ. 18,66,541.54) 2010, மே 01 ஆந் திகதி முதல் இல. 4283 எனும் ஈட்டு முறியின் மீது அறவிடப்பட வேண்டிய மொத்தத் தொகையைச் செலுத்தித் தீர்க்கும் திகதி வரை எட்டு இலட்சத்து

ஐம்பதாயிரம் ரூபா (ரூ. 8,50,000) இத்துடன் மேலதிக வட்டியாக ஆண்டொன்றிற்கு பத்தொன்பது வீதமும் (19%) வருமதியாகவுள்ள வட்டியுடன் விளம்பரச் செலவுகள், ஏனைய செலவுகள், ஏதேனும் கட்டணங்கள் செலுத்தப்பட்டிருப்பின் அவற்றையும் கழித்து அறவிட்டுக் கொள்வதற்கு கூறப்பட்ட ஈட்டு முறி இல. 4283 இன் மீது பிணையாக வைக்கப்பட்டுள்ள சொத்துக்கள், நிலமனைகளை கண்டி உத்தரவுபெற்ற ஏலதாரர்களான ஐ. டபிள்யூ. ஜயசூரிய என்பவர்கள் மூலமாக பகிரங்க ஏலத்தில் விற்பனை செய்ய வேண்டும் என 1990 ஆம் ஆண்டின் 04 ஆம் இலக்க வங்கிக் கடன் மீட்பு (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் கீழ் வழங்கப்பட்ட அதிகாரங்களுக்கு அமைவாக சம்பத் வங்கி பீஎல்சீ இத்தால் தீர்மானிக்கின்றது.''

### அட்டவணை

சபரகமுவ மாகாணம், கேகாலை மாவட்டம், அத்துலுகம் கோரளேயின், தெரணியகலை பிரதேச சபை எல்லைகளுக்குள் தெரணியகலை கிராமத்தில் அமைந்த ''அக்கடவெல ஓவிட்ட'' என அழைக்கப்படும் காணிக்கு உத்தரவுபெற்ற நிலஅளவையாளர் எச். கே. மஹிந்த என்பவரால் தயாரிக்கப்பட்ட 2005, செத்தெம்பர் 21 ஆந் திகதியிடப்பட்ட இல. 2542 எனும் வரைபடத்தில் காட்டப்பட்ட அனைத்தும் பிரித்து எல்லைகள் நிர்ணயிக்கப்பட்டு லொட் 3 எனக் குறிப்பிடப்பட்ட காணியின் எல்லைகளாவன - வடக்கிற்கு : லொட் 2 மற்றும் சீத்தாவக்கை ஆறு ; கிழக்கிற்கு : சீத்தாவக்கை ஆறு ; தெற்கிற்கு: சீத்தாவக்கை ஆறு, மாஹா எல மற்றும் லொட் 4 மற்றும் ; மேற்கிற்கு : லொட் 4 ஆகிய இவ்வெல்லைகளுக்குள் அமைந்த காணி விஸ்தீரணம் இரண்டு றூட்கள் மற்றும் இருபத்தி மூன்று தசம் ஆறு சைபர் பேர்ச்சஸ்கள் (0ஏ. 02றூ. 23.60பே.) விஸ்தீரணத்தைக் கொண்ட காணியுடன் அங்க அமைந்த அனைத்தும் நிலம், மரங்கள், பயிர்கள், கட்டடங்களுடன் அதன்கண் அமைந்த சகல வழி உரிமைகள், ஏனைய சௌகரியங்கள், வரப்பிரசாதங்கள், உட்பிரவேசங்கள், இரண்டாந்தர மார்க்க உரிமைகள் மற்றும் அதனுடன் தொடர்புடைய இணைப்புகளுடன் கூறப்பட்ட இல. 2542 எனும் வரைபடத்திற்கு அமைவாக அவிசாவளை காணிப் பதிவகத்தில் பரிமாணம்/பக்கம் Q 133/08 இல் பதிவு செய்யப் பட்டுள்ளது.

மேற்கூறப்பட்ட தெரணியகலை கிராமத்தில் அமைந்த ''அக்கடவெல ஓவிட்ட'' என அழைக்கப்படும் காணியின் இல. 2542 எனும் வரைபடத்தில் காட்டப்பட்ட அனைத்தும் பிரித்து எல்லைகள் நிர்ணயிக்கப்பட்டு லொட் 5 எனக் குறிப்பிடப்பட்ட காணியின் எல்லைகளாவன - வடக்கிற்கு : லொட் 1 மற்றும் 4 ; கிழக்கிற்கு : லொட் 4 ; தெற்கிற்கு : மாஹா எல மற்றும் யூ. எல். வை. என். ஜயதிலக்க உரிமம் கோரும் கல்மோதரஹேன மற்றும் ; மேற்கிற்கு : யூ. எல். வை. என். ஜயதிலக்க உரிமம் கோரும் கல்மோதரஹேன மற்றும் கே. டீ. எஸ். டீ. ஜயத்திலக்க உரிமம் கோரும் கிரிஹத்தனகே அரம்ப ஆகிய இவ்வெல்லைகளுக்குள் அமைந்த ஒரு ஏக்கர் ஏழு தசம் இரண்டு எட்டு பேர்ச்சஸ்கள் (1ஏ. 0றூ. 7.28பே.) விஸ்தீரணத்தைக் கொண்ட காணியுடன் அங்கு அமைந்த அனைத்தும் நிலம், மரங்கள், பயிர்கள், கட்டடங்களுடன் அதன்கண் அனைத்துமுடன் கூறப்பட்ட இல. 2542 எனும் வரைபடத்திற்கு அமைவாக அவிசாவளை காணிப்பதிவகத்தில் பரிமாணம்/பக்கம் Q 133/09 இல் பதிவு செய்யப்பட்டுள்ளது.

பணிப்பாளர்கள் சபையின் கட்டளைப்படி,

கம்பனிச் செயலாளர்.

8-142/1

### சம்பத் வங்கி பீஎல்சீ

(முன்பு சம்பத் வங்கி லிமிட்டெட் என அழைக்கப்பட்டது)

1990 ஆம் ஆண்டின் 04 ஆம் இலக்க வங்கிக் கடன் மீட்பு (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 4 ஆம் பிரிவின் கீழ் சம்பத் வங்கி பீஎல்சீ பணிப்பாளர்கள் சபையினால் மேற்கொள்ளப்பட்ட தீர்மானம்

கணக்கு இல. : 0012 1000 2614 – கயட்டா லொஜிஸ்ட்டிக்

2010.06.24 ஆந் திகதி நடைபெற்ற கூட்டத்தில் சம்பத் வங்கி லிமிட்டெட் பணிப்பாளர் சபையினால் விசேடமாகவும் ஏகமனதாகவும் நிறைவேற்றப்பட்ட தீர்மானம் –

''PQ 144 எனும் கம்பனி இலக்கத்தைக் கொண்ட சம்பத் வங்கி பீஎல்சீ சார்பாக கொழும்பு பிரசித்த நொத்தாரிசுகளான ஏ.கே. டீ. பிரசங்க என்பவரால் எழுதி அத்தாட்சிப்படுத்தப்பட்ட 2008, யூன் 30 ஆந் திகதியிடப்பட்ட இல. 480 எனும் ஈட்டு முறியின் மீது அடகு வைக்கப்பட்டு பிணையாக இங்கு அட்டவணையில் நேர்த்தியாக விபரிக்கப்பட்டுள்ள சொத்துக்கள் நிலமனைகள் மீது பெற்றுக்கொண்ட கடனை, கடன்பட்டவர் என்ற வகையில் கடமைப்பட்டுள்ள பெயர் மற்றும் வடிவில் ''கயட்டா லொஜிஸ்ட்டிக்'' எனும் மகுடத்தின் கீழ் இயங்கும் வியாபாரத்தின் ஏக உரிமையாளரான இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் சமிந்த ஜனப்பிரிய திஸ்ஸாநாயக்க என்பவர் மீள் செலுத்தத் தவறியுள்ளமையினால், கூறப்பட்ட இல. 480 எனும் ஈட்டு முறியின் பிரகாரம் அறவிடப்பட வேண்டிய மொத்தத் தொகையை இலங்கையில் சட்டபூர்வமாகச் செல்லுபடியாகும் ரூபாவில் மூன்று இலட்சத்து பதின்மூவாயிரத்த ஐநூற்று எண்பத்தாறு ரூபா பத்தொன்பது சதம் (ரூ. 3,13,586.19) 2010, மே 03 ஆந் திகதி சம்பத் வங்கி பீஎல்சீ இற்குச் செலுத்தப்படல் வேண்டும் என்பதுடன் குறிப்பிடப்பட்ட மூன்று இலட்சத்து பதின்மூவாயிரத்த ஐநூற்று எண்பத்தாறு ரூபா பத்தொன்பது சதம் (ரூ. 3,18,586.19) 2010, மே 04 ஆந் திகதி முதல் இல. 480 எனும் ஈட்டு முறியின் மீது அறவிடப்பட வேண்டிய மொத்தத் தொகையைச் செலுத்தித் தீர்க்கும் திகதி வரை இரண்டு இலட்சத்து இருபத்தையாயிரம் ரூபா (ரூ. 2,25,000) இத்துடன் மேலதிக வட்டியாக ஆண்டொன்றிற்கு இருபத்தைந்து வீதமும் (25%) வருமதியாகவுள்ள வட்டியுடன் விளம்பரச் செலவுகள், ஏனைய செலவுகள், ஏதேனும் கட்டணங்கள் செலுத்தப்பட்டிருப்பின் அவற்றையும் கழித்து அறவிட்டுக் கொள்வதற்கு கூறப்பட்ட ஈட்டு முறி இல. 480 இன் மீது பிணையாக வைக்கப்பட்டுள்ள சொத்துக்கள், நிலமனைகளை கண்டி உத்தரவுபெற்ற ஏலதாரர்களான ஐ. டபிள்யூ. ஜயசூரிய என்பவர்கள் மூலமாக பகிரங்க ஏலத்தில் விற்பனை செய்ய வேண்டும் என 1990 ஆம் ஆண்டின் 04 ஆம் இலக்க வங்கிக் கடன் மீட்பு (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் கீழ் வழங்கப்பட்ட அதிகாரங்களுக்கு அமைவாக சம்பத் வங்கி பீஎல்சீ இத்தால் தீர்மானிக்கின்றது.''

### அட்டவணை

1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க, வங்கிகளினால் வழங்கப்பட்ட கடன்களை அறவிடுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 8 ஆம் பிரிவின் கீழ், செலான் வங்கி ப.வ.க. பணிப்பாளர் சபையினால் 2010.01.25 ஆந் திகதி நடத்தப்பட்ட கூட்டத்தில் பின்வருமாறு விசேடமாகவும் ஏகமனதாகவும் தீர்மானிக்கப்பட்டதென இத்தால் அறிவிக்கப்படுகின்றது:-

"மதவாச்சியைச் சேர்ந்த சேதர லியனகே அஜித் சந்திரரத்ன மற்றும் சேதர லியனகே சந்திரரத்ன "கடனெடுத்தவர்கள்' என்ற வகையில் செலான் வங்கி ப.வ.க. (2007 ஆம் ஆண்டின் 7ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்துக்கிணங்க பீகியூ 9 குறிப்பீட்டின் கீழ் பதிவுசெய்யப்பட்டது) சார்பில் பிரசித்த நொத்தாரிசு விராஜ் விக்கிரமரத்ன என்பவரால் அத்தாட்சிப்படுத்தப்பட்ட 2006, யூலை 07 ஆந் திகதிய 71 ஆம் இலக்க முறியின் மீது வருமதியான கொடுப்பனவுத் தவணை தவறியுள்ளார்கள். ஆதலால், இப்பொழுது 2009, யூன் 19 ஆந் தேதியன்றுள்ளவாறு சொல்லப்பட்ட முறியின் மீது ஒன்பது இலட்சத்து முப்பத்து நான்காயிரத்து அறுநூற்று முப்பத்தாறு ரூபா இருபத்தெட்டு சதம் (ரூ. 9,34,636.28) செலான் வங்கி ப. வ. கம்பனிக்கு உரியதாகச் செலுத்தப்பட வேண்டியுள்ளது. ஆதலால் சொல்லப்பட்ட ரூபா 9,34,636.28 பணத்தொகையையும் 2009, யூன் 20 ஆந் தேதி முதல் விற்பனைத் தேதி வரை ஆண்டொன்றுக்கு இருபத்தேழு சதவீதப்படி (27%) வட்டியையும் விளம்பரச் செலவுகளையும் உறப்பட்ட வேறு அறவீடுகளையும், அதன் பின்னர் கொடுப்பனவுகள் எவையும் பெறப்பட்டிருப்பின் அவற்றைக் கழித்தும் அறவிடுவதற்காக, சொல்லப்பட்ட 71 ஆம் இலக்க முறியினால் செலான் வங்கி ப. வ. கம்பனிக்கு ஈடுவைக்கப்பட்டதும் இதற்கான அட்டவணையில் மேலும் விவரிக்கப்படுவதுமான ஆதனம் உத்தரவுபெற்ற ஏலதாரர் திரு. ஐ. டபிள்யூ. ஜயசூரிய என்பவரால் பகிரங்க ஏலத்தில் விற்பனை செய்யப்பட வேண்டுமென செலான் வங்கி ப.வ.க பணிப்பாளர் சபை 1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க, வங்கிகளால் வழங்கப்பட்ட கடன்கள் அறவிடுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தினால் உரித்தாக்கப்பட்ட தத்துவங்களின் கீழ் இத்தால் தீர்மானிக்கின்றது"

### அட்டவணை

வடமத்திய மாகாணம், அனுராதபுரம் மாவட்டத்தில் நுவரகம்பலாத்த வின் கடவத்த கோறளேயில் மதவாச்சி பிரதேச சபை எல்லைகளினுள் மதவாச்சியில் அமைந்துள்ள "மதவாச்சியகெலே" என்றழைக்கப்படும் காணியிலிருந்து பிரித்து வரையறுக்கப்பட்டதும் உத்தரவுபெற்ற நிலஅளவையாளர் கே. வி. சோமபாலவால் தயாரிக்கப்பட்ட 2005.04.05 ஆந் திகதிய 4640 ஆம் இலக்க வரைபடத்தில் துண்டு 1 எனக் குறிக்கப்பட்டுக் காட்டப்பட்டதுமான காணிப்பங்கீடு முழுவதும் அதன்கண் அவ்வமைந்துள்ள கட்டடங்கள் மற்றும் ஏனைய எல்லாவற்றுடனும் சொல்லப்பட்ட துண்டுகள் 1 இன் எல்லைகள் - வடக்கு : வரைபடம் இல. 1296 இல் துண்டு 2 ; கிழக்கு : வரைபடம் இல. 2344 இல் துண்டு 16 ; தெற்கு : வீதி; மேற்கு : வரைபடம் இல.

2344 இல் துண்டு 14. சொல்லப்பட்ட 4640 ஆம் இலக்க வரைபடத்தின்படி இது பன்னிரண்டு தசம் ஒன்று ஆறு பேர்சச்ஸ்கள் (0ஏ. 0றூ. 12.16பே.) விஸ்தீரணம் கொண்டது.

சொல்லப்பட்ட வரைபடம் இல. 4640 இல் காட்டப்பட்டதும் துண்டு 1 எனக் குறிக்கப்பட்டதும் மேலே சொல்லப்பட்டதுமான காணிப்பங்கீடு பின்வருமாறு விவரிக்கப்பட்ட காணியை முழுதொத்தது:-

மேலே சொல்லப்பட்ட மதவாச்சியில் அமைந்துள்ள "மதவாச்சியகெலே" என்றழைக்கப்படும் காணியிலிருந்து பிரித்து வரையறுக்கப்பட்டதும் உத்தரவுபெற்ற நிலஅளவையாளர் கே. வி. சோமபாலவால் தயாரிக்கப்பட்ட 1993.06.24 ஆந் திகதிய 2344 ஆம் இலக்க வரைபடத்தில் துண்டு 15 எனக் குறிக்கப்பட்டுக் காட்டப்பட்டதுமான காணிப்பங்கீடு முழுவதும் அதன்கண் அமைந்துள்ள கட்டடங்கள் மற்றும் ஏனைய எல்லாவற்றுடனும் சொல்லப்பட்ட துண்டுகள் 15 இன் எல்லைகள் - வடக்கு : வரைபடம் இல. 1296 இல் துண்டு 2 ; கிழக்கு : வரைபடம் இல. 2344 இல் துண்டு 16 ; தெற்கு : துண்டு 27 (வீதிக்கான ஒதுக்கம் 10 அடி அகலம்) ; மேற்கு : சொல்லப்பட்ட வரைபடம் இல. 2344 இல் துண்டு 14. சொல்லப்பட்ட 2344 ஆம் இலக்க வரைபடத்தின்படி இது பன்னிரண்டு தசம் ஒன்று ஆறு பேர்ச்சஸ்கள் (0ஏ. 0றூ. 12.16பே.) விஸ்தீரணம் கொண்டது.

இதனுடன் சொல்லப்பட்ட வரைபடம் இல. 2344 இல் துண்டு 27 எனக் குறிக்கப்பட்டுக் காட்டப்பட்ட வீதி ஒதுக்கத்தின் மேலாகவும் ஊடாகவும் வழி உரிமை கொண்டதாக.

பணிப்பாளர் சபையின் கட்டளைப்படி,

சீ.கொட்டிகல,
சிரேஷ்ட பிரதிப்பொது முகாமையாளர் - சட்டம்

8-150/9

---

**செலான் வங்கி ப.வ.க.**

(2007 ஆம் ஆண்டின் 7ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்துக்கிணங்க PQ9 குறிப்பீட்டின்கீழ் பதிவுசெய்யப்பட்டது)

1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிகளால் வழங்கப்பட்ட கடன்கள் அறிவிடுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 4 ஆம் பிரிவின்கீழ், செலான் வங்கி ப.வ.க. பணிப்பாளர் சபையினால் அங்கீகரிக்கப்பட்ட தீர்மானம்

கணக்கு இல. : 0770 -01447274-101 (பட்டதாரி தொழில் முயற்சியாளர் கடன் கிளை)

1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க, வங்கிகளினால் வழங்கப்பட்ட கடன்களை அறவிடுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 8 ஆம் பிரிவின் கீழ், வரையறுக்கப்பட்ட செலான் வங்கி ப.வ.க. பணிப்பாளர் சபையினால் 2010.06.08 ஆந் திகதி நடத்தப்பட்ட கூட்டத்தில் பின்வருமாறு விசேடமாகவும் ஏகமனதாகவும் தீர்மானிக்கப்பட்டதென இத்தால் அறிவிக்கப்படுகின்றது:-

"உல்பத்யாய, தம்புலுஹல்மில்லேவ, கெக்கிராவையைச் சேர்ந்த கலல்பிட்டிய ராஜபக்ஷலாகே அசங்க சஞ்சய பண்டார ராஜபக்ஷ மற்றும் கலல்பிட்டிய ராஜபக்ஷலாகே சிறிசேன ராஜபக்ஷ "கடனெடுத்தவர்கள்' என்ற வகையில் செலான் வங்கி ப.வ.க.(2007 ஆம் ஆண்டின் 7ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்துக்கிணங்க பீகியூ 9 குறிப்பீட்டின் கீழ் பதிவுசெய்யப்பட்டது) சார்பில் பிரசித்த நொத்தாரிசு கே. கே. டபிள்யூ. சாமரசிங்கவால் அத்தாட்சிப்படுத்தப்பட்ட 2004, மாச்சு 10 ஆந் திகதிய 467, பிரசித்த நொத்தாரிசு சந்தியா தெடுலங்கொடவால் அத்தாட்சிப்படுத்தப்பட்ட 2005, யூலை 18 ஆந் திகதிய 825, பிரசித்த நொத்தாரிசு விராஜ் விக்கிரமரத்னவால் அத்தாட்சிப்படுத்தப்பட்ட 2006, சனவரி 09 ஆந் திகதிய 37 ஆம் இலக்க முறிகளின் மீது வருமதியான கொடுப்பன வுத் தவணை தவறியுள்ளார்கள். ஆதலால், இப்பொழுது 2009, மே 25 ஆந் தேதியன்றுள்ளவாறு சொல்லப்பட்ட முறியின் மீது ஐந்து இலட்சத்து பத்தாயிரத்து இருநூற்று முப்பத்தொன்பது ரூபா அறுபத்தொரு சதம் (ரூ. 5,10,239.61) மற்றும் ஒரு இலட்சத்து இருபதாயிரத்து முந்நூற்று இருபத்தாறு ரூபா பன்னிரண்டு சதம் (ரூ. 1,20,326.12) செலான் வங்கி ப. வ. கம்பனிக்கு உரியதாகச் செலுத்தப்பட வேண்டியுள்ளது. ஆதலால் சொல்லப்பட்ட மொத்த ரூபா 6,30,565.73 பணத்தொகையையும் 2009, மே 26 ஆந் தேதி முதல் விற்பனைத் தேதி வரை ஆண்டொன்றுக்கு பத்தொன்பது சதவீதப்படி (19%) வட்டியையும் விளம்பரச் செலவுகளையும் உறப்பட்ட வேறு அறவீடுகளையும், அதன் பின்னர் கொடுப்பனவு கள் எவையும் பெறப்பட்டிருப்பின் அவற்றைக் கழித்தும் அறவிடுவதற்காக, சொல்லப்பட்ட 467, 825 மற்றும் 37 ஆம் இலக்க முறிகளினால் செலான் வங்கி ப. வ. கம்பனிக்கு ஈடுவைக்கப்பட்ட தும் இதற்கான அட்டவணையில் மேலும் விவரிக்கப்படுவதுமான ஆதனம் உத்தரவுபெற்ற ஏலதாரர் திரு. துசித கருணாரத்ன என்பவரால் பகிரங்க ஏலத்தில் விற்பனை செய்யப்பட வேண்டுமென செலான் வங்கி ப.வ.க பணிப்பாளர் சபை 1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க, வங்கிகளால் வழங்கப்பட்ட கடன்கள் அறவிடுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தினால் உரித்தாக்கப்பட்ட தத்துவங்களின் கீழ் இத்தால் தீர்மானிக்கின்றது"

**அட்டவணை**

வடமத்திய மாகாணம், அனுராதபுர மாவட்டத்தில் பலகல பிரதேச செயலாளர் பிரிவில் தென்கலகம் பலாத்த பத்து அல்லது கோறளே, 660 நாரங்கஸ்வெவ கி. சே. பிரிவு, உல்பொத்யாய கிராமத்தில் அமைந்துள்ளதும் வரைபடம் இல. 1124 (665/1124) இல் அத்துடன் 1996.02.28 ஆந் திகதிய மானிய இல. அனு/பல/பிரா/185 இல் விவரிக்கப்பட்டதுமான ஓர் அரச காணிப்பங்கீடு. இதன் எல்லைகள் - வடக்கு : வீதி; கிழக்கு : வீதி; தெற்கு : KE/A/125/132 (அல்லது NE/A125/132) ; மேற்கு KE/A14 (அல்லது NE/A14) 1.29 ஹெக்டயர் (ஒன்று தசம் இரண்டு ஒன்பது ஹெக்டயர்) விஸ்தீரணம் கொண்ட இது அதன்கண் அமைந்துள்ள ஏனைய எல்லாவற்றுடனும்.

இக்காணி பின்வருமாறு மேலும் விவரிக்கப்படுகின்றது:-

வடமத்திய மாகாணம், அனுராதபுர மாவட்டத்தில் பலகல பிரதேச செயலாளர் பிரிவு, தென்கலகம் பலாத்த பத்து அல்லது கோறளே, 660 நாரங்கஸ்வெவ கி. சே. பிரிவு, உல்பொத்யாய கிராமத்தில் அமைந்துள்ளதும் உத்தரவுபெற்ற நிலஅளவையாளர் கே. கே. சின்னையாவால் தயாரிக்கப்பட்ட 2003.11.29 ஆந் திகதிய வரைபடம் இல. 262 இல் துண்டு 1 அத்துடன் 1996.02.28 ஆந் திகதிய மானிய இல. அனு/பல/பிரா/185 இல் மற்றும் இறுதிக் கிராம வரைபடம் இல. 1124 (665/1124) இல் காட்டப்பட்ட துண்டு 2 இன் பகுதியின் மீள் அளவீடாயுள்ளதுமான "கொட இடம" என்றழைக்கப்படும் ஓர் அரச காணிப்பங்கீடு அதன்கண் அமைந்தள்ள ஏனைய எல்லாவற்றுடனும். இதன் எல்லைகள் - வடக்கு : வீதியூடான ஒதுக்கம் (பி. ச.) ; கிழக்கு : வீதியூடான ஒதுக்கம் (பி. ச.) ; தெற்கு : BOD 1124 (665/1124) இல்

துண்டு 125/132; மேற்கு : இதே காணியின் எஞ்சிய பங்கு. இது மூன்று ஏக்கர் முப்பது பேர்ச்சஸ்கள் (3ஏ. 0றூ. 30பே.) அல்லது 1.290 ஹெக்டயர் (ஒன்று தசம் இரண்டு ஒன்பது பூச்சியம் ஹெக்டயர்) விஸ்தீரணம் கொண்டது.

பணிப்பாளர் சபையின் கட்டளைப்படி,

சீ.கொட்டிகல,
சிரேஷ்ட பிரதிப்பொது முகாமையாளர் - சட்டம்

8-150/10

---

## ஹற்றன் நஷனல் வங்கி பீ.எல்.சீ.

(ஹற்றன் நஷனல் வங்கி லிமிட்டெட் என முன்பு அறியப்பட்டது)

*1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிகளினால் வழங்கப்பட்ட கடன்கள் அறவிடப்படல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 04 ஆம் பிரிவின் கீழ் ஹற்றன் நஷனல் வங்கி பீ. எல். சீ. பணிப்பாளர்கள் சபையினால் நிறைவேற்றப்பட்ட தீர்மானம்*

(அம்பலாங்கொடை கிளை) - நளின் ஜீவந்த விமலவீர

ஹற்றன் நஷனல் வங்கி பீ. எல். சீ. பணிப்பாளர்கள் சபையினால், 2010 ஆம் ஆண்டு யூன் மாதம் 03 ஆந் திகதியன்று நடத்தப்பட்ட கூட்டம் ஒன்றில் விசேடமாகவும், ஏகமனதாகவும் எடுக்கப்பட்ட தீர்மானம்-

"நளின் ஜீவந்த விமலவீர கடப்பாடு உடையவராக, ஹற்றன் நஷனல் வங்கி பீ.எல்.சி சார்பில் அம்பலாங்கொடை பிரசித்த நொத்தாரிசு டபிள்யூ. ஓ. ஏ. டீ சில்வாவினால் அத்தாட்சிப் படுத்தப்பட்ட 2008, ஏப்பிறல் 21 ஆந் திகதியிடப்பட்ட 1828 ஆம் இலக்க முறி மீதான வருமதியான கொடுப்பனவில் தவணை தவறியுள்ளார். ஆதலாலும், 2009, திசெம்பர் 10 ஆந் திகதியன்று உள்ளவாறாக ஹற்றன் நஷனல் வங்கி பீ.எல்.சி தாபனத்திற்கு சொல்லப்பட்ட முறி மீது ஐம்பத்தேழு இலட்சத்து முப்பத் தொன்பதாயிரத்து நாநூற்று எண்பத்துமூன்று ரூபா அறுபத்தேழு சதம் சதம் (ரூ. 57,39,483.67) கொண்ட பணத்தொகை ஒன்று தற்போது வருமதியாகவும் சேர்மதியாகவும் உள்ளதாலும், அத்துடன் ஹற்றன் நஷனல் வங்கி பீ.எல்.சீ. பணிப்பாளர்கள் சபையானது 1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிகளினால் வழங்கப்பட்ட கடன்கள் அறவிடப்படல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தினால் அதற்கு உரித்தாக்கப்பட்ட தத்துவங்களின் கீழ் இதற்கான அட்டவணையில் முழுமையாக விபரிக்கப்பட்டதும் சொல்லப்பட்ட 1828 ஆம் இலக்க முறிகள் மூலம் ஹற்றன் நஷனல் வங்கி பீ.எல்.சீ. தாபனத்திற்கு ஈடுவைக்கப்பட்டதுமான ஆதனமும் வளவுகளும் சொல்லப்பட்ட ரூபா 57,39,483.67 பணத்தொகையை 2009, திசெம்பர் 11 ஆந் திகதியில் இருந்து விற்பனை நாள் வரை, அதன் மீதான மேலும் வட்டியுடனும், விளம்பரச் செலவுகள் மற்றும் கூறப்பட்ட வேறு இறுப்பனவுகள் ஆகியவற்றோடும் சேர்த்து (பெறப்பட்ட கொடுப்பனவுகள் எவையும் இருந்தால் அவற்றைக் கழித்து) அறவிடுவதற்காக கொழும்பு உரிமம் பெற்ற ஏல விற்பனையாளர் டலஸ் கெலாட்டினால் பகிரங்க ஏலம் மூலம் விற்பனை செய்யப்படுதல் வேண்டும் என இத்தால் தீர்மானிக் கப்படுகின்றது."

### அட்டவணை

தென் மாகாணம், காலி மாவட்டம், வெல்லபொட பற்றுவின் கரந்தெனியவின் கிரிபெடவில் உள்ள எல்லாவற்றையும் கொண்ட "அப்பிரிக்கப்பட்ட மற்றும் வரையறுக்கப்பட்ட பகிரப்பட்ட தன்கஹாவத்த இன் காணித்துண்டு 43" என அழைக்கப்படும் முழுவதுமான பகிரப்பட்ட காணியுடனான கட்டடங்கள், பயிர்ச்செய்கைகள் மற்றும் அத்துடனான எல்லாவற்றையும் கொண்ட ஆதனத்தில் எல்லைகள் - வடக்கு: அதே காணியின் காணித்துண்டு இலக்கம் 41 ; கிழக்கு : காணித்துண்டு 44 ; தெற்கு : யக்கட்டுவ - கிரிபெத பிரதான வீதி ; மேற்கு : காணித்துண்டு 42. அத்துடன் அண்மையில் நிலஅளவை செய்யப்பட்டது. உரிமம் பெற்ற நிலஅளவையாளர் எம். பீ. ரஞ்சித் ஆனந்தவினால் தயாரிக்கப்பட்ட 2008, பெப்புருவரி 2 ஆந் திகதியிடப்பட்ட 2060ஏ இலக்க நிலஅளவை வரைபடத்தில் விபரமாக விளக்கப்பட்டுள்ளதற்கு அமைவானதும் பலப்பிட்டிய காணிப் பதிவகத்தில் ஏ271/193 என்ற தலைப்பின் கீழ் பதிவு செய்யப்பட்ட ஒரு ஏக்கர் மற்றும் பதின்மூன்று பேர்ச்சஸ்கள் (1ஏ. 0றூ. 13பே.) விஸ்தீரணம் கொண்டதுமான ஆதனம்.

பணிப்பாளர் சபையின் கட்டளைப்படி,

இந்திராணி குணசேகர,
பி.பொ.மு (சட்டம்) /சபைச் செயலாளர்.

8-154/1

---

## ஹற்றன் நஷனல் வங்கி பீ.எல்.சீ.

(ஹற்றன் நஷனல் வங்கி லிமிட்டெட் என முன்பு அறியப்பட்டது)

*1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிகளினால் வழங்கப்பட்ட கடன்கள் அறவிடப்படல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 04 ஆம் பிரிவின் கீழ் ஹற்றன் நஷனல் வங்கி பீ. எல். சீ. பணிப்பாளர்கள் சபையினால் நிறைவேற்றப்பட்ட தீர்மானம்*

(பலாங்கொடை கிளை) - மக்கோனா குருநான்சலாகே உப்புல் சந்திய பர்ணாண்டோ

ஹற்றன் நஷனல் வங்கி பீ. எல். சீ. பணிப்பாளர்கள் சபையினால், 2010 ஆம் ஆண்டு யூன் மாதம் 03 ஆந் திகதியன்று நடத்தப்பட்ட கூட்டம் ஒன்றில் விசேடமாகவும், ஏகமனதாகவும் எடுக்கப்பட்ட தீர்மானம்-

"மக்கோனா குருநான்சலாகே உப்புல் சந்திய பர்ணாண்டோ கடப்பாடு உடையவராக, ஹற்றன் நஷனல் வங்கி பீ.எல்.சி சார்பில் இரத்தினபுரி பிரசித்த நொத்தாரிசு எஸ். எச். கொஸ்கொடகேயினால் அத்தாட்சிப்படுத்தப்பட்ட 2005, பெப்புருவரி 09 ஆந் திகதியிடப்பட்ட 455 ஆம் இலக்க முறி மீதான வருமதியான கொடுப்பனவில் தவணை தவறியுள்ளார்கள். ஆதலாலும், 2009, செத்தெம்பர் 30 ஆந் திகதியன்று உள்ளவாறாக ஹற்றன் நஷனல் வங்கி பீ.எல்.சி தாபனத்திற்கு சொல்லப்பட்ட முறி மீது ஒரு இலட்சத்து நாற்பதாயிரத்து இருநூற்று பத்து ரூபா பன்னிரண்டு சதம் (ரூ. 1,40,210.12) கொண்ட பணத்தொகை ஒன்று தற்போது வருமதியாகவும் சேர்மதியாகவும் உள்ளதாலும், அத்துடன் ஹற்றன் நஷனல் வங்கி பீ.எல்.சீ. பணிப்பாளர்கள் சபையானது 1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிகளினால் வழங்கப்பட்ட கடன்கள் அறவிடப்படல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தினால் அதற்கு உரித்தாக்கப்பட்ட தத்துவங்களின் கீழ் இதற்கான அட்டவணையில் முழுமையாக விபரிக்கப்பட்டதும் சொல்லப்பட்ட 455 ஆம் இலக்க முறிகள் மூலம் ஹற்றன் நஷனல் வங்கி பீ.எல்.சீ. தாபனத்திற்கு ஈடுவைக்கப்பட்டதுமான ஆதனமும் வளவுகளும் சொல்லப்பட்ட ரூபா 1,40,210.12 பணத்தொகையை 2009, ஒற்றோபர் 01 ஆந் திகதியில் இருந்து விற்பனை நாள் வரை, அதன் மீதான மேலும்

வட்டியுடனும், விளம்பரச் செலவுகள் மற்றும் கூறப்பட்ட வேறு இறுப்பனவுகள் ஆகியவற்றோடும் சேர்த்து (பெறப்பட்ட கொடுப்பனவுகள் எவையும் இருந்தால் அவற்றைக் கழித்து) அறவிடுவதற்காக கொழும்பு உரிமம் பெற்ற ஏல விற்பனையாளர் பீ. முத்துக்குமாரணவினால் பகிரங்க ஏலம் மூலம் விற்பனை செய்யப்படுதல் வேண்டும் என இத்தால் தீர்மானிக்கப்படுகின்றது."

**அட்டவணை**

சப்ரகமுவ மாகாணம், இரத்தினபுரி மாவட்டத்தின் மெத கோறளவின் ஹெலவ்ட பற்றுவின் பலாங்கொடை நகர சபை எல்லைக்கு உட்பட்ட பலாங்கொடையில் உள்ள ரஸ்சகல வீதியின் 76/ 49 வரிமதிப்பீட்டிலக்கத்தைக் கொண்டுள்ள "போகஹாஹேனவின் பகுதி" என அழைக்கப்படும் காணியுடனான கட்டடங்கள் மற்றும் அத்துடனான எல்லாவற்றையும் கொண்ட ஆதனம், உரிமம் பெற்ற நிலஅளவையாளர் கே. நந்தசேனவினால் தயாரிக்கப்பட்ட 24.01.1992 ஆந் திகதியிடப்பட்ட 306 ஆம் இலக்க வரைபடத்தில் விபரமாக விளக்கப்பட்டுள்ள (ஆனால் மிகவும் சரியாக காணித்துண்டு 13) அப்பிரிக்கப்பட்ட மற்றும் வரையறுக்கப்பட்ட பகிரப்பட்ட காணியின் எல்லைகள் - வடக்கு: காணித்துண்டு 8 (வீதி) ; கிழக்கு : காணித்துண்டு 14 ; தெற்கு : காணித்துண்டு 17 (வீதி) ; மேற்கு : காணித்துண்டு 14. ஆனால் மிகவும் சரியாக காணித்துண்டு 12. அத்துடன், சொல்லப்பட்ட 306 ஆம் இலக்க வரைபடத்திற்கு அமைவானதும், இரத்தினபுரி மாவட்ட காணிப்பதிவகத்தில் ஈ 273/247 என்ற தலைப்பின் கீழ் பதிவு செய்யப்பட்ட எட்டு தசம் மூன்று நான்கு பேர்ச்சஸ்கள் (0ஏ. 0றூ. 8.34பே.) விஸ்தீரணம் கொண்டதுமான ஆதனம்.

முன் சொல்லப்பட்ட ஆதனம், மீள நில அளவை செய்யப்பட்டு, உரிமம் பெற்ற நிலஅளவையாளர் ஈ. ரி. பீ. பெரேராவினால் தயாரிக்கப்பட்ட 06.12.2004 ஆந் திகதியிடப்படட 1800 ஆம் இலக்க வரைபடத்தில் காட்டப்பட்டுள்ளதன் விபரங்கள் பின்வருமாறு :-

சப்ரகமுவ மாகாணம், இரத்தினபுரி மாவட்டத்தின் மெத கோறளவின் ஹெலவ்ட பற்றுவின் பலாங்கொடை நகர சபை எல்லைக்கு உட்பட்ட பலாங்கொடையில் உள்ள ரஸ்சகல வீதியின் 76/ 49 வரிமதிப்பீட்டிலக்கத்தைக் கொண்டுள்ள "போகஹாஹேன" என அழைக்கப்படும் காணியுடனான கட்டடங்கள் மற்றும் அத்துடனான எல்லாவற்றையும் கொண்ட ஆதனம், 1800 ஆம் இலக்க வரைபடத்தில் விபரமாக விளக்கப்பட்டுள்ள காணித்துண்டு 1 என அடையாளம் இடப்பட்ட அப்பிரிக்கப்பட்ட மற்றும் வரையறுக்கப்பட்ட பகிரப்பட்ட காணியின் எல்லைகள் - வடக்கு : உரிமம் பெற்ற நிலஅளவையாளர் கே. நந்தசேனவினால் தயாரிக்கப்பட்ட 306 ஆம் இலக்க வரைபடத்தில் உள்ள காணித்துண்டு 8 (வீதி ந. ச.) ; கிழக்கு : கே. நந்தசேனவினால் தயாரிக்கப்பட்ட 306 ஆம் இலக்க வரைபடத்தில் உள்ள காணித்துண்டு 14 ; தெற்கு : உரிமம் பெற்ற நிலஅளவையாளர் கே. நந்தசேனவினால் தயாரிக்கப்பட்ட 306 ஆம் இலக்க வரைபடத்தில் உள்ள காணித்துண்டு 17(வீதி ந. ச.) ; மேற்கு : கே. நந்தசேனவினால் தயாரிக்கப்பட்ட 306 ஆம் இலக்க வரைபடத்தில் உள்ள காணித்துண்டு 12. அத்துடன் சொல்லப்படட 1800 ஆம் இலக்க வரைபடத்திற்கு அமைவானதும், எட்டு தசம் மூன்று பேர்ச்சஸ்கள் (0ஏ. 0றூ. 8.3பே.) விஸ்திரணம் கொண்டதுமான ஆதனம்.

பணிப்பாளர் சபையின் கட்டளைப்படி,

இந்திராணி குணசேகர,
பி.பொ.மு (சட்டம்) /சபைச் செயலாளர்.

8-154/2

---

**ஹற்றன் நஷனல் வங்கி பீ.எல்.சீ.**

(ஹற்றன் நஷனல் வங்கி லிமிட்டெட் என முன்பு அறியப்பட்டது)

*1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிகளினால் வழங்கப்பட்ட கடன்கள் அறவிடப்படல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 04 ஆம் பிரிவின் கீழ் ஹற்றன் நஷனல் வங்கி பீ. எல். சீ. பணிப்பாளர்கள் சபையினால் நிறைவேற்றப்பட்ட தீர்மானம்*

(நித்தம்புவ கிளை) - ருவங்கல பிரேமசந்திர

ஹற்றன் நஷனல் வங்கி பீ. எல். சீ. பணிப்பாளர்கள் சபையினால், 2010 ஆம் ஆண்டு மாச்சு மாதம் 31 ஆந் திகதியன்று நடத்தப்பட்ட கூட்டம் ஒன்றில் விசேடமாகவும், ஏகமனதாகவும் எடுக்கப்பட்ட தீர்மானம்-

" ருவங்கல பிரேமசந்திர கடப்பாடு உடையவராக, ஹற்றன் நஷனல் வங்கி பீ.எல்.சி சார்பில் கம்பஹா பிரசித்த நொத்தாரிசு பீ. என். ஏக்கநாயக்கவினால் அத்தாட்சிப்படுத்தப்பட்ட 2005, ஒற்றோபர் 18 ஆந் திகதியிடப்பட்ட 5143 ஆம் இலக்க முறி மீதான வருமதியான கொடுப்பனவில் தவணை தவறியுள்ளார். ஆதலாலும், 2010, பெப்புருவரி 28 ஆந் திகதியன்று உள்ளவாறாக ஹற்றன் நஷனல் வங்கி பீ.எல்.சி தாபனத்திற்கு சொல்லப்பட்ட முறி மீது நான்கு இலட்சத்து தொண்ணூற்று ஒன்பதாயிரத்து இருபத்து மூன்று ரூபா முப்பத்தொன்பது சதம் (ரூ. 4,99,023.39) கொண்ட பணத்தொகை ஒன்று தற்போது வருமதியாகவும் சேர்மதியாகவும் உள்ளதாலும், அத்துடன் ஹற்றன் நஷனல் வங்கி பீ.எல்.சீ. பணிப்பாளர்கள் சபையானது 1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிகளினால் வழங்கப்பட்ட கடன்கள் அறவிடப்படல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தினால் அதற்கு உரித்தாக்கப்பட்ட தத்துவங்களின் கீழ் இதற்கான அட்டவணையில் முழுமையாக விபரிக்கப்பட்டதும் சொல்லப்பட்ட 5143 ஆம் இலக்க முறி மூலம் ஹற்றன் நஷனல் வங்கி பீ.எல்.சீ. தாபனத்திற்கு ஈடுவைக்கப்பட்டது மான ஆதனமும் வளவுகளும் சொல்லப்பட்ட ரூபா 4,99,023.39 பணத்தொகையை 2010, மாச்சு 01 ஆந் திகதியில் இருந்து விற்பனை நாள் வரை, அதன் மீதான மேலும் வட்டியுடனும், விளம்பரச் செலவுகள் மற்றும் கூறப்பட்ட வேறு இறுப்பனவுகள் ஆகியவற்றோடும் சேர்த்து (பெறப்பட்ட கொடுப்பனவுகள் எவையும் இருந்தால் அவற்றைக் கழித்து) அறவிடுவதற்காக கொழும்பு உரிமம் பெற்ற ஏல விற்பனையாளர் பீ. முத்துகுமாரணவினால் பகிரங்க ஏலம் மூலம் விற்பனை செய்யப்படுதல் வேண்டும் என இத்தால் தீர்மானிக்கப்படுகின்றது."

**அட்டவணை**

மேல் மாகாணம், கம்பஹா மாவட்டம், சியன்ன கோறளவின் மெதபற்றுவின் மீரிகம பிரதேச சபையின் பல்லேவல உப அலுவலகத்தின் மாளிகாதென்ன எல்லைக்குட்பட்ட வந்துராவ கிராமசேவகர் பிரிவில் உள்ள "மில்லகஹாதென்ன" என அழைக்கப்படும் காணியுடனான கட்டடங்கள் மற்றும் அத்துடனான எல்லாவற்றையும் கொண்ட ஆதனம். உரிமம் பெற்ற நிலஅளவையாளர் எஸ். பீ. ஆர். பத்திராஜாவினால் தயாரிக்கப்பட்ட 17.11.2004 ஆந் திகதியிடப்பட்ட 3140 ஆம் இலக்க வரைபடத்தில் விபரமாக விளக்கப்பட்டள்ள காணித்துண்டு 8 என அடையாளமிடப்பட்ட அப்பிரிக்கப்பட்ட மற்றும் வரையறுக்கப்பட்ட பகிரப்பட்ட காணியின் எல்லைகள் - வடக்கு : காணித்துண்டுகள் 6 மற்றும் 10 ; கிழக்கு : காணித்துண்டு 9 (15 அடி அகலமான வீதி) ; தெற்கு : பிரதேச சபை வீதி; மேற்கு : காணித்துண்டுகள் 7 மற்றும் 6 அத்துடன் சொல்லப்பட்ட 3140 ஆம் இலக்க வரைபடத்திற்கு அமைவானதும் கம்பஹா மாவட்ட காணிப்பதிவகத்தில் LDO 8C/ 270 என்ற தலைப்பின் கீழ் பதிவு செய்யப்பட்ட முப்பத்தாறு பேர்ச்சுகள் (0ஏ. 0றூ. 36பே.) மறுபெயர்

பூஜ்யம் தசம் பூஜ்யம் ஒன்பது ஒன்று பூஜ்யம் ஹெக்டயர்கள் (0.0910) விஸ்தீரணம் கொண்டதுமான ஆதனம்.

அத்துடன் 3140 ஆம் இலக்க வரைபடத்தில் உள்ள காணித்துண்டு 9 மீதான பாதை உரிமையுடன் சேர்த்து.

பணிப்பாளர் சபையின் கட்டளைப்படி,

இந்திராணி குணசேகர,
பி.பொ.மு (சட்டம்) /சபைச் செயலாளர்.

8-154/3

---

## ஹற்றன் நஷனல் வங்கி பீ.எல்.சீ.

(ஹற்றன் நஷனல் வங்கி லிமிட்டெட் என முன்பு அறியப்பட்டது)

*1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிகளினால் வழங்கப்பட்ட கடன்கள் அறவிடப்படல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 04 ஆம் பிரிவின் கீழ் ஹற்றன் நஷனல் வங்கி பீ. எல். சீ. பணிப்பாளர்கள் சபையினால் நிறைவேற்றப்பட்ட தீர்மானம்*

(நொச்சியாகம கிளை) - புஞ்சி பண்டாகே திசநாயக்க மற்றும் முதியான்சகே அபயசிங்க

ஹற்றன் நஷனல் வங்கி பீ. எல். சீ. பணிப்பாளர்கள் சபையினால், 2010 ஆம் ஆண்டு யூன் மாதம் 03 ஆந் திகதியன்று நடத்தப்பட்ட கூட்டம் ஒன்றில் விசேடமாகவும், ஏகமனதாகவும் எடுக்கப்பட்ட தீர்மானம்-

"புஞ்சி பண்டாகே திசநாயக்க மற்றும் முதியான்சகே அபயசிங்க கடப்பாடு உடையவர்களாக, ஹற்றன் நஷனல் வங்கி பீ.எல்.சி சார்பில் அனுராதபுரம் பிரசித்த நொத்தாரிசு ஏ. வி. ஏ. திசாநாயக்காவினால் அத்தாட்சிப்படுத்தப்பட்ட 2006, பெப்புருவரி 22 ஆந் திகதியிடப்பட்ட 4136 ஆம் இலக்க முறி, 2007, ஏப்பிறல் 25 ஆந் திகதியிடப்பட்ட 4877 ஆம் இலக்க முறி, மற்றும் 2008, செத்தெம்பர் 05 ஆந் திகதியிடப்பட்ட 5494 ஆம் இலக்க முறி, என்பன மீதான வருமதியான கொடுப்பனவில் தவணை தவறியுள்ளார்கள். ஆதலாலும், 2010, பெப்புருவரி 23 ஆந் திகதியன்று உள்ளவாறாக ஹற்றன் நஷனல் வங்கி பீ.எல்.சி தாபனத்திற்கு சொல்லப்பட்ட முறி மீது எட்டு இலட்சத்து ஐம்பத்தோராயிரத்து இருநூற்று பதின்மூன்று ரூபா நாற்பத்தேழு சதம் (ரூ. 8,51,213.47) கொண்ட பணத்தொகை ஒன்று தற்போது வருமதியாகவும் சேர்மதியாகவும் உள்ளதாலும், அத்துடன் ஹற்றன் நஷனல் வங்கி பீ.எல்.சீ. பணிப்பாளர்கள் சபையானது 1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிகளினால் வழங்கப்பட்ட கடன்கள் அறவிடப்படல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தினால் அதற்கு உரித்தாக்கப்பட்ட தத்துவங்களின் கீழ் இதற்கான அட்டவணையில் முழுமையாக விபரிக்கப்பட்டதும் சொல்லப்பட்ட 4136, 4877 மற்றும் 5494 ஆம் இலக்க முறிகள் மூலம் ஹற்றன் நஷனல் வங்கி பீ.எல்.சீ. தாபனத்திற்கு ஈடுவைக்கப்பட்டதுமான ஆதனமும் வளவுகளும் சொல்லப்பட்ட ரூபா 8,51,213.47 பணத்தொகையை 2010, பெப்புருவரி 24 ஆந் திகதியில் இருந்து விற்பனை நாள் வரை, அதன் மீதான மேலும் வட்டியுடனும், விளம்பரச் செலவுகள் மற்றும் கூறப்பட்ட வேறு இறுப்பனவுகள் ஆகியவற்றோடும் சேர்த்து (பெறப்பட்ட கொடுப்பனவுகள் எவையும் இருந்தால் அவற்றைக் கழித்து) அறவிடுவதற்காக கொழும்பு உரிமம் பெற்ற ஏல விற்பனையாளர் ஐ. டபிள்யு. ஜயசூரியவினால் பகிரங்க ஏலம் மூலம் விற்பனை செய்யப்படுதல் வேண்டும் என இத்தால் தீர்மானிக்கப் படுகின்றது."

### அட்டவணை

வடமத்திய மாகாணம், அநுராதபுரம் மாவட்ட நிர்வாகத்தில் உள்ள நொச்சியாகம பிரதேச செயலாளர் பிரிவின் வில்லச்சிய கோறளவின் 350 ஆம் இலக்க கிராம சேவகர் பிரிவின் மானல்வெவ கிராமத்தில் உள்ளதும் நிலஅளவை நாயகத்தின் பொறுப்பில் வைக்கப்பட்டுள்ள, அநுராதபுரம் நிலஅளவை அத்தியட்சகரினால் செல்லத்தக்க தாக்கப்பட்ட ஏ133 இலக்க இறுதி கொலனி வரைபடத்தின் காணித்துண்டு 223 என அடையாளம் இடப்பட்ட பகிரப்பட்ட அரச காணியின் எல்லைகள் - வடக்கு : காணித்துண்டு 226 ; கிழக்கு : காணித்துண்டுகள் 224, 226 ; தெற்கு : காணித்துண்டுகள் 222, 221, 224 ; மேற்கு : காணித்துண்டுகள் 222, 224 அத்துடன், அநுராதபுரம் மாவட்ட காணிப்பதிவகத்தில் LDO 584/177 இல் பதிவு செய்யப்பட்ட ஹெக்டயர் பூஜ்யம் தசம் இரண்டு இரண்டு பூஜ்யம் (ஹெக். 0.220) விஸ்தீரணத்துடனான கட்டடங்கள், மரங்கள், பயிர்ச்செய்கைகள் மற்றும் அத்துடனான எல்லாவற்றையும் கொண்டதுமான ஆதனம்.

உரிமம் பெற்ற நிலஅளவையாளர் ரி. பி. ஆரியசேனவினால் தயாரிக்கப்பட்ட 21.01.2006 ஆந் திகதியிடப்பட்ட 2123 ஆம் இலக்க வரைபடத்தில் உள்ள காணித்துண்டு 1, என அடையாளம் இடப்பட்ட முன்சொல்லப்பட்ட காணி, மீள நிலஅளவை செய்யப்பட்டதன் எல்லைகள் - வடக்கு : காணித்துண்டுகள் 204 (வீதி) மற்றும் FCPA 133 இன் 266 ; கிழக்கு : FCPA 133 இன் காணித்துண்டுகள் 224 மற்றும் 226 ; தெற்கு : FCPA 133 இன் காணித்துண்டுகள் 222, 221 மற்றும் 224 ; மேற்கு : FCPA 133 இன் காணித்துண்டுகள் 202 மற்றும் 204 (வீதி) அத்துடன், ஹெக்டயர் பூஜ்யம் தசம் இரண்டு இரண்டு பூஜ்யம் (ஹெக். 0.220) அல்லது இரண்டு றூட் மற்றும் பூஜ்யம் ஏழு பேர்ச்சஸ்கள் (0ஏ. 2றூ. 7பே.) விஸ்தீரணத்துடனான கட்டடங்கள், மரங்கள், பயிர்ச்செய்கைகள் மற்றும் அத்துடனான எல்லாவற்றையும் கொண்டதுமான ஆதனம்.

பணிப்பாளர் சபையின் கட்டளைப்படி,

இந்திராணி குணசேகர,
பி.பொ.மு (சட்டம்) /சபைச் செயலாளர்.

8-154/4

---

## ஹற்றன் நஷனல் வங்கி பீ.எல்.சீ.

(ஹற்றன் நஷனல் வங்கி லிமிட்டெட் என முன்பு அறியப்பட்டது)

*1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிகளினால் வழங்கப்பட்ட கடன்கள் அறவிடப்படல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 04 ஆம் பிரிவின் கீழ் ஹற்றன் நஷனல் வங்கி பீ. எல். சீ. பணிப்பாளர்கள் சபையினால் நிறைவேற்றப்பட்ட தீர்மானம்*

(செட்டியார் தெரு கிளை) - முத்துக்குட்டி குபேரலிங்கம்

ஹற்றன் நஷனல் வங்கி பீ. எல். சீ. பணிப்பாளர்கள் சபையினால், 2010 ஆம் ஆண்டு யூலை மாதம் 01 ஆந் திகதியன்று நடத்தப்பட்ட கூட்டம் ஒன்றில் விசேடமாகவும், ஏகமனதாகவும் எடுக்கப்பட்ட தீர்மானம்-

"முத்துக்குட்டி குபேரலிங்கம் கடப்பாடு உடையவராக, ஹற்றன் நஷனல் வங்கி பீ.எல்.சி சார்பில் கொழும்பு பிரசித்த நொத்தாரிசு

என்.எம்.சி.பீ.வெத்தசிங்கவினால் அத்தாட்சிப்படுத்தப்பட்ட 1997, திசெம்பர் 17 ஆந் திகதியிடப்பட்ட 1167 ஆம் இலக்க முறி, ஏ. ஆர். டீ. சில்வாவினால் அத்தாட்சிப்படுத்தப்பட்ட 2000, திசெம்பர் 22 ஆந் திகதியிடப்பட்ட 652 ஆம் இலக்க முறி, 2003, ஓகத்து 26 ஆந் திகதியிடப்பட்ட 964 ஆம் இலக்க முறி, 2005, மே 31 ஆந் திகதியிடப்பட்ட 1514 ஆம் இலக்க மற்றும் 2006, யூன் 05 ஆந் திகதியிடப்பட்ட 1848 ஆம் இலக்க மற்றும், கொழும்பு பிரசித்த நொத்தாரிசு யூ. எஸ். கே. ஹேரத்தினால் அத்தாட்சிப்படுத்தப்பட்ட 2007, ஒற்றோபர் 31 ஆந் திகதியிடப்பட்ட 3002 ஆம் இலக்க முறி என்பன மீதான வருமதியான கொடுப்பனவில் தவணை தவறியுள்ளார். ஆதலாலும், 2010, ஏப்பிறல் 05 ஆந் திகதியன்று உள்ளவாறாக ஹற்றன் நஷனல் வங்கி பீ.எல்.சி தாபனத்திற்கு சொல்லப்பட்ட முறிகள் மீது ஐம்பத்தைந்து இலட்சத்து ஐம்பத்துமூவாயிரத்து நாநூற்று பதின்நான்கு ரூபா முப்பத்தேழு சதம் (ரூ. 55,53,414.37) கொண்ட பணத்தொகை ஒன்று தற்போது வருமதியாகவும் சேர்மதியாகவும் உள்ளதாலும், அத்துடன் ஹற்றன் நஷனல் வங்கி பீ.எல்.சீ. பணிப்பாளர்கள் சபையானது 1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிகளினால் வழங்கப்பட்ட கடன்கள் அறவிடப்படல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தினால் அதற்கு உரித்தாக்கப்பட்ட தத்துவங்களின் கீழ் இதற்கான அட்டவணையில் முழுமையாக விபரிக்கப்பட்டதும் சொல்லப்பட்ட 1167, 652, 964, 1514, 1848 மற்றும் 3002 ஆம் இலக்க முறிகள் மூலம் ஹற்றன் நஷனல் வங்கி பீ.எல்.சீ. தாபனத்திற்கு ஈடுவைக்கப்பட்டதுமான ஆதனமும் வளவுகளும் சொல்லப்பட்ட ரூபா 55,53,414.37 பணத்தொகையை 2010, ஏப்பிறல் 06 ஆந் திகதியில் இருந்து விற்பனை நாள் வரை, அதன் மீதான மேலும் வட்டியுடனும், விளம்பரச் செலவுகள் மற்றும் கூறப்பட்ட வேறு இறுப்பனவுகள் ஆகியவற்றோடும் சேர்த்து (பெறப்பட்ட கொடுப்பனவுகள் எவையும் இருந்தால் அவற்றைக் கழித்து) அறவிடுவதற்காக கொழும்பு உரிமம் பெற்ற ஏல விற்பனையாளர் டலஸ் கெலாட்டினால் பகிரங்க ஏலம் மூலம் விற்பனை செய்யப்படுதல் வேண்டும் என இத்தால் தீர்மானிக்கப்படுகின்றது.''

### அட்டவணை

மேல் மாகாணம், கொழும்பு மாவட்டம், மற்றும் மாநகர சபைக்கு உட்பட்ட கொட்டாஞ்சேனை கிழக்கு, பிரிவு இலக்கம் 7 இன் கொட்டாஞ்சேனையில் உள்ள மேபீல்ட் ஒழுங்கையின் 127/4 வரிமதிப்பீட்டிலக்கத்தைக் கொண்டுள்ள நுககஹாகும்புர மற்றும் மடன்கஹாக்கும்புர என அழைக்கப்படும் காணியுடனான எல்லாம், உரிமம் பெற்ற நிலஅளவையாளர் எம். பி. டீ. சில்வாவினால் தயாரிக்கப்பட்ட 12.10.1953 ஆந் திகதியிடப்பட்ட 8305 ஆம் இலக்க வரைபடத்தில் விபரமாக விளக்கப்பட்டுள்ள காணித்துண்டு டி என அடையாளம் இடப்பட்ட அப்பிரிக்கப்பட்ட மற்றும் வரையறுக்கப்பட்ட பகிரப்பட்ட காணியின் எல்லைகள் - வடகிழக்கு : காணித்துண்டு ஈ ; கிழக்கு : வீதிக்கான ஒதுக்கீடு ; தென்மேற்கு : காணித்துண்டு சி ; வடமேற்கு : அதே காணியின் ஒரு பகுதி, ரி. பெமியனு பர்ணாண்டோவின் காணித்துண்டு சி அத்துடன், கொழும்பு மாவட்ட காணிப் பதிவகத்தில் ஏ 759/292 என்ற தலைப்பின் கீழ் பதிவு செய்யப்பட்ட எட்டு தசம் இரண்டு எட்டு பேர்ச்சஸ்கள் (0ஏ. 0றூ. 8.28பே.) விஸ்தீரணம் கொண்டதுமான ஆதனம்.

பணிப்பாளர் சபையின் கட்டளைப்படி,

இந்திராணி குணசேகர,
பி.பொ.மு (சட்டம்) /சபைச் செயலாளர்.

8-154/5

## ஹற்றன் நஷனல் வங்கி பீ.எல்.சீ.

(ஹற்றன் நஷனல் வங்கி லிமிட்டெட் என முன்பு அறியப்பட்டது)

*1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிகளினால் வழங்கப்பட்ட கடன்கள் அறவிடப்படல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 04 ஆம் பிரிவின் கீழ் ஹற்றன் நஷனல் வங்கி பீ. எல். சீ. பணிப்பாளர்கள் சபையினால் நிறைவேற்றப்பட்ட தீர்மானம்*

(செட்டியார் கிளை) - முத்துக்குட்டி குபேரலிங்கம்

ஹற்றன் நஷனல் வங்கி பீ. எல். சீ. பணிப்பாளர்கள் சபையினால், 2010 ஆம் ஆண்டு யூலை மாதம் 01 ஆந் திகதியன்று நடத்தப்பட்ட கூட்டம் ஒன்றில் விசேடமாகவும், ஏகமனதாகவும் எடுக்கப்பட்ட தீர்மானம்-

''முத்துக்குட்டி குபேரலிங்கம் கடப்பாடு உடையவராக, ஹற்றன் நஷனல் வங்கி பீ.எல்.சி சார்பில் கொழும்பு பிரசித்த நொத்தாரிசு எஸ். ஆர். பெய்ஸ்சினால் அத்தாட்சிப்படுத்தப்பட்ட 2009, யூன் 25 ஆந் திகதியிடப்பட்ட 657 ஆம் இலக்க முறி மீதான வருமதியான கொடுப்பனவில் தவணை தவறியுள்ளார். ஆதலாலும், 2010, ஏக்கர் 05 ஆந் திகதியன்று உள்ளவாறாக ஹற்றன் நஷனல் வங்கி பீ.எல்.சி தாபனத்திற்கு சொல்லப்பட்ட முறி மீது எழுபத்தேழு இலட்சத்து எழுபத்தெட்டாயிரத்து அறுநூற்று எட்டு ரூபா பதின்நான்கு சதம் (ரூ. 77,78,608.14) கொண்ட பணத்தொகை ஒன்று தற்போது வருமதியாகவும் சேர்மதியாகவும் உள்ளதாலும், அத்துடன் ஹற்றன் நஷனல் வங்கி பீ.எல்.சீ. பணிப்பாளர்கள் சபையானது 1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிகளினால் வழங்கப்பட்ட கடன்கள் அறவிடப்படல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தினால் அதற்கு உரித்தாக்கப்பட்ட தத்துவங்களின் கீழ் இதற்கான அட்டவணையில் முழுமையாக விபரிக்கப்பட்டதும் சொல்லப்பட்ட 657 ஆம் இலக்க முறி மூலம் ஹற்றன் நஷனல் வங்கி பீ.எல்.சீ. தாபனத்திற்கு ஈடுவைக்கப்பட்டதுமான ஆதனமும் வளவுகளும் சொல்லப்பட்ட ரூபா 77,78,608.14 பணத்தொகையை 2010, ஏப்பிறல் 06 ஆந் திகதியில் இருந்து விற்பனை நாள் வரை, அதன் மீதான மேலும் வட்டியுடனும், விளம்பரச் செலவுகள் மற்றும் கூறப்பட்ட வேறு இறுப்பனவுகள் ஆகியவற்றோடும் சேர்த்து (பெறப்பட்ட கொடுப்பனவுகள் எவையும் இருந்தால் அவற்றைக் கழித்து) அறவிடுவதற்காக கொழும்பு உரிமம் பெற்ற ஏல விற்பனையாளர் டலஸ் கெலாட்டினால் பகிரங்க ஏலம் மூலம் விற்பனை செய்யப்படுதல் வேண்டும் என இத்தால் தீர்மானிக்கப்படுகின்றது.''

### அட்டவணை

மேல் மாகாணம், கம்பஹா மாவட்டத்தின் (ஆனால் கொழும்பு பதிவுப் பிரதேசத்திற்கு உட்பட்டது) அளுத்குறு கோறளை தெற்கின் அத்திக்காரி பற்றுவின் வத்தளை - மாபோல நகர சபை எல்லைக்கு உட்பட்ட பிரிவு 4 இன் தெலகபத கிராமத்தில் உள்ள தெலகபத மாவத்தையின் 103/13டி வரிமதிப்பீட்டிலக்கத்தைக் கொண்டுள்ள கொரககஹாகும்புர என அழைக்கப்படும் காணியுடனான கட்டடங்கள் மற்றும் அத்துடனான எல்லாம், உரிமம் பெற்ற நிலஅளவையாளர் எச். டொனால்ட்டினால் தயாரிக்கப்பட்ட 1989, சனவரி 28 ஆந் திகதியிடப்பட்ட 364 ஆம் இலக்க வரைபடத்தில் விபரமாக விளக்கப்பட்டுள்ள காணித்துண்டு 2ஏ என அடையாளம் இடப்பட்ட அப்பிரிக்கப்பட்ட மற்றும் வரையறுக்கப்பட்ட பகிரப்பட்ட காணியின் எல்லைகள் - வடக்கு : அதே காணியின் மிகுதியான பகுதி தற்போது பி. ஆரியதாசவிற்கு சொந்தமானது ; கிழக்கு : கொரகஹாகும்புர

மறுபெயர் பிற்றவெல, தற்போது சியரட்ட முதலாளிக்கு சொந்தமானது ; தெற்கு : 103/4, வரிமதிப்பீட்டிலக்கத்தைக் கொண்ட காணித்துண்டு 2பி, தற்போது ரி. எச். இனோஹாமிக்குச் சொந்தமானது ; மேற்கு : காணித்துண்டு 2சி (10 அடி அகலமான வீதி) அத்துடன் சொல்லப்பட்ட 364 ஆம் இலக்க வரைடத்திற்கு அமைவானதும், கொழும்பு மாவட்ட காணிப் பதிவகத்தில் பி 983/145 என்ற தலைப்பின் கீழ் பதிவு செய்யப்பட்ட பன்னிரண்டு பேர்ச்சஸ்கள் (0ஏ. 0றூ. 12பே.) விஸ்தீரணம் கொண்டதுமான ஆதனம்.

முன் சொல்லப்பட்ட 657 ஆம் இலக்க அடமான முறியின் இரண்டாம் அட்டவணையில் மேலதிகமாக விபரிக்கப்பட்டதற்கு அமைவான பாதை உரிமையுடன் சேர்த்து.

பணிப்பாளர் சபையின் கட்டளைப்படி,

இந்திராணி குணசேகர,
பி.பொ.மு (சட்டம்) /சபைச் செயலாளர்.

8-154/6

**அறிவித்தல்களுக்கும் விளம்பரங்களுக்குமுரிய புதிய விகிதங்கள்**
**2009 சனவரி 01 ஆந் திகதி தொடங்கி அமுலுக்கு வந்தது**
**"இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை"**
**(வெள்ளிக்கிழமை தோறும் வெளியிடப்படுவது.)**

1. பிரசுரிக்கப்படும் சகல அறிவித்தல்களுக்கும் விளம்பரங்களுக்கும் விளம்பரதாரர்களே பொறுப்பாளராவார்.

2. தனிப்பட்ட விளம்பரதாரர்களின் அறிவித்தல்களும், விளம்பரங்களும் உரிய முழுப் பணத்துடன் **அரசாங்க அழுத்தகர், அரசாங்க அச்சுத் திணைக்களம், கொழும்பு 8** அவர்களுக்கு நேரில் அல்லது தபால் மூலம் சேர்க்கப்படுதல் வேண்டும்.

3. அலுவலக நேரம் மு. ப. 8.30 மணி முதல் பி. ப. 4.15 மணி வரையாகும்.

4. பணம் கொடுக்கல் வாங்கல் மு. ப. 9.00 மணி முதல் பி. ப. 3.00 மணிவரை நடைபெறும்.

5. **சகல அறிவித்தல்களுக்கும் விளம்பரங்களுக்கும் முற்பணம் அனுப்பப்படுதல் வேண்டும்**. தபால் மூலம் அனுப்பப்படும் அறிவித்தல்கள், விளம்பரங்கள் ஆகியவைகளுடன் அரசாங்க அழுத்தகரின் பெயருக்கு எழுதப்பட்ட மணி ஓடர் அல்லது போஸ்ரல் ஓடர் அல்லது காசோலை அனுப்பப்படல் வேண்டும்.

6. **நகலைக் கடதாசியின் ஒரு பக்கத்தில் மாத்திரம் ரைப் அடித்தல்** பிழைகளையும் காலதாமதத்தையும் தவிர்க்க ஏதுவாகும். கையெழுத்துப் பிரதி எதுவும் ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது.

7. **கையொப்பங்களின் கீழ் அப்பெயர்கள் உறுப்பான எழுத்தில் திருப்பி எழுதப்படல் வேண்டும்.**

8. வியாபார விளம்பரங்களும் பெயர் மாற்றம் பற்றிய விளம்பரங்களும் பிரசுரத்துக்கு ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது.

9. நியாயஸ்தலத்தின் கட்டளையில் கொடுக்கப்பட வேண்டிய விளம்பரங்கள் 'சுப்றீம் கோட்' புறொக்டரால் கையொப்பமிடப்பட்டு அல்லது கையொப்பம் அத்தாட்சிப்படுத்தப்பட்டு அனுப்பாவிடின் பிரசுரிக்கப்பட மாட்டா.

10. அறிவித்தல்களுக்கும் விளம்பரங்களுக்கும் அங்கீகரிக்கப்பட்ட கிரய விகிதங்கள் 2010 ஆம் ஆண்டு சனவரி மாதம் 01 ஆந் திகதியிலிருந்து பின்வருமாறு :-

| | ரூபா | ச. |
|---|---|---|
| ஒரு அங்குலம் அல்லது அதற்குக் குறைய | 137 | 00 |
| மேலதிகமான ஒவ்வொரு அங்குலமும் அல்லது அதன் பகுதிக்கும் | 137 | 00 |
| ஒரு பத்தி அல்லது வர்த்தமானியின் அரை பக்கம் | 1,300 | 00 |
| இரு பத்திகள் அல்லது வர்த்தமானியின் ஒரு பக்கம் | 2,300 | 00 |

ஒவ்வொரு அங்குலத்தின் பகுதிக்கும் முழு அங்குலத்தின் கிரயம் செலுத்தப்படல் வேண்டும்.

11. **வெள்ளிக்கிழமை தோறும் இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானி** வெளியிடப்படும். அரசாங்க விடுமுறை இடையிடின் வெளியீட்டு நாள் மாற்றப்படும்.

12. **ஒவ்வொரு மாதமும் முதற்கிழமை வர்த்தமானியின் ஒவ்வொரு பகுதி இறுதியிலும் கொடுக்கப்பட்டுள்ள அட்டவணையின் பிரகாரம் "அரசாங்க அழுத்தகர், அரசாங்க அச்சுத் திணைக்களம், கொழும்பு 8" அவர்கட்கு சகல அறிவித்தல்களும் விளம்பரங்களும் வந்துசேர வேண்டும்.**

13. **2010 சனவரி 01 ஆந் திகதியிலிருந்து மீளவாய்ந்த புதிய சந்தா விபரம் :-**

| இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானி (வருடத்திற்கு) | முழு வருடத் திற்குமான கட்டணம் ரூபா ச. | தபால் செலவு ரூபா ச. |
|---|---|---|
| I வது பகுதி : | | |
| I வதுதொகுதி | 2,080.00 | 3,120.00 |
| II வது தொகுதி (விளம்பரம், வெற்றிடங்கள், கேள்விகள், பரீட்சைகள் ஆகியன) | 1,300.00 | 3,120.00 |
| III வது தொகுதி | 780.00 | 3,120.00 |
| I வது பகுதி முழுவதும் (I, II, III தொகுதிகள் உட்பட) | 4,160.00 | 6,240.00 |
| II ஆவது பகுதி | 580.00 | 3,120.00 |
| III வது பகுதி | 405.00 | 3,120.00 |
| IV வது பகுதி (மாகாண சபைகள், உள்ளூராட்சி) | 890.00 | 2,400.00 |
| V வது பகுதி | 860.00 | 420.00 |
| VI வது பகுதி | 260.00 | 180.00 |
| அதிவிசேட வர்த்தமானி | 5,145.00 | 5,520.00 |

**முழு ஆண்டின் இறுதி வரைக்கும் பன்னிரண்டு மாதங்களுக்குக் குறையாத காலவெல்லைக்கே சந்தா ஏற்றுக்கொள்ளப்படும்.**

**தனிப்பிரதிகள் (இருப்பிலிருந்தால்) அவற்றின் விகிதங்கள்**

| | விலை ரூபா ச. | தபால் செலவு ரூபா ச. |
|---|---|---|
| I வது பகுதி : | | |
| I வது தொகுதி | 40.00 | 60.00 |
| II வது தொகுதி (விளம்பரம், வெற்றிடங்கள், கேள்விகள், பரீட்சைகள் ஆகியன) | 25.00 | 60.00 |
| III வது தொகுதி | 15.00 | 60.00 |
| I வது பகுதி (I, II, III தொகுதிகள் உட்பட) | 80.00 | 120.00 |
| II வது பகுதி | 12.00 | 60.00 |
| III வது பகுதி | 12.00 | 60.00 |
| IV வது பகுதி (மாகாண சபைகள், உள்ளூராட்சி) | 23.00 | 60.00 |
| V வது பகுதி | 123.00 | 60.00 |
| VI வது பகுதி | 87.00 | 60.00 |

**இவைகளில் எவையேனும் பெற விரும்புவோர் சரியான பணத்தொகையை "அதிபர், அரசாங்க பிரசுர நிலையம், இல. 132, மாயா அவெனியு, கிருளப்பனை, கொழும்பு 5" என்ற விலாசத்திற்கு அனுப்புதல் வேண்டும். சந்தாப்பணம் ஏற்பதற்கும் தனிப்பிரதிகள் விற்பனை செய்வதற்கும் இவரே முழுப் பொறுப்பாளியாவார்.**

# வர்த்தமானி வெளியீடு சம்பந்தமான முக்கிய அறிவித்தல்

*இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானி சாதாரணமாக வெள்ளிக்கிழமை தோறும் வெளியிடப்படும். வெள்ளிக்கிழமை அரசாங்க விடுமுறை நாளாக இருப்பின் அதற்கு முந்திய வேலை நாளில் வர்த்தமானி வெளியிடப்படும். வர்த்தமானிக்குரிய அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதி நாளும் அந்த வாரத்தில் ஏற்படும் அரசாங்க விடுமுறை நாட்களைப் பொறுத்து மாற்றப்படும்.*

*இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானி பிரசுரமாகும் திகதிகளும் அவ்வவ் வர்த்தமானிகளுக்குரிய அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதி நாளும், நேரமும் கீழ் குறிப்பிடப்பட்டிருக்கும் அட்டவணையில் காட்டப்பட்டுள்ளன. கீழே குறிப்பிடப்பட்டுள்ள நேரங்களுக்குப் பிந்திக் கிடைக்கும் அறிவித்தல்கள் எல்லாம் பிரசுரிக்கப்படமாட்டா. இனி வரப்போகும் இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியில் பிரசுரிக்க விரும்பின் அதற்குரிய மாற்றங்கள் செய்து திருப்பி அனுப்புதற் பொருட்டு விலாசதாரருக்கு தபால் மூலம் அனுப்பி வைக்கப்படும். இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியில் குறிப்பிடப்பட்ட திகதிகளிலே அறிவித்தல்களைப் பிரசுரிக்க விரும்புவோர் அறிவித்தல்கள் தபால் மூலம் அரசாங்க அச்சுத் திணைக்களத்துக்கு வந்துசேரப் போதிய அவகாசம் கொடுப்பது எல்லோருடைய நன்மைக்கும் உகந்ததாய் இருக்கும்.*

*இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானிக்குரிய சந்தாப் பணங்கள் யாவும்* ***அரசாங்க பிரசுராலய அதிபர், இல. 132, மாயா அவெனியு, கிருளப்பனை, கொழும்பு 5*** *என்ற விலாசத்துக்கு நேரடியாகச் சேர்ப்பிக்கப்பட வேண்டும்.* ***அரசாங்க அழுத்தகர் வர்த்தமானிக்குரிய சந்தாப் பணங்கள் எதுவும் ஏற்றுக்கொள்ளமாட்டார்.***

***முக்கிய கவனிப்பு.-*** *இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானி விளம்பரங்களுக்கான பணங்கள் யாவும்* ***அரசாங்க அழுத்தகரினால் ஏற்றுக்கொள்ளப்படும்*** *என்பதையும்,* ***அரசாங்க பிரசுராலய அதிபரால் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது*** *என்பதையும் கவனத்திற் கொள்க.*

***அட்டவணை - 2010***

| மாதம் | | வெளியீட்டு நாள் | | | அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளும் கடைசித் திகதியும் நேரமும் | | |
|---|---|---|---|---|---|---|---|
| **ஒகத்து** | .. | வெள்ளி | 06.08.2010 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 23.07.2010 |
| | | வெள்ளி | 13.08.2010 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 30.07.2010 |
| | | வெள்ளி | 20.08.2010 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 06.08.2010 |
| | | வெள்ளி | 27.08.2010 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 13.08.2010 |
| **செத்தெம்பர்** | .. | வெள்ளி | 03.09.2010 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 20.08.2010 |
| | | வியாழன் | 09.09.2010 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 27.08.2010 |
| | | வெள்ளி | 17.09.2010 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 03.09.2010 |
| | | வெள்ளி | 24.09.2010 | .. | நண்பகல் 12 | வியாழன் | 09.09.2010 |
| **ஒற்றோபர்** | .. | வெள்ளி | 01.10.2010 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 17.09.2010 |
| | | வெள்ளி | 08.10.2010 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 24.09.2010 |
| | | வெள்ளி | 15.10.2010 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 01.10.2010 |
| | | வியாழன் | 21.10.2010 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 08.10.2010 |
| | | வெள்ளி | 29.10.2010 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 15.10.2010 |

**லக்ஷ்மன் குணவர்தன,**
*அரசாங்க அழுத்தகர்.*

*அரசாங்க அச்சுத் திணைக்களம்,*
*கொழும்பு 8,*
*2010 ஆம் ஆண்டு சனவரி மாதம் 01 ஆந் திகதி.*

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்தில் பதிப்பிக்கப்பெற்றது.